

ரா.வேங்கடசாமி

விடை தெரியாத வினாக்கள்

விடை தெரியாத வினாக்கள்

(சரித்திர சம்பவங்களில் கண்ட மர்மங்கள்)

ரா. வேங்கடசாமி

சங்கரசாமி பதிப்பகம்
108, ரகுராம் காலனி,
காந்தி சாலை,
சேலம் - 636 007.
☎ : 0427 - 2312426

நூல் விவரம்

நூலின் பெயர்	:	விடை தெரியாத வினாக்கள் (சரித்திர சம்பவங்களில் கண்ட மர்மங்கள்)
ஆசிரியர்	:	ரா. வேங்கடசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	வரலாற்றுச் சம்பவங்கள்
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர் 2003
பதிப்பு விவரம்	:	முதற்பதிப்பு
உரிமை	:	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	:	14.7 மேப் லித்தோ
நூலின் அளவு	:	டெம்மி
அச்சு எழுத்து அளவு	:	12 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	:	144
மேலட்டை அமைப்பு	:	சோஃபியா
வெளியீடு	:	சங்கரசாயி பதிப்பகம் 108, ரகுராம் காலனி, காந்தி சாலை, சேலம் - 636 007. போன் : 0427 2312426
ஒளி அச்சு	:	பிரில்லியன்ட் கிராபிக்ஸ், தொலைபேசி: 044 - 22452912
அச்சிட்டோர்	:	அய்யனார் ஆப்செட், தொலைபேசி: 044 - 23630743
நூலின் விலை	:	ரூ. 45

47-4

முன்னுரை

விடைகள் இல்லாத கேள்விகள் இருக்க முடியாது என்பார்கள். கணக்கில் இது சரியாக இருக்கலாம். ஆனால் சில சம்பவங்களில், காட்சிகளில் எழும் வினாக்களுக்கு சரியான விடைகள் கிடைக்காமல் போகலாம்.

சரித்திர சம்பவங்கள் பல நடந்துள்ளன எனினும் அவற்றில் பலவற்றுக்கு இது ஏன் இப்படி நடந்தது? காரணம் என்ன? என்று பல ஆராய்ச்சியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் இன்னமும் கிடைக்கவில்லை.

அதனால்தான் இந்தக் கட்டுரைத் தொகுப்பிற்கு இந்தப் பெயர் அமைந்தது.

ருசிகரமான சம்பவங்கள் - அதன் பின்னணி என்ன? காரணம் தெரியாது.

முடி தரிக்க வேண்டிய இளவரசன், ஜெர்மனியில் கொல்லப்படுகிறான். எதற்காக?

உலக மகாகவி ஷேக்ஸ்பியர் - உண்மையில் அவர்தான் சாகா வரம் பெற்ற அந்த நாடகங்களை எழுதினாரா?

1888ஆம் ஆண்டில் தேம்ஸ் நதிக்கரையில் நடு இரவில் நடந்த பல கொலைகளுக்கு 'ஜாக் தி ரிப்பர்'தான் காரணம் என்றார்கள். உண்மையில் அவன் யார்? எதற்காக இப்படிப் பலரைக் கொன்றான்? என்கிற கேள்விகளுக்கு இன்று வரை விடை கிடைக்கவில்லை.

ஜெர்மனியில் அரசாங்க அலுவலகம் நடு இரவில் கொளுத்தப்பட்டது. இதற்கு கம்யூனிஸ்ட்கள்தான் காரணம் என்றார் ஹிட்லர். உண்மையில் நடந்தது என்ன? பதில் கிடைக்கவில்லை.

ரா. வேங்கடசாமி

பிரான்ஸின் பதினான்காம் லூயி, ஏன் அந்த முகம் தெரியாத கைதியைக் கண்டு பயந்தான்? அந்தச் சம்பவம்தான் அலெக்ஸாண்டர் டுமாஸ் எழுதிய மாபெரும் நாவலுக்கு அஸ்திவாரம் என்கிறார்கள். அது உண்மையா?

நாவலின் பெயர் 'மேன் இன் தி அயர்ன் மாஸ்க்' என்பதாகும்.

இத்தாலியில் கசாப்புக் கடைக்காரனின் மகன் ஒருவன் மன்னனானது எப்படி?

'டிராகுலா' என்னும் பேய் மனிதன் உண்மையில் இருந்தானா?

இப்படி எழுந்த பல கேள்விகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடத்தியும் இன்னும் விடை காண முடியாமல் தவிக்கிறார்கள்.

பழையவர் விட்ட இடத்திலிருந்து, புதியவர் தொடருகிறார். அவர் ஒரளவுக்கு முன்னேற்றம் கண்டாலும், ஒரிடத்தில் அவரும் மேலே போக முடியாமல் நின்று விடுகிறார்.

இதைப் போன்ற பல சம்பவங்கள் ஐரோப்பிய சரித்திரத்தில் நிறைய உள்ளன. அவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துதான், இந்நூலில் மாலையாக்கி மகிழ்ந்திருக்கிறேன். இன்னும் பல சம்பவங்கள் விட்டுப் போயிருக்கின்றன.

அவற்றைத் தொடர்ந்து எழுத உள்ளேன்.

படித்து மகிழுங்கள். நேசக் கரம் நீட்டுங்கள்.

அன்பன்,

ரா. வேங்கடசாமி

47-4

விடை தெரியாத வினாக்கள்

ஜார் மன்னரின் முடிவு?

1914ஆம் ஆண்டு தன்னுடைய தோழமை நாடுகளான பிரிட்டன், பிரான்சுடன், ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி நாடுகளுடன் ஏற்பட்ட யுத்தத்தில் கலந்து கொண்ட நாளிலிருந்து ரஷ்யாவுக்குக் கெட்ட காலம் தொடங்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அதுவும் ரோமனாவ் அரச பாரம்பரியத்திற்கு. 1917ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆயிரக்கணக்கானோர் பஞ்சம், பட்டினியினால் மரணம் அடைந்தனர். பீட்ரோ கிராட் நகரத்தில் மக்கள் உணவுக்காகப் போராட்டம் நடத்தினர். மாணவர்கள், தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவே பெரும் கலவரம் மூண்டது. அதை ஒடுக்க இராணுவம் தேவைப் பட்டது. கலவரம் அடங்குவதற்குப் பதிலாக வேகமாகப் பல இடங்களுக்குப் பரவியது.

யுத்த முனையில் ஒரு பகுதியில் தலைமை தாங்கி போரை நடத்திக் கொண்டிருந்த ஜார் மன்னன் நிக்கோலஸ் II நாட்டுக்கு வரவழைக்கப்பட்டான். அவன் முன்னே வைக்கப்பட்ட ஒரே வேண்டுகோள், அவன் உடனே பதவியிலிருந்து விலக வேண்டும். 1613ஆம் ஆண்டிலிருந்து பரம்பரை பரம்பரையாக தாங்கள் ஆட்சி புரிந்த இந்த நாட்டின் உயர் பதவியிலிருந்து தானும் தன்னுடைய பன்னிரண்டே வயதான இளவரசனும் பதவி விலகுவதாக நிக்கோலஸ் அறிவித்தான். தனது தளபதியிடம் உடனே பதவியை ஒப்படைத்தான். இது எல்லாருக்கும் வியப்பை அளித்தது. ஆனால் தனது சொந்த டைரியில் ஜார் மன்னன் பின் வருமாறு குறிப்பிட்டிருந்தான்.

''என்னைச் சுற்றிலும், நம்பிக்கைத் துரோகிகளும், கோழைகளும் பதவியைப் பறிப்பவர்களும்தான் இருக்கிறார்கள்.''

பதவியைப் பறித்தவர்கள் முதல் வேலையாக மன்னரையும் அவன் குடும்பத்தினரையும் சிறையில் தள்ளி விட்டார்கள். அலெக்ஸாண்டர் கெரன்ஸ்கி என்னும் சர்வாதிகாரியின் பொறுப்பில்தான் நாடு ஒப்படைக்கப்பட்டது. மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

ஜார் நிக்கோலஸ் மட்டும் தனியாகக் காவலில் வைக்கப்படவில்லை. அவனுடன் அவன் மனைவி ஜாரினா (அலெக்ஸாண்டரா), இளவரசன் அலெக்ஸி, மன்னனின் நான்கு புதல்விகளும் இருந்தனர். 22 வயதிலிருந்து 16 வரை வரை இருந்த அந்த நான்கு புதல்விகளும் வறுமையை எப்போதும் அறியாதவர்கள்.

'தாரஸ்கோயி சிலோ' என்கிற இடத்தில் தனிமையில் வைக்கப்பட்டிருந்த ஜார் மன்னனும் அவன் குடும்பமும் பட்ட துன்பங்களை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. மன்னன் பதவியை இழந்த ஜார், மரம் வெட்டினான்; செடிகளை நட்டான். படகில் குழந்தைகளை அழைத்துக் கொண்டு போனான். மாலையில் புத்தகங்களை, தன் குடும்பத்தினருக்காகப் படித்தான். 'மன்னனாக எப்படி இருந்தாலும் ஜாருக்குக் குடும்பப் பாசம் மிகவும் அதிகம். அவனது வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம்' என்கிறார்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்கள்.

ரஷ்ய மக்களுக்குத் தொடக்கத்திலிருந்தே ஒரு விஷயம் மிக நன்றாகவே தெரியும். அலெக்ஸாண்ட்ரா என்னும் அவனுடைய இராணிதான், அவனை அடக்கி ஆண்டாள் என்கிற விஷயம். ஜெர்மன் நாட்டு இளவரசியான அவளை ஜார் மன்னன் 1894ஆம் ஆண்டில் மணந்தான்.

நான்கு பெண்களுக்குப் பிறகு பிறந்த ஆண் வாரிசு என்பதால் அரச தம்பதி மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் அந்த மகனின் ஒரு கோளாறு எங்காவது காயம் பட்டால் நிற்காமல் ரத்தம் வந்து கொண்டே இருக்கும். இதனால் அவன் எப்போதும்

பலவீனமாக இருந்தான். அவனை மிகவும் பத்திரமாகப் பாதுகாப்பது அவர்களது கடமையாயிற்று.

1907ஆம் ஆண்டின் போது அரச தம்பதி போலிச் சாமியார் ரஸ்புடீனின் வலையில் வீழ்ந்து விட்டனர். தங்களது மகன் அலெக்ஸியை ரஸ்புடீன் குணப்படுத்திவிடுவான் என்று நம்பினார்கள். தம்பதி அவனது மாய வலைக்குள் சிக்கி, நாட்டு மக்களைக் கவனிக்காமல் விடவே, ரஷ்யாவின் பெருங்குடி மக்கள் ஒன்று சேர்ந்து 1916ஆம் ஆண்டில் டிசம்பர் 31ஆம் தேதி ரஸ்புடீனைக் கொன்று விட்டார்கள். இது பதவி இழப்பதற்கு முன்பு அரச தம்பதிக்குக் கிடைத்த முதல் மரண அடி.

நாட்டை பரிபாலித்த கெரன்ஸ்கிக்குப் புதிய தலைவலி. இடது சாரியினர், போல்ஸ்விக்குகளுடன் சேர்ந்து எப்படியாவது மீண்டும் ஜார் மன்னனை அரியணை ஏற்ற வேண்டும் என்று முயன்றார்கள். அதனால் அரச குடும்பத்தாரை சைபீரியாவின் ஒரு நகரமான 'டோபோல்ஸ்க்' என்னும் இடத்திற்கு மாற்றி விட்டான். அது 1000 மைல்களுக்கு அப்பால் ஊரல் மலைத் தொடர்ச்சியின் அருகில் இருந்தது. 40 வேலையாட்களுடன் தன் குடும்பத் தாருடன் அந்த இடத்திற்குப் போய்ச் சேர ஆறு நாள்கள் ஆயின, ஜார் மன்னனுக்கு. புறப்படுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பு தான் தன் மகனின் பிறந்த நாளைக் கொண்டாடினான் மன்னன்.

மன்னர் குடும்பம் அங்கிருந்து அகற்றப்பட்டதும், ரஷ்யாவில் புதுப் புரட்சி ஏற்பட்டது. கெரன்ஸ்கி தூக்கி எறியப்பட்டான். இடது சாரியினரும், போல்ஸ்விக்குகளும் நாட்டைக் கைப்பற்றினர். ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி நாடுகளுடன் தனித்தனியாக சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். ஒப்பந்தம் 1918ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

ரஷ்யாவின் புதிய தலைவராக பொறுப்பேற்றார் நிக்கோலாய் லெனின். அவருக்கு அப்போது இருந்த ஒரே தலைவலி பதவி பறிக்கப்பட்ட மன்னனையும், அவன் குடும்பத்தினரையும் என்ன செய்வது என்பதுதான்.

1918ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜார் மன்னருக்கு வேண்டியவர்களால் திரட்டப்பட்ட படையொன்று, ஜார் மன்னரும் குடும்பமும் இருக்கும் இடத்தை நோக்கி முன்னேற, அவர்களை முதலில் ஏக்டெரின்பர்க் என்னும் நகருக்கு இடம் மாற்றினார் லெனின். இரண்டு மாடிக் கட்டடமாக இருந்த அந்தப் பெரிய வீடு ஒரு வியாபாரிக்குச் சொந்தமானது. கீழே இருந்த இடம் சமையல், ஸ்டோர்ஸுக்காக ஒதுக்கப்பட, மேலே இருந்த தளம் குடியிருக்கும் வீட்டிற்காகத் தயார் செய்யப்பட்டது. மன்னருக்காக ஒரு வைத்தியர், சில வேலைக்காரர்கள் மட்டும் அந்த வீட்டில் அனுமதிக்கப்பட்டனர். அந்த வீட்டை விட்டு வெளியேற முடியாது என்பது மட்டுமன்றி வெளியில் பார்க்கவும் முடியாத அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வெளி உலகத் தொடர்பு என்பதே இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. டாக்டர் யூஜின் பாட்கின் மன்னரின் உடல் நலத்தைக் கவனித்துக் கொண்டார்.

உள்ளூர் போல்ஸ்விக்குகள் மட்டுமன்றி தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் போன்றவர்களும் அந்த வீட்டைக் கண்காணிப்பதில் முக்கிய பங்கு வகித்தனர். இவர்களையெல்லாம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த 'அலெக்ஸாண்டர் அடிலேவ்' என்னும் குடிகாரன் 'நிக்கோலஸ் என்னும் ரத்தக்காட்டேரி' என்று ஜார் மன்னனை வர்ணிப்பான். காவலுக்கு இருந்தவர்கள் யாவரும் இவன் சொற்படியே நடந்து கொண்டார்கள்.

அரச குடும்பமும், மற்ற வேலைக்காரர்களும் ஒன்றாக அமர்ந்து இரண்டு வேளைதான் உணவருந்தினார்கள். இந்த உணவில் பங்கு போட்டுக் கொள்ள காவலர்களும் சில நேரங்களில் வந்துவிடுவதுண்டு.

அரசிளங்குமரிகள் கழிவறைக்குப் போவதென்றாலும் காவலாளிகள் உடன் சென்றார்கள். குளியலறைச் சுவர்களில் அவர்களுடைய தாயாரையும், ரஸ்புடினையும் இணைத்து மோசமான சித்திரங்களை வரைந்து வைத்திருந்தனர். இளவரசன் அலெக்ஸி மனத்தளவில் மட்டுமன்றி உடலளவிலும் மிகவும்

மோசமாக இருந்தான். அவனை சக்கர நாற்காலியில் உட்கார வைத்து, புழுதி படர்ந்த சாலைகள் வழியாக காற்று வாங்க காவலாளிகள் அழைத்துச் செல்வார்கள். இளவரசன் எதைக் கேட்டாலும் தர மாட்டார்கள். தன் ஐம்பதாவது வயதிலேயே ஜார் மன்னன் முதுமைக் கோலத்தை அடைந்து விட்டான். தலைமுடி நரைக்கத் தொடங்கி விட்டது. காக்கி யூனிபார்ம் அணிந்து கொள்ள மட்டும் மன்னனுக்கு அனுமதி. மகாராணியை, பேய் என்றும் பிசாசு என்றும் வர்ணித்த வண்ணம் இருப்பார்கள் காவலாளிகள். அவர்களை எதிர்த்து அவளால் என்ன செய்ய முடியும்?

ஜூலை மாத முற்பகுதியில் அடிலேவ் கமாண்டர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட, அதற்குப் பதிலாக பாக்காவ் யூரோவஸ்கி என்பவன் பதவி ஏற்றான். உள்ளூர் போல்ஸ்விக் கும்பலைச் சேர்ந்த அவன் ரகசியப் போலீஸ் பிரிவின் தலைவன்.

எல்லா மாறுதல்களையும் தனது டைரியில் பதிய வைத்த ஜார் மன்னன், ''இந்த மாறுதலினால் என்ன ஆகிவிடப் போகிறது?'' என்று ஒரு கேள்வியை எழுப்பியிருந்தான்.

புதிய தலைவன் யூரோவஸ்கிக்கு மாஸ்கோவிலிருந்து உத்தரவு வந்தது. ''பதவியை இழந்த ஜார் மன்னனை எக்காரணத்தைக் கொண்டும் எதிராளிகளிடம் உறவாட விட வேண்டாம்.''

எதனால் இந்தக் கட்டளை வந்தது?

மன்னனுக்கு ஆதரவாளர்களான 40,000 செக்கஸ்லோவேக்கியப் படை வீரர்களுடன் சேர்ந்து மெதுவாக மேற்குப் பக்கம் நகர்ந்தனர்.

ஏக்டெரின் பர்க் நகருக்கு வரும் முன்னால் இப்படி ஒரு நிகழ்வு நடந்ததால்தான் மன்னரை இங்கே கொண்டு வந்தனர். இங்கேயும் அதே படை துரத்திக் கொண்டு வருகிறது என்றால்? அதிபர் லெனின் சோம்பலாக இருக்கவில்லை. புதிய உத்தரவைப் பிறப்பித்தார்.

1918ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 16-17 தேதி நள்ளிரவில் யூரோவஸ்கி மன்னரின் குடும்பத்தை எழுப்பினான். அவர்களை புதிய ஆடைகளை அணிந்து கொள்ளச் சொன்னான். பிறகு எல்லாரையும் கட்டடத்தின் கீழ்ப்பகுதிக்கு வரவழைத்தான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏற்கெனவே நகருக்குள் நுழைந்து விட்ட வெள்ளையர்கள் தெருவில் பல இடங்களில் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று மன்னரிடம் பொய் சொன்னான். கீழே வந்தவர்கள் ஒரு பெரிய 'டிரக்' வண்டியில் ஏற்றப்பட்டனர். மன்னருக்கும், அலெக்ஸாண்ட்ராவுக்கும் மட்டும் நாற்காலிகள் போடப்பட்டன. அலெக்ஸியும் ஒரு பக்கமாக உட்கார வைக்கப்பட, மற்ற பெண்கள் நின்று கொண்டே இருந்தார்கள். வேலைக்காரர்களுக்கும் டாக்டருக்கும் அதே கதி தான். உள்ளூர் போல்ஸ்விக்குகள் குடும்பத்தை அழித்து விட வேண்டும் என்று கடுமையாக உத்தரவு பிறப்பித்து விட்டார்கள். அதனால் யூரோவஸ்கி தன் துப்பாக்கியால் முதலில் ஜார் மன்னரின் தலையில் சுட்டான். இவன் தொடங்கி வைத்தவுடன் மற்றவர்களும், தங்களுக்காக ஒதுக்கப்பட்ட நபர்கள் மீது குறி வைத்துச் சுட்டார்கள். துப்பாக்கி குண்டினால் இறக்காதவர்கள், துப்பாக்கியின் முனையில் இருந்த கத்தியினால் குத்தப் பட்டார்கள்.

'டிரக்'கில் கிடந்த அந்த உடல்கள், நகருக்கு வெளியே இருந்த ஒதுக்குப்புறமான ஓர் இடத்திற்குக் கொண்டு போகப்பட்டு, துண்டு துண்டுகளாகச் சிதைக்கப்பட்டன. தொடர்ந்து அவற்றின் மீது ஆசிட் ஊற்றப்பட்டு எரிக்கப்பட்டது.

ஜூலை 17ஆம் தேதி மாஸ்கோவிற்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டது. 'குடும்பமே இல்லாமல் செய்யப்பட்டு விட்டது. தலைவருக்கான அதே கதிதான் மற்றவர்களுக்கும். இடம் விட்டு இடம் மாறும்போது இறந்து விட்டார்கள் என்று வெளியில் சொல்லியாகி விட்டது' என்பதுதான் அந்த செய்தி.

அந்தக் கொடூரமான சம்பவம், பிறகு சரித்திரப் புத்தகங்களில் பதிவானாலும், இது வெள்ளையர்கள் நகரத்தைக் கைப்பற்றிய

போது கேட்டுத் தெரிந்து கொண்ட செய்திகள் என்றாலும், இது உண்மையா?

முதன் முதலாக இதை விவரமாக விசாரிக்க முனைந்தவருக்குக் கிடைத்த தகவலின்படி ஜூலை 16-17 இரவில் உண்மையில் ஜார் மன்னர் கொல்லப்பட்டார் என்றாலும், அவரது மனைவியும், மகனும், நான்கு பெண்களும் உயிருடன் விடப்பட்டார்கள் என்பது செய்தி. போல்ஸ்விக்குகளைக் கொலைகாரர்கள் என்று குற்றம் சாட்ட இந்த ஒரு சம்பவம் போதும் என்றாலும், 1919ஆம் ஆண்டு புதிதாக ஒரு விசாரணை தொடங்கப்பட்டது. ஒவ்வொருவரும் தங்கள் பணியில் கொலைகளைப் பற்றிச் சொல்வதைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு.

நிக்கோலஸ் சோகோலாவ் என்னும் நபர் புதிதாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டார். புரட்சிகரமாகப் பிரகாசிக்கும் ரஷ்யாவில் ஒரு மன்னரின் குடும்பமே காணாமல் போய்விட்டது என்பதை எளிதில் மறைத்து விட முடியாதே!

சோகோலாவ் தன் விசாரணையை மிகவும் மெதுவாகவும் அதே சமயத்தில் துல்லியமாகவும் விடாமல் நடத்தினார். அவர்கள் எரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட இடத்திற்கு வந்து அங்குலம் அங்குலமாகச் சோதனையிட்டபோது, சிறிய பூட்டு, வளைந்து போன 'ஹேர் பின்', இராஜ உடைகளில் வைத்துத் தைக்கப்பட்டிருந்த சிறு சிறு வைரக் கற்கள், வெட்டப்பட்டு ஆனால் எரியாத விரல் ஒன்று போன்றவை அங்கே கண்டு பிடிக்கப்பட்டன. விரல் மகாராணியினுடையது என்று சொல்லப் பட்டது.

ஆனால் அரசியலில் ஏற்பட்ட நிர்ப்பந்தத்தால் சோகோலாவ் நாட்டை விட்டு ஓடி சீனாவின் வழியாக ஐரோப்பாவை அடைந்தார். 1924ஆம் ஆண்டுவரை அவர் தனது கண்டுபிடிப்புகளைப் பற்றி வெளியே சொல்லவில்லை. ஆனால் வெளியிடாமல் இருந்தால் நாட்டிற்கு இவை தெரியாமலே போய்விடக் கூடும் அல்லவா?

போல்ஸ்விக்குகள், ஆறாண்டுகளுக்கு முன்பு நடத்திய கொடூரங்களைப் பற்றி அவர் வெளியிட்டார். இதை உலகம்,

உண்மையாக நடந்திருக்குமா என்று நம்புவதற்கு யோசித்தது. இப்படிக் கூட ஓர் அரச குடும்பத்தைப் பழிவாங்க முடியுமா என்பதே கேள்வி. ஆனால் 1921ஆம் ஆண்டு பால்பைகோவ் என்பவர் இந்தக் கொலைகள் நடந்தது உண்மைதான் என்று முதலில் உலகிற்குச் சொல்லி விட்டார்.

ஆனால், ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டு இந்தக் கொலைகளைப் பற்றிப் பலவிதமான விவாதங்கள் தொடர்ந்தன. எதிர்மறையான சாட்சியங்கள் பல கிடைத்ததாகச் சொல்லப்பட்டன. உதாரணத்திற்கு ஒரு சம்பவம். ஜார் மன்னரைக் கொலைச் செய்யப் போகும் தினத்திற்கு முன்பே மகாராணியும் அவளது பிள்ளைகளும் அங்கிருந்து வேறோர் இடத்திற்கு மாற்றப்பட்டார்கள். 1918ஆம் ஆண்டு போல்ஸ்விக்குகள், ஜெர்மன் நாட்டுடன் பேரம் பேசியதாக ஒரு செய்தி, ரஷ்யக் கைதிகளை விடுவித்தால் பதிலுக்கு ஜெர்மன் தேசத்துப் பெண்ணான அலெக்ஸாண்ட்ராவை அவளது நாட்டிற்கே திருப்பித் தருவது என்பதுதான் அந்தப் பேரம்.

இந்தக் கொலைகள் நடந்தபின் அந்த நகருக்கு முதன் முதலாக விஜயம் செய்தவர் சர் சார்லஸ் எலியட். இவர் சைபீரியாவில் இருந்த ஆங்கிலேயப் பிரதிநிதி. வெள்ளையர்களுடன் அவர் விவரமாகப் பேசியபின் ஒரு விஷயத்தைத் தனது மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தார். ஜாரின் மனைவியும், அவரது பிள்ளைகளும் ஜூலை 17ஆம் தேதி அந்த நகரிலிருந்து ரயிலில் பயணமாகி விட்டார்கள் என்பதுதான் அந்தச் செய்தி. இதை உறுதிப்படுத்துவது போல் மகாராணியின் சகோதரர் எர்னஸ்ட் பிரபு, ஸ்வீடனில் இருந்த தன் இன்னொரு சகோதரிக்கு, அலெக்ஸாண்டரா பத்திரமாக இருக்கிறாள் என்று செய்தி அனுப்பியிருந்தார். ரஷ்யாவில் இருந்த ஜெர்மானிய ரகசிய ஏஜென்ட் மூலம் அவருக்கு இந்தச் செய்தி கிடைத்ததாம்.

சோகோலாவ் வெளியிட்ட விவரமான அறிக்கைக்குப் பின்னால் மகாராணியும், அவளது செல்வங்களும் வெளி உலகத்தின் முன்னால் காட்சியளிக்காததால், அவர்களும்

கொலை செய்யப்பட்டிருப்பார்கள் என்கிற உண்மையை மெதுவாக ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள் போலிகள் என்று விரட்டியடிக்கப்பட்டனர்.

பல ஆண்டுகளுக்குப் பின், புதிதாக ஏதாவது செய்திகள் வரும் என்கிற நம்பிக்கை சுத்தமாக அற்றுப் போய் விட்டது. ஆனால் இரண்டு ஆங்கிலேயப் பத்திரிகையாளர்கள் 1970ஆம் ஆண்டு, சோகோலாவின் உண்மையான விசாரணை அறிக்கைகளைக் கண்டுபிடித்தனர். அந்தோணி சம்மர்ஸ், டாம் மாரிகோல்டு என்னும் அந்த இரண்டு பத்திரிகையாளர்கள், இதில் மிகவும் தீவிரமாக இறங்கி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

முக்கியமான சில சாட்சியங்களை ஒதுக்கியதோடு நில்லாமல், சில விஷயங்கள் குறித்து தவறான தகவல்களையும் சோகோலாவ் தந்திருக்கிறார் என்பதைக் கண்டனர்.

தனது முடிவுரையில் ஐந்து முக்கியமான விஷயங்களை அவர் வலியுறுத்தியிருந்தார்.

முதலாவதாக ஜூலை 17ஆம் தேதி மாஸ்கோவுக்கு அனுப்பிய ரகசியத் தந்தி. அதில் குடும்பம் முழுதும் இறந்து விட்டது என்பதுதான் செய்தி. ஆனால் அந்தத் தந்தி 1919ஆம் ஆண்டு ஜனவரி மாதம்தான் 'பைலில்' வைக்கப்பட்டது. அதாவது முதலில் விசாரணை செய்தவரை அனுப்பி விட்டு சோகோலாவ் பதவி ஏற்ற பிறகு இந்தச் செயல் நடந்திருக்கிறது. தாங்கள் நினைத்ததைச் சாதிக்க, இந்தப் போலியான தந்தி 'பைலில்' வைக்கப்பட்டதோ என்கிற கேள்விக்குப் பதிலில்லை.

இரண்டாவதாக கண்ணால் கண்ட சாட்சி ஒன்று. கொலைகள் நடந்தபிறகு அந்தக் காட்சியைப் பார்த்ததாகத் தெரிவித்த நபர் - ஒருவேளை அந்த நபர் கொலையாளிகளில் ஒருவராக இருக்கலாமா? தனக்குக் கிடைக்கப் போகும் தண்டனையைப் பற்றிக் கவலைப்படாமல் இந்த மனிதன் ஏன் வெள்ளையர்களிடம் கொலைகளை விவரமாக வர்ணிக்க வேண்டும்? இதில்

இன்னொரு முக்கியமான விஷயம் - சோகோலாவிடம் இந்த மனிதன் சாட்சி சொன்ன பிறகு, மர்மமான முறையில் இறந்து விட்டதாகச் சொன்னார்கள் - அது எப்படி?

மூன்றாவது, கொலை செய்யப்பட்ட நபர்கள் எரிக்கப்பட்ட இடங்களில் கிடைத்த சாட்சியங்கள், முதலில் விசாரணை செய்தவருக்கு ஏதும் அகப்படவில்லை. ஆனால் சோகோலாவுக்கு மட்டும் பல பொருள்கள் கிடைத்தனவே. அது எப்படி? அவர் மட்டும் அதிர்ஷ்டசாலியா?

1919ஆம் ஆண்டு ஜூன் மாதம்தான் நாயின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. சைபீரியாவின் குளிர்ந்த சீதோஷ்ண நிலையினால் நாயின் உடல் அதிகமாகக் கெட்டிருக்கவில்லை. ஆனால் நான்காவதாக அவர் அறிக்கையில் என்ன சொல்லி யிருந்தார்?

போர்சானிக் ரிப்போர்ட் சொன்னதை மறுத்து, நாயை பின்னால் கொன்று போட்டிருக்கலாம் என்றார்.

ஐந்தாவதாகச் சொன்ன விஷயம் மறுக்க முடியாததாகவே இருந்தது. 1918ஆம் ஆண்டு ஜூலை 16-17க்குப் பின்னால் மன்னரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாரையும், யாரும் உயிரோடு பார்க்கவில்லை.

ஆனால் உண்மையான ரிக்கார்டுகள் சோகோலாவின் இந்த முடிவையும் மறுக்கிறது.

1918ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெர்ம் நகருக்கு வெள்ளையர்கள் அணிவகுத்துச் சென்றனர். அந்த நகரம் எப்டெரின்பர்க் நகரத்திற்கு 175 மைல்களுக்கு அப்பால் இருந்தது.

வெள்ளையர்களின் படையை நடத்திச் சென்ற ஓர் அதிகாரி, ஜூலை 17ஆம் தேதி இரவு கொலை செய்யப்படாமல் உயிருடன் இருந்தவர்கள் அந்த நகருக்கு ஒரு ரயில் மூலம் கொண்டு

வரப்பட்டார்கள் என்பதைக் கண்டுபிடித்தார். ஒரு டாக்டரும், நர்ஸூம் அந்த ரயிலில் வந்தார்கள் என்பதையும் அவர் அறிந்தார். நர்ஸின் பெயர் நடாலியா மட்னிச், டாக்டரின் பெயர் பவெல் உட்கின் என்பதாகும்.

பலமுறை துருவித் துருவி அந்த நர்ஸை விசாரித்தபோது, அவளது சகோதரன் போல்ஸ்விக் படையில் முக்கிய பதவி வகித்தவன் என்றும், அவன் சொன்ன தகவலின் பேரில் ஜார் மன்னரும், அவரது மகன் அலெக்ஸியும் தான் கொல்லப் பட்டார்கள்; மற்றவர்கள் பத்திரமாக பெர்ம் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும் நர்ஸ் சொன்னாள்.

இளவரசிகளான டாடினாவும், அனஸ்டாசியாவும் அங்கிருந்து தப்புவதற்கு மிகவும் முயற்சி செய்தார்கள் என்பதையும் தான் தெரிந்து கொண்டதாக நர்ஸ் சொன்னாள்.

டாக்டர் உட்கின் இந்தச் செய்தி உண்மைதான் என்றார். செப்டம்பர் மாதம் 20ஆம் தேதி பலத்த காயங்களுடன் இருந்த ஒரு பெண்ணுக்கு, தான் வைத்தியம் பார்த்ததாகவும் அவள் ஜார் மன்னரின் மகள் என்று தான் தெரிந்து கொண்டதாகவும் டாக்டர் சொன்னார்.

பெர்ம் நகருக்குள் வெள்ளையர்கள் நுழைவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு, ஐந்து பெண்களை போல்ஸ்விக்குகள் மாஸ்கோவிற்கு ரயில் ஏற்றியதாகவும் ஒரு தகவல்.

அதற்குப் பிறகு அவர்கள் என்னவானார்களோ தெரிய வில்லை.

சோவியத் யூனியன் விவரமான விசாரணையை மீண்டும் தொடங்கினால் உண்மைகள் தெரியலாம்; அதுவரை இந்த மர்மங்கள் நீடிக்கத்தான் செய்யும்.

■

ஷீபா மகாராணி

நமக்கு இந்த மகாராணியின் உண்மையான பெயர் என்ன வென்றே தெரியாது. மேலும் இப்படி ஒரு மகாராணி இருந்தாளா என்பதே கேள்விக்குறி. ஆனாலும் இந்த மர்மமான பெண்மணி மத்திய கிழக்கிலும், ஆப்பிரிக்காவிலும் இருந்த பல கிராமியக் கதைகளில் கதாநாயகியாக இடம் பெற்றிருந்தாள். இப்போதைய மக்களுக்கு மத்திய கிழக்கின் மர்ம ராணியாகவும், கனவு தேவதையாகவும் இன்றும் தோன்றுகிறாள் என்னும் செய்தி விசித்திரமானதாகவே இருக்கிறது.

மகாராணி ஷீபாவின் பெயர் புனித பைபிளில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பெயரிலன்று. முஸ்லிம்களின் வேதமான திருக்குர்ஆனிலும் அராபிய, பெர்ஷிய கிராமியக் கதைகளிலும் இவளை 'பில்குவிஸ்' என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். எத்தியோபியக் கதைகளில் 'மெக்டா' - அதாவது அந்த கீழ்த் திசைகளின் மகாராணி - என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நாட்டு இலக்கியங்களில் இவள் நடுநாயகமான இடத்தைப் பிடித்திருந்தாள் என்பது வரலாறு. எத்தியோப்பிய மன்னர்களும், அப்போது வறுமையில் உழன்ற எத்தியோப்பிய யூதர்களும் இவளைத் தங்கள் மூதாதையரின் வம்சத்தைச் சேர்ந்தவள் என்றே கருதி வந்தனர்.

பைபிளில் இவளைப் பற்றிக் கூறியிருப்பதாகக் குறிப்பிட்டோ மல்லவா? 'பழைய டெஸ்டாமென்ட்'டில் மன்னர்களைப் பற்றி விவரமாகக் குறிப்பிட்டிருந்த இடங்களில் ஷீபா மகாராணியின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதோ அவளைப் பற்றிய வரலாறு:

சாலமன் மன்னரின் (கி.மு. 965-926) பராக்கிரமங்களையும், புத்திசாலித்தனத்தையும் பற்றி இராணி கேள்விப்பட்டாள். அவரைப் பலவிதங்களில் சோதனை செய்வதற்காக இராணி ஷீபா ஜெருசலத்திற்குப் புறப்பட்டாள். பலவிதமான விடுகதைகளைப் போட்டு அவரைத் திணற அடிக்க வேண்டும் என்பது அவள் எண்ணம்.

தன் புத்திசாலித்தனத்தால் அவளது கேள்விகளுக்கெல்லாம் திறமையாகப் பதில் சொன்னார் சாலமன் மன்னர். ஆனால் பைபிளில் அவள் கேட்ட விடுகதைகளைப் பற்றித்தான் விவரமாக இருக்கிறதே தவிர, வேறெதுவும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. மகாராணி ஷீபா கேட்ட புத்திசாலித்தனமான பல கேள்விகள், காலம் காலமாக உலா வந்தன என்பது உண்மையான வரலாறு.

பல விஷயங்களில் இருந்த அடிப்படை வேறுபாடுகளைப் பற்றியும், ஆண்-பெண் உறவு பற்றியும், மலட்டுத் தன்மையைப் பற்றியும் அவள் கேள்விகள் எழுப்பினாள் என்பதும் வரலாறு.

உதாரணமாக இதோ ஒன்று -

மகாராணி, சாலமனிடம் இரண்டு ரோஜாப் பூக்களைத் தனித்தனியாகக் காட்டி, ''இதில் எது உண்மையான ரோஜா?'' என்று கேட்டாள்.

தேனீக்கள் மொய்த்த ரோஜாவை உண்மையாதென்று கண்டு பிடித்துச் சொன்னார் சாலமன்.

இன்னொன்று காகிதப் பூ!

அவள் கேட்ட மிகவும் முக்கியமான கேள்வி இதுதான்: ''ஏழு வெளியே வரும்போது ஒன்பது உள்ளே போகும். இரண்டில் சுவையான பானம் கிடைக்கும். ஆனால் ஒரே சமயத்தில் ஒன்றில்தான் பானத்தைக் குடிக்க முடியும். அது என்ன?'' என்பது இராணியின் கேள்வி.

சாலமன் இதற்கு மிகவும் புத்திசாலித்தனமாகப் பதில் சொன்னார்: ''மாதவிடாய் ஏழு நாள்கள் - தொடர்வது ஒன்பது மாத கர்ப்பம் - சுவையான பானம் குழந்தைக்குக் கிடைப்பது, தாயின் மார்பகங்களில் - ஆனால் ஒன்றில்தான் ஒரு சமயத்தில் அந்தப் பானத்தைப் பருக முடியும்''.

போகட்டும், இராணியின் கதைக்கு வருவோம். இந்த மகாராணி எங்கிருந்து வந்தாள்?

அராபிய தீபகற்பத்தின் தென்கிழக்குக் கோடியில் இருந்த ஏமன் நாட்டைச் சேர்ந்தவள் என்பதை சரித்திரச் சான்றுகள் இப்போது உறுதிபடுத்துகின்றன.

இந்தப் பாலைவான இராணி, சாலமனின் புத்திசாலித்தனத்தை மட்டும் பரிசோதிக்க 2000 கி.மீ. தொலைவை மிகவும் சிரமப்பட்டுக் கடந்து ஜெருசலத்தை அடைந்தாள் என்பது நம்பக் கூடிய விஷயமாக இல்லை. இந்தப் பயணத்தின் பின்னால் பல முக்கியமான காரணங்கள் இருக்கின்றன.

மத்திய கிழக்குப் பகுதியில், இந்த யூத மகாராஜா சாலமனின் கை பலமாக ஓங்கியிருந்தது. வியாபாரத்தில், ஆட்சியில், எல்லாவற்றிலுமே அவர் சிறந்து விளங்கினார் என்பது அப்போதைய வரலாறு.

அதை மகாராணி ஷீபா தன் வளர்ச்சிக்குப் பெரும் தடையாகக் கருதினாள். அதனால் ஏதோ ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு அவள் ஜெருசலத்திற்கு வந்தாள் என்கிறது பைபிள்.

தன் பயணத்தில் அவள் வெற்றியையே கண்டாள். இரண்டு அரசர்களுக்கிடையே சுமூகமான வியாபார ஒப்பந்தம் நடைபெற்றது. சாலமனுக்கு, இராணி அளவற்ற தங்கமும், வாசனைத் திரவியங்களும், விலை மதிப்பற்ற நவரத்தினக் கற்களும் கொடுத்தாள். வியாபார ஒப்பந்தம் முடிந்ததும் மிகவும் திருப்தியடைந்து அவள் தன் நாட்டுக்குத் திரும்பினாள்.

பைபிளின் பழைய டெஸ்டாமென்ட்டில் சாலமன், ஷீபா இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த மரியாதையைப் பற்றியும், வியாபாரத்தைப் பற்றியும் மட்டுமே குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் எத்தியோப்பியாவின் தேசிய கிரந்தமான 'கேப்ரா நகஸ்ட்' என்னும் மன்னர்களின் புகழ் சரித்திரத்தில், சாலமன் - ஷீபாவுக்கிடையேயிருந்த தொடர்பைப் பற்றி வேறு விதமாக, விவரமாக கீழ்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

இருவரும் ஒருவரையொருவர் விரும்பினர். இந்த உறவினால் இருவருக்கும் ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் மேனிலிக். அவன்தான் எத்தியோப்பியாவின் முதல் மன்னன். மன்னரின் ஆட்சி 1974ஆம் ஆண்டில் கவிழும் வரை எத்தியோப்பியாவை அந்தச் சந்ததியினர்தான் ஆண்டு வந்தார்கள்.

ஆனால் எத்தியோப்பிய மன்னர்கள் மட்டும் தாங்கள் சாலமன் - ஷீபா வாரிசுகள் என்று சொல்லவில்லை.

வேறொரு வர்க்கமும் இருந்தது. அவர்கள் வேறு யாருமல்லர்; எத்தியோப்பியாவின் யூதப் பரம்பரையினர்தான். அவர்களை இன்னொரு பெயராலும் அழைப்பார்கள். 'பாலாஷா' அல்லது எத்தியோப்பிய யூதர்கள்.

சாலமன் மன்னர் தன் மகன் மேனிலிக் எத்தியோப்பியாவுக்குப் பயணப்பட்டபோது, அவனுக்குப் பின்னால் போகப் பணித்த அதிகாரிகள், பாதிரிமார்கள் ஆகியவர்களின் பரம்பரையில் வந்தவர்கள்தான் இந்த எத்தியோப்பிய யூதர்கள்.

''பாலாஷா மக்களின் உண்மையான பிறப்பிடம் எது என்று எங்குமே குறிப்பிடப்படவில்லை. அரேபியா தீபகற்பத்தின் வழியாக எத்தியோப்பியாவுக்கு வந்த யூத வியாபாரிகளின் வம்சாவளியாக இருக்கலாம். கி.மு. 600 சமயத்தில் இதே யூதர்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். இதனால்தான் பாலாஷா மக்களின் மதச் சடங்குகளும், ஆசாரம் மிகுந்த யூதர்களின் மதச் சடங்குகளும் வெவ்வேறாக இருந்தன'' என்கிறார்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்கள்.

மேலும், பாலாஷா வர்க்கத்தினர் யூதர்களால் எழுதப்பட்ட இதிகாசங்களையும், அதே பாணியில் எழுதப்பட்ட புனித பைபிளையும், நம்பவில்லை. அதாவது கற்றுக் கொள்ள அவர்களது மனம் இடம் தரவில்லை.

இவ்வளவு மாறுபாடுகளுக்கிடையில் ''நாங்களும் யூதர்கள்'' என்று பாலாஷா வர்க்கத்தினர் சொன்னதை முழுமையாக ஆதரித்தவர்கள் யாருமில்லை. 1972ஆம் ஆண்டுதான் மத குருமார்கள் ஒன்று சேர்ந்து அவர்களை யூதர்களாக ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் உலகம் அவர்களை எப்போது யூதர்கள் என ஏற்றுக் கொண்டது தெரியுமா? 1985ஆம் ஆண்டில் எத்தியோப்பியாவில் பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டது. அப்போது இஸ்ரேல், 20,000 எத்தியோப்பியர்களை - அதாவது யூதர்களை - சூடான் மற்றும் எத்தியோப்பியாவின் பஞ்ச முகாமிலிருந்து அப்புறப்படுத்தி, தன் நாட்டுக்குக் கொண்டு வந்தபோதுதான் அவர்கள் உண்மை யாகவே யூதர்கள் என்று கருதப்பட்டனர்.

மீண்டும் ஷீபாவின் சரித்திரத்திற்கு வருவோம். ஆப்பிரிக்கா வில் இந்த இராணிக்கு மிகுந்த மரியாதையுண்டு. இராணியை உயர்ந்த ஸ்தானத்தில் தான் வைத்திருந்தனர். ஆனால் வேறு மதங் களிலும் அவற்றின் சம்பிரதாயங்களிலும் ஷீபா இராணியைப் பற்றி வேறு விதமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

பைபிளின் பழைய டெஸ்டாமெண்ட்டில் இவள் ஒரு சிறந்த மகாராணி என்று குறிப்பிட்டிருந்ததை யூதர்களின் புராண இதி காசங்களில் வேறுவிதமாகக் குறிப்பிட்டிருந்தனர். இஸ்ரேலின் மன்னருக்குச் சமமாக இருந்த அவளை ஒரு சூன்யக்காரி என்றும் ஆள் மயக்கி என்றும் குறிப்பிட்டிருந்தனர். இதைப் போன்ற சில கதைகளில் அவளது கால்களில் நிறைய முடி வளர்ந்திருந்தது என்றும் அதுதான் அவள் பைசாச வர்க்கத்தைச் சேர்ந்தவள் என்பதற்கான அறிகுறி என்றும் எழுதியிருந்தனர்.

இந்த விஷயத்தில் அவளைப் பரிசோதிக்க சாலமன் பளிங்குத் தரையை அமைத்திருந்தார் என்றும், அதன் மீது நடக்கும்போது, அத்தரையில் தண்ணீர் இருக்கிறதென்றெண்ணி, அவள் தன் ஆடையைச் சற்றே உயர்த்திப் பிடித்துக் கொண்டு நடப்பாள் என்றும், அப்போது அவளது கால்களில் முடி வளர்ந்திருக்கிறது என்பதைக் காண மன்னர் முயன்றார் என்றும் ஒரு கதை உலவியது.

இதே கதைகளில் இராணி தன் சொந்த விருப்பத்தின் பேரில் ஜெருசலத்திற்கு வரவில்லை என்றும், சாலமன் மன்னரால் அவள் வரவழைக்கப்பட்டாள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்போது சற்றே கவர்ச்சியாகவிருந்த இராணி, தன் அழகால் மன்னரை மயக்கிக் கெடுத்தாள் என்பது இன்னொரு கதை.

திடீரென்று மகாராணி ஷீபாவின் புகழ் வேறுவிதமாக மாறுவதற்கு என்ன காரணம்? காலப் போக்கில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் தரக் கூடாது என சமூகத்தில் விதிக்கப்பட்ட தடைக் கல்லினால் இருக்குமா?

சொல்ல முடியாது. மத்திய கிழக்குப் பகுதிகளில், சாலமன் காலத்தில் பல பெண்கள் கோலோச்சியிருப்பதாக வரலாறுகள் குறிப்பிட்டாலும், பைபிள் காலத்திற்குப் பின்னால் பெண்கள் அதிகமாக முக்கியத்துவம் பெறவில்லை.

மகாராணி ஷீபாவைப் போன்ற ஒரு பெண்மணி, அப்போதைய ஆண்களுக்கு ஒரு சவாலாக இருந்த காரணத்தால் அவளைக் கெட்டவள் என்றும் சூன்யக்காரி என்றும் வேண்டுமென்றே சொல்லி வைத்திருப்பார்கள் போலத் தோன்றுகிறது.

சாலமனுக்கும் ஷீபாவுக்கும் இடையே நல்ல நட்பு இருந்த தென்றும், இருவரும் ஒருவரிடம் மற்றவர் மிகுந்த மரியாதையுடன் பழகி வந்தார்கள் என்றும் யூத - கிறிஸ்துவ இலக்கியங்கள் சில குறிப்பிட்டிருக்கின்றன. அரசரின் புத்திசாலித் தனத்தை அவள் பாராட்ட, அவளுடைய ஒவ்வொரு விருப்பத்

தையும் சாலமன் நிறைவேற்றி வைத்தார் என்று கூறியவர்களும் உண்டு.

எத்தியோப்பியாவின் வரலாற்றில் சாலமன், மகாராணியைச் சரிவர நடத்தவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், தன் காம உணர்ச்சியை, புத்திசாலித்தனத்தால் அவளிடம் தணித்துக் கொண்டார் என்றும் வரலாறு சொல்கிறது. ஆனால் அவளை அரசன் வற்புறுத்தவில்லை என்றும் ஆனால் ஏமாற்றிக் கற்பழித்தார் என்றும் இன்னொரு செய்தி கூறுகிறது.

அதிகமாக உப்பு போட்ட உணவை அவளுக்குப் பரிமாறச் சொன்னாராம் சாலமன். அதைச் சாப்பிட்ட அவளுக்கு நடு இரவில் தாகம் எடுத்துக் கொள்ள, அவள் எழுந்து போய்த் தண்ணீர் அருந்த ஒரு செம்பை எடுத்தாளாம். அப்போது அங்கே வந்த சாலமன், அவள் தன் அரண்மனையில் திருட முயற்சி செய்தாள் எனக் குற்றஞ்சாட்டி, அதனால் அவளைத் தன் படுக்கைக்கு அழைத்துச் சென்றார் என்பது இன்னொரு கதை.

மன்னர் சாலமனும், மகாராணி ஷீபாவும் நட்புடன் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகன் இருந்தான். நமக்கு இது மட்டும்போதும்... இல்லையா?

■

அயல் நாட்டான் பணம்

தான் சென்று வராத ஒரு நாட்டிற்கு தனது சொத்து முழுவதையும் எழுதி வைத்த அதிசய மனிதரைப் பற்றி நீங்கள் அறிவீர்களா? ஏன் இப்படிச் செய்தார் என்பதற்கான காரணங்கள் எப்போதும் எங்கும் சரிவரச் சொல்லப்படவே இல்லை.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரின் அருகே ஓடும் போட்டோமேக் ஆற்றின் மேற்குப் பகுதியில் பிரம்மாண்டமான நீண்டு பரந்து கிடக்கும் பசுமையான இடத்தில்தான் ஸ்மித் சோனியன் நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனம் நிர்வகித்து வருபவை என்னென்ன தெரியுமா?

தரை, வானவியலைப் பற்றிய பிரம்மாண்டமான தேசிய மியூசியம், இயற்கை சரித்திர ஆராய்ச்சிக் கூடங்கள், அமெரிக்க சரித்திரம், ஆப்பிரிக்காவின் கலைகள், பலவிதமான மதங்களின் முக்கிய கலாசார விவரங்கள் போன்றவற்றுக்காக வானளாவிய கட்டடங்கள் அங்கே இருந்தன. அங்கே சிற்பக் கலைக்காகத் தனி இடமும் ஒதுக்கப்பட்டிருந்ததை இங்கே சொல்லியாக வேண்டும். இந்த ஸ்மித் சோனியன் நிறுவனத்துடன் ஒன்றாக இணைந்து செயல்பட்டதுதான் அமெரிக்காவின் 'தேசிய ஆர்ட் காலரி'.

இங்கே ஒரு பகுதியில் ஜான் எஃப். கென்னடியின் கலை பயிலும் நிறுவனமும் உட்ரோ வில்சன் பெயரில் நிறுவப்பட்ட அறிஞர்கள் மையமும் இடம் பெற்றிருந்தன.

மொத்தமாக 14 அருங்காட்சியங்கள் இருந்தன என்றாலும் அவற்றில் 13 வாஷிங்டனிலும் ஒன்று மட்டும் நியூயார்க்கிலும்

இருந்தன. வாஷிங்டனில்தான் தேசிய விலங்கியல் பூங்காவும் இருந்தது.

இந்த நிறுவனங்களுக்கு நடுவே ஒரு பாழடைந்த சிவப்புக் கட்டடம் இருந்தது. 1855இல் கட்டி முடிக்கப்பட்ட அந்தக் கட்டடம் இன்னும் இருக்கிறது. பிரதான வாயிலுக்குச் சற்றே தள்ளி உள்ளே அமைந்திருக்கும் சிறிய மாதா கோயிலின் உட்புறத்தில்தான் ஜேம்ஸ் ஸ்மித்சன் என்னும் ஆங்கிலேயரின் உடல் புதைக்கப்பட்டுள்ளது. அந்த நபர் ஓர் ஆங்கிலேயர். அமெரிக்காவிற்கு அவர் வந்ததேயில்லை.

ஆனால் அவர் எழுதி வைத்த உயிலின்படி தோன்றியதுதான் உலகத்தின் தலை சிறந்த விஞ்ஞான நிறுவனங்கள், கலைக் கூடங்கள் அடங்கிய ஸ்மித் சோனியன் நிறுவனம்.

இதோ அவரது சுருக்கமான வரலாறு.

1765ஆம் ஆண்டு ஜேம்ஸ் ஸ்மித்சன் பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். தவறான வழியில் கர்ப்பமடைந்ததாக எழுந்த புகார் களின் காரணமாக அவரது தாய் பிரான்ஸ் நாட்டை விட்டு ஓடி விட்டாள். தந்தையின் பெயர் சர்ஹக் ஸ்மித்சன் என்பதாகும். தாய் எலிசபெத் மேசி மனம் சோர்ந்து விடவில்லை. ஸ்மித்சன் ஒரு பணக்கார விதவையின் தங்கையை மணந்து கொண்ட காரணத் தால் நார்தம்பர்லேன்டின் முதல் கனவானாகும் பேறு கிடைத்தது.

எலிசபெத் தனது முயற்சியைக் கைவிடாமல் தன் மூதாதை யரைக் கண்டுபிடிப்பதில் மிகவும் வேகமாகக் கவனம் செலுத்தவே, தன் முயற்சியில் அவள் வெற்றியடைந்தாள்.

ஒரு வழியாக ஏழாவது ஹென்றி மன்னரின், சொந்தக்காரி என்கிற உண்மை ஆதாரபூர்வமாக அவளுக்குத் தெரிந்தது. அவள் இவ்வளவு சிரமப்பட்டது எதற்காக? தன் மகன் தவறான வழியில் பிறந்தான் என்று யாரும் சொல்லிவிடக் கூடாது என்பதற்காகத் தான்.

அவனுக்குப் பத்து வயதாகும்போது அவனை இங்கிலாந்துக்கு அழைத்து வந்த எலிசபெத் அவனை ஒரு பிரிட்டிஷ் பிரஜையாகவே வளர்த்தாள். ஆனால் அவன் சிவில் மற்றும் இராணுவக் காரியாலயங்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அரசாங்கம் கொடுத்த நிலத்தையும் அடைய அவன் தவிர்க்கப் பட்டான். சகஜமாக எல்லாருக்கும் கிடைக்கும் சலுகைகள் அவனுக்குத் தரப்படாததால் அதாவது மறுக்கப்பட்டதால் அவன் தன் கவனத்தை விஞ்ஞானத்தின் பக்கம் திருப்பினான்.

தன் பதினேழாம் வயதில் ஆக்ஸ்போர்ட சர்வ கலாசாலையுடன் இணைக்கப்பட்ட 'பெம்புரோக்' என்னும் கல்லூரியில் சேர்ந்தான். அங்கே அவனது பெயர் ஜேம்ஸ் லூயி மேசி என்பதாகும். அங்கே மிக விரைவில் ரசாயனவியல் மற்றும் கனிப் பொருள் ஆராய்ச்சி ஆகிய இரு பாடங்களிலும் முதன்மையானவன் என்று பெயர் எடுத்தான். நான்கே ஆண்டுகளில் அவன் புகழோடு வெளிவந்த போது இங்கிலாந்து நாட்டின் புகழ் பெற்ற விஞ்ஞானிகள் அடங்கிய 'ஹென்றி கேவன்டிஷ்' எனும் மிகப் பெரிய சங்கம் அவனைத் தன் அங்கத்தினர்களில் ஒருவனாக ஆக்கிக் கொண்டது.

1791ஆம் ஆண்டில் சங்கத்தின் அங்கத்தினர் முன்னிலையில் தன் முதல் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தான். மூங்கில்களில் காணப்படும் ஒருவகையான விஞ்ஞானக் கலவையைப் பற்றிய விரிவான கட்டுரை அது.

அப்போது ஜேம்ஸுக்கு 26 வயதுதான். 1800இல் தன்னுடைய தாய் இறந்த பிறகு ஸ்மித்சன் என்னும் பெயரைச் சூட்டிக் கொண்ட அவன் விஞ்ஞானம் சம்பந்தமான 27 ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தான். ஐரோப்பா கண்டத்தின் நாடுகளில் கிடைத்த 'துத்த நாக'த் தாதுவை, இவன் ஆராய்ச்சி செய்ததன் விளைவாக 'Zinc Carbonate' என்னும் தாது உருவானது. இருந்தாலும் அவனுக்குப் பெரும் புகழ் கிடைத்தபாடில்லை. ஒரு பணக்கார வாலிபன் - அதிலும் திருமணமாகாதவன் - ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணம் செய்ததில் பல பிரபல விஞ்ஞானிகளின் அறிமுகம்

கிடைத்தது. அவர்கள் இவனின் மேதா விலாசத்தை அங்கீகரித் தார்கள்.

1826ஆம் ஆண்டு அக்டோபர் 23ஆம் தேதி அந்த விஞ் ஞானிக்கு 61 வயது நிறைந்தது. அப்போதுதான் அந்த விஞ்ஞானி தன் கடைசி உயிலை எழுதினார்.

நார்தம்பர்லேண்டு பிரபுவையும், பிரபு ஹங்கர் போர்டின் வாரிசாகவும் கருதப்பட்ட எலிசபெத் சீமாட்டியைத் தன் பெற் றோராகத் தன் உயிலில் இவர் குறிப்பிட்டிருந்தார். ஹென்றி ஜேம்ஸ் ஹங்கர் போர்டு என்னும் தன் மருமகனுக்கு தன் சொத்து முழுவதும் சேர வேண்டும் என உயில் எழுதியிருந்தார். இந்த மருமகனுக்கு வாரிசு இல்லையென்றால் தன் சொத்துகள் யாவும் அமெரிக்க நாட்டிற்குச் சேர வேண்டும் என்றும், அங்கே வாஷிங்டனில் பெரிய பெரிய நிறுவனங்கள் நிறுவப்பட்டு மக்கள் விஞ்ஞான அறிவு பெற உதவ வேண்டும் என்றும் அவற்றுக்கு ஸ்மித் சோனியன் நிறுவனங்கள் என்று பெயர் சூட்ட வேண்டும் என்றும் உயிலில் குறிப்பிட்டிருந்தார்.

''இங்கிலாந்தின் மிகச் சிறந்த ரத்தம் என் உடலில் ஓடுகிறது. ஆனால் யாரும் இதை உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை'' என்று மிகவும் சோகமாக ஒரு சமயம் குறிப்பிட்ட ஸ்மித்சன் பின் வருமாறு சொல்கிறார்:

''நார்தம்பர்லேண்டு, பெர்சி என்ற இரு பெயர்கள் இருக்கும் வரை என் பெயரும் இருக்கும்.''

ஏன் இப்படி குறிப்பிடுகிறார்?

தான் பிறந்த சூழ்நிலை, தன்னை ஒதுக்கித் தள்ளிய சமூகம், வெறுத்த சமூகம் ஆகியவற்றின் மீது ஆத்திரம் கொண்டுதான் இப்படிக் குறிப்பிடுகிறார் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

பிறந்த நாடும் மக்களும் போற்றிப் புகழவில்லை என்றால் எவ்வளவு புகழ் பெற்றால் என்ன? ஆனால் தன் சொத்துகள்

போய்ச் சேர வேண்டும் என அமெரிக்காவை அவர் தேர்ந்தெடுத்தது! ஏன்? இத்தனைக்கும் அந்த நாட்டிற்கு ஒருமுறை கூட அவர் சென்றதேயில்லை. அங்கே தெரிந்தவர்களோ, சொந்தக் காரர்களோ யாருமேயில்லை.

இதற்கெல்லாம் என்ன விடை?

தன்னுடைய 27ஆம் வயதில் பாரிஸ் நகருக்கு விஜயம் செய்தபோது நடந்த சம்பவங்கள்தான் அவரின் இந்த மாறுதலுக்கு விடையாக இருந்திருக்க வேண்டும்.

1792ஆம் ஆண்டு பார்போன் மன்னர்களின் கொடுங் கோன்மைக்கு அத்தாட்சியாக விளங்கிய 'பாஸ்டில்' சிறையை பாரிஸ் மக்கள் தாக்கித் தகர்த்தார்கள். அதற்குப் பிறகு புதியதாக தேசிய மாநாடு, பிரான்ஸில் மன்னர் ஆட்சி முறையை ஒழித்து விட்டு பிரான்ஸை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தியது.

''ஆணவமும் முட்டாள்தனமும் அதிக நாள்கள் நீடிக்காது என்பதற்கு மன்னர் ஆட்சி முறை ஓர் எடுத்துக்காட்டு'' என்று ஆக்ஸ்போர்டில் இருந்த தன் நண்பன் ஒருவனுக்குக் கடிதம் எழுதினார் ஸ்மித்சன். குடியரசு முறைதான் தனக்கு மிகவும் பிடித்தது என்றார்.

ஆனால் குடியரசு அதிக நாள்கள் நீடிக்கவில்லை. பயங்கர மான கலவரங்கள் ஆங்காங்கே வெடித்தன. இதனால் நெப்போலியன் மிகவும் சுலபமாக ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றினான் என்கிறது வரலாறு.

இதே சமயத்தில் அமெரிக்கா கல்வியில், விஞ்ஞானத்தில் படிப்படியாக முன்னேறி ஒரு மாபெரும் ஜனநாயக நாடாகப் பிரகாசித்தது.

ஏதென்ஸ் நகரம் 'போட்டோமேக்' ஆற்றின் கரையில் இருந்தது. அதுதான் அமெரிக்காவின் தலைநகரமாக அமைய வேண்டும் என்று ஜோயல் பார்வோ என்னும் பெருங் கவிஞர் அபிப்பிராயப்பட்டார்.

ஸ்மித்சன்னின் நெருங்கிய நண்பரான விஞ்ஞானி ஜோசப் பிரிஸ்ட்லி சொன்னதென்ன?

''விஞ்ஞான வளர்ச்சி ஒரு குடியரசு நாட்டில்தான் சாத்தியம். மன்னர் ஆட்சியில் தழைக்க சாத்தியம் இல்லை'' என்றார்.

இதனால்தான் யாருடைய பேச்சையும் கேட்காமல் புதிய ஏதென்ஸ் விஞ்ஞானக் கூடங்கள் அமைய வேண்டும் என்று ஸ்மித்சன் விரும்பினார்.

1829ஆம் ஆண்டு. ஸ்மித்சன் உயில் எழுதிய மூன்றாண்டு களுக்குப் பிறகு - அதை விசித்திரமான உயில் என்றார்கள்.

ஜேம்ஸ் ஸ்மித்சன் மரணமடைந்தார். இத்தாலியில் இருந்த ஜெனோவா நகரில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது. ஆறாண்டுகளுக்குப் பிறகு அவரது மருமகனும் இறந்தார்.

அதற்குப் பிறகுதான் 'உயில்' பிரச்னை தலை தூக்கியது. எல்லாச் சொத்துகளும் அமெரிக்க நாட்டிற்கே சேர வேண்டும் என்று தானே ஸ்மித்சன் தம் உயிலை எழுதியிருந்தார்? வாரிசு இல்லாத காரணத்தால் உயிலின்படி எல்லாச் சொத்துகளும் அமெரிக்க நாட்டிற்கே சொந்தம்.

ஆனால் ''முன்பின் தெரியாத ஓர் அயல்நாட்டினிடமிருந்து பரிசாக அவன் சொத்துகளைப் பெறுவது மகா கேவலம்'' என்றார் ஜான் சி. கல்ஹார்ன். ஆனால் அமெரிக்க காங்கிரஸ், ஜனாதிபதிக்கு ஸ்பெஷல் அதிகாரம் தந்தது. அதன்படி அவர் யாராவதொரு விசேஷ நபரை இங்கிலாந்துக்கு அனுப்பி சொத்துகளின் மதிப்பிற்குரிய பணத்தைப் பெற்று வரும்படி சொன்னார்.

அதன்படி தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவே, 1838ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு சிறிய கப்பலில் 105 பைகள் நிறையத் தங்க நாணயங்கள் நியூயார்க்குக்கு வந்து சேர்ந்தன. அந்த சமயத்தில் அதன் அமெரிக்க மதிப்பு 5,08,318.46 டாலர்கள்.

1904ஆம் ஆண்டு ஸ்மித்சன்னின் சவபெட்டியில் இருந்த அவரது மிஞ்சிய உடல் பகுதி அங்கே கொண்டு வரப்பட்டு 1847ஆம் ஆண்டு அவரது நினைவுச் சின்னமாக ஸ்மித்சன் கலைக் கூடங்களின் நடுவே எழுப்பப்பட்டிருந்த ஒரு சிறிய கோயிலில் பத்திரமாக வைக்கப்பட்டது. அவரது சொத்துக்கு ஒரு பாதுகாப்புக்குக் குழு ஏற்படுத்தப்பட்டது.

தலைமை நீதிபதி, குடியரசுத் தலைவர், குடியரசின் உதவித் தலைவர், அமெரிக்க காங்கிரஸைச் சேர்ந்த மூவர், மூன்று செனட்கள், நகரின் ஆறு முக்கியமான பிரஜைகள் ஆகியோர் அடங்கிய ஒரு பெரும் கமிட்டிதான் சொத்துகளைப் பாதுகாக்கும் குழு.

பிரின்ஸ்டன்னைச் சேர்ந்த விஞ்ஞானப் பேராசிரியர் இந்த பெரிய கலை விஞ்ஞானக் கூடங்களை நிறுவப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது பெயர் ஜோசப் ஹென்றி.

இங்கே முக்கியமான பகுதியாக ஆராய்ச்சிக் கூடங்கள் மட்டும் தான் முதலில் இடம் பெற வேண்டும் என்று ஹென்றி சொன்னதை குழு மறுப்பு சொல்லாமல் ஏற்றுக் கொண்டது.

1848இல் முதல் ஆராய்ச்சி நூல் வெளியிடப்பட்டது. 'அறிவுப் பயன் பெற ஸ்மித் சோனியனின் காணிக்கை' என்றுதான் அதற்குப் பெயரிடப்பட்டது. இது தொடக்கம். அதற்குப் பிறகு இந்த விஞ்ஞான கலைக் கூடங்கள் கண்ட அபரிமிதமான வளர்ச்சியை எழுத்தால் வர்ணிக்க இயலாது. விஞ்ஞானத் துறையின் பல துறைகளிலும் அமெரிக்கர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்றால் அதற்கு ஸ்மித் சோனியன் நிலையங்கள்தான் அஸ்திவாரம்.

இதற்கெல்லாம் மூல காரணம் ஓர் அயல்நாட்டான் பணம். ஜேம்ஸ் ஸ்மித்சன்னின் கனவு நனவாகிக் கொண்டுதான் இருக்கிறது.

ஒவ்வொரு நாட்டிற்கும் இப்படி ஒரு முன்னோடி கிடைப்பாரா?

■

‘டிராகுலா’வின் கதை

வெளிறிய உடல், ஊசியைப் போன்ற கடைவாய்ப் பற்கள், அவற்றில் லேசான ரத்தக்கறை, கண்களில் கவர்ச்சி - இவைதான் கதைகளில் சொல்லப்பட்ட டிராகுலாவின் உருவம். இந்தப் பேய் மனிதனின் மூதாதையரில் ஒருவன்; உண்மையாகவே ரத்த வெறி பிடித்து அலைந்த ஒரு தேசியக் கதாநாயகன் என்பதை, பலர் அறிந்திருக்க நியாயமில்லை.

இங்கிலாந்தின் புகழ் பெற்ற வக்கீல் ஒருவரின் உதவியாளனாக இருந்த ஜோன்தன் ஹார்கர் பின்வருமாறு சொல்கிறான்:

‘‘என் உணர்ச்சிகள் திடீரென்று சூடேறி, மனத்தில் பயத்தைத் தோற்றுவித்தன. ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்த அந்தக் கறுப்பு உடை மனிதன், கோட்டையின் மதிற்சுவரில் வௌவாலைப் போல் தொற்றிக் கொண்டிருந்தான். அவனுடைய விரிந்த கறுப்பு உடை, இறக்கைகளைப் போல் அவனுக்கு உதவின. அப்போது நிலா பிரகாசித்துக் கொண்டிருந்தது.’’

ரோமானிய நாட்டில் பாறைகள் நிறைந்த ஒரு மலைத் தொடர். அங்கேதான் இருக்கிறது டிரான்சில்வேனியா. அங்கே இருந்த கோட்டையில்தான் ஹார்கர் தன் கதாநாயகனைப் பார்த்ததாகச் சொல்கிறான்.

‘டிராகுலா பிரபு’ என அழைக்கப்பட்ட அந்த மனிதன் தன் நெடிய உருவத்தைக் கறுப்பு அங்கியால் முழுக்க மறைத்திருந்தான்.

மலைப் பள்ளத்தாக்கில் ஓநாய்கள் இரவில் ஊளையிடும் போது, தன் பழைய கோட்டையில் இருந்து கொண்டே கண்கள்

பிரகாசிக்க, மகிழ்ச்சியோடு - ''அதோ இரவின் குழந்தைகள். எவ்வளவு அற்புதமாக சங்கீத ஒலி எழுப்புகிறார்கள். கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது'' - சுமார் ஆயிரம் அடிகளுக்குக் கீழே இருந்து வந்த ஓநாய்களின் ஓலம் அவனுக்கு இனிய இசையாகத் தெரிந்தது.

ஒருமுறை ஹார்கர் முகச் சவரம் செய்து கொண்டிருந்தபோது, கத்தியால் லேசான காயம்பட்டு ரத்தம் வழிந்தது. அதைப் பார்த்து அருகில் ஓடிவந்த அந்த மனிதன், ஹார்கரின் கழுத்தைப் பிடித்தபோது அலறிக் கொண்டு தள்ளி நகர்ந்தான். அதற்குக் காரணம் ஹார்கரின் கழுத்தில் இருந்த சிலுவைதான். ஆனால் அந்தச் சம்பவத்திற்கு முன்பு ஹார்கருக்கு ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டது. தான் முகம் பார்த்து சவரம் செய்து கொண்டிருந்தபோது அருகில் வந்த 'அந்த மனிதனின்' உருவம் கண்ணாடியில் தெரியாததைக் கவனித்தான்; வியந்தான்.

ஹார்கர் கோட்டையை விட்டு வெளியே வந்தபோது கிராமத்து மக்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு பிசாசு மனிதன், நரகத்தைச் சேர்ந்தவன் என்று கூச்சலிட்டார்கள். இதனால் அவன், அந்தப் பாழடைந்த கோட்டைக்குள்ளாகவே அடைந்து கிடக்கத் தொடங்கினான்.

உயரமான ஜன்னல்கள், அதிக வெளிச்சம் காணாத இருட்டு அறைகள், ஓரிரு இடங்களில் இடிந்து போன கூரை வழியாகத் தெரியும் வானம் - இப்படிப்பட்ட ஓரிடத்தில் சிக்கிக் கொண்ட ஹார்கர், தான் எப்போதுமே தன் தாய்நாட்டுக்குத் திரும்ப முடியாதா என்று கவலைப்படத் தொடங்கினான். ஒரே துணை என்று சொல்லிக் கொண்ட அந்த விசித்திர நபரும் இரவில்தான். கோட்டைக்கு வந்தான்.

அந்த இளைஞன் ஹார்கர்தான் அக்காலத்தில் மிகவும் பிரபலமான 'டிராகுலா'வின் கதாநாயகன். பிராம் ஸ்டோகர் என்னும் எழுத்தாளர் எழுதிய மிகவும் பிரபலமான நாவல்தான் 'டிராகுலா'. 1897ஆம் ஆண்டு லண்டனில் இப்புத்தகத்தை

வெளியிட்டவுடன் மிகவும் பரபரப்பாக விற்பனையாயிற்று. அப்போதிலிருந்து இந்தநாள் வரை அப்புத்தகம் எத்தனை பதிப்புகளாக வந்தது என்றும், எத்தனை மொழிகளில் வந்தது என்றும் கணக்கிட்டுச் சொல்லவே முடியாது.

பல கோணங்களில் திரைப்படங்கள், மேடை நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், காமிக் புத்தகங்கள் என்று பல வடிவங்களில் இப்புத்தகம் உருமாறி பிரபலமடைந்தது.

நாவலில் எழுதியிருந்தபடி, 'டிராகுலா' லண்டனுக்குப் பயணப்பட்டு அங்கே தன் 'பைசாச சாம்ராஜ்யத்தை' ஸ்தாபிக்க முயன்றான். எடுத்த எடுப்பிலேயே அவன் தன் முயற்சியில் தோல்வி அடைந்ததற்குக் காரணம் ஹார்கர் அந்தப் பாழடைந்த கோட்டையிலிருந்து தப்பிவிட்டதுதான்.

தப்பிய ஹார்கர், டச்சு நாட்டைச் சேர்ந்த டாக்டர் வேன் ஹெல்சிங் என்பவரிடம் சரணடைந்தான். அவர், ஆவி உலக ஆராய்ச்சி நிபுணர். அவர் செய்த ஆராய்ச்சியின் பலனாகத்தான் பல உண்மைகளைக் கண்டறிந்தார். அவை என்ன?

இரவில் அலையும் அந்த பைசாச உருவங்களுக்கு சூரிய வெளிச்சம் பிடிக்காது. வெள்ளைப் பூண்டு வாசனை பிடிக்காது. மேலும் சிலுவைக் குறியிட்ட பொருள்களைப் பார்த்தால் பயந்து அலறும் தன்மை கொண்டவை. இறந்தாலும் இறக்காதது போல் திரியும் அந்த ஆவிகள் ஒரேயடியாக ஒழிய வேண்டும் என்றால் அதன் மூல ஆதாரமான பிணத்தின் மார்பில் பலமான ஆணியை அடிக்க வேண்டும். இதுதான் முடிவு.

ஸ்டோகர் எழுதிய இந்த நாவல், கிரேக்க நாடு மற்றும் எகிப்து போன்ற நாடுகளில் பரம்பரை பரம்பரையாக வந்த சில உண்மைச் சம்பவங்களின் அடிப்படை என்று சொல்லப்பட்டது.

உடலில் ரத்தமே இல்லாமல் இறந்து போனவர்கள், உயிருடன் உள்ள மனிதர்களின் ரத்தத்தைக் குடித்தால் மீண்டும் உயிர் பெற்று நலமாக இருப்பார்கள் என்று நம்பப்பட்டது.

'டிராகுலா' போன்ற நபர்கள் ரத்தத்தைக் குடித்துத்தான் உயிர் வாழ்ந்தார்கள் என்று பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் ஒரு கட்டத்தில் இந்த யூகங்கள் உண்மையில்லை என்றும் சொல்லப் பட்டது.

ரோமானியாவில் பரம்பரை பரம்பரையாகப் பேசப்பட்டு வந்த கிராமியக் கதைகளின் அடிப்படையில்தான் இக்கதை எழுதப்பட்டது என்றும் சொல்லப்பட்டது. அதற்கு ஆதாரமாகச் சொல்லப்பட்ட விஷயங்கள் சற்றே நம்பக் கூடியவையாக இருந்தன. பழைய மரபுகளை மீறாதவாறு நடந்து வந்த சில மாதா கோயில்கள் அங்கே இருந்தன. இந்த மாதா கோயில்களை பக்திப் பூர்வமாக நேசித்த ஒரு சமுதாயம் சில அபூர்வ எண்ணங்களை நம்பியது.

பிறரால் கெடுதி அடைந்து இறந்தவர்கள், வேறு விதங்களில் நியாயமற்ற முறையில் தண்டனை அடைந்து மரணமடைந்தவர்கள் ஆகியோர் இந்தப் புனிதமான பவித்ரமான 'சர்ச்'சின் சாப விமோசனம் கிடைக்கும் வரை 'பேய்' உருவத்தில்தான் அலைந்து கொண்டிருப்பார்களாம்.

இரவு நேரத்தில் பறவைகளைப் போல் பறக்கும் தன்மை கொண்ட அவர்கள், ரத்த வெறி பிடித்து அலைவார்களாம். அவர்கள் யாரிடம் ரத்தத்தைக் குடிக்கிறார்களோ, அவர்களும் பின்னால் இவர்களைப் போலாகி விடுவார்கள் என்பதும் வழக்கமான ஒன்றுதான்.

ரோமானிய இதிகாசங்களில் குறிப்பிட்டுள்ள சில விஷயங்கள் மிகவும் சுவாரஸ்யமானவை. தவறான உறவின் மூலம் பிறந்த குழந்தைகள், அநாதைக் குழந்தைகள், பில்லி சூன்யம் தெரிந்தவர்கள், ஏழாவது மகனுக்குப் பிறந்த ஏழாவது மகன் போன்றோர் - பேய் மனிதர்களாகும் வாய்ப்பு உண்டு என்று அந்த இதிகாசங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பேய் மனிதர்கள் மிருகங்களைப் போன்று மாறும் சக்தி படைத்தவர்கள், ஓநாய், வௌவால் போன்றவைதான் அவர்களுக்கு மிகவும் பிடித்த உருவம்.

ஒரு கிராமத்தில் யாரேனும் ஒருவன் வெள்ளைப் பூண்டை உண்ண மறுத்தால் அவன் பேய் மனிதனின் பிடியில் இருக்கிறான் என்று மக்கள் நம்பத் தொடங்கினார்கள். அதைப் போன்ற ஆவி மனிதர்கள் தங்கள் வீட்டிற்குள் நுழைந்து ரத்தத்தைக் குடிக்க வந்து விடக் கூடாதே என்கிற பயத்தால் மக்கள் தங்கள் கதவுகளிலும், ஜன்னல்களிலும் வெள்ளைப் பூண்டை அரைத்துத் தடவி வைத்தார்கள்.

இவற்றையெல்லாம் ஸ்டோகர் மிகுந்த ஆராய்ச்சிகளுக்குப் பிறகு தெரிந்து கொண்டார். லண்டனில் இருந்த 'பிரிட்டிஷ் மியூசியம்' மற்றும் ஹங்கேரியின் மிகவும் பிரபலமான அறிஞர் ஆர்மினல் வேம்பரி போன்றவருடன் நடத்திய தொடர்ச்சியான பேச்சுகள் ஆகியவைதான் அவருக்கு உதவின என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஸ்டோகர் இன்னும் ஓரிரு ஆதாரங்களையும் சற்று அழுத்த மாகவே சொல்கிறார். அந்தக் காலத்தில் பிரபலமாகியிருந்த 'ஜேக் தி ரிப்பர்' என்னும் கொலைகாரன் மற்றும் இந்திய நாட்டுப் பேய்க் கதைகள் போன்றவைதான் தன் எழுத்திற்கு ஆதாரம் என்கிறார். இந்திய நாட்டுக் கிராமியக் கதைகளை எழுதியவர் ரிச்சர்டு பர்ட்டன் என்னும் ஆங்கில எழுத்தாளர்.

ஸ்டோகர் 'டிராகுலா'வைப் பற்றி விரிவாக எழுதினாலும், அதில் திகிலுடன் சற்றே காமத்தையும் கலந்து விட்டிருந்தார். விக்டோரியா மகாராணி காலத்தில் எழுத்துகளில் காமக் கலவை இடம் பெற்றிருந்தது இதற்கு முக்கிய காரணம்.

அமைதியான இரவு நேரத்தில் மெதுவாக அறைக்குள் நுழைந்து, தன் மெதுவான ஸ்பரிசத்தால் படுத்திருக்கும் நபரின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு, அந்த நபர் சற்றே மயங்கி இருக்கும்போது அவன் கழுத்தில் தன் கூர்மையான பற்களைப் பதித்து, ரத்தத்தை உறிஞ்சுவது டிராகுலாவின் பழக்கம். அந்தச் சந்திப்பு சில நேரங்களில் காமக் களியாட்டமாக மாறுவதும் உண்டு.

ஹார்கர் இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''நான் தூங்கிக் கொண்டிருந்தபோது 'டிராகுலா'வின் வழித் தோன்றல்கள் மூவர் என் படுக்கையின் அருகே வந்தனர். அவர்களுடைய சிவப்பான அதரங்களின் கோடியில் கூர்மையான பற்கள் முத்து போல் 'பள பள'வெனத் தெரிந்தன. என் உணர்ச்சிகளை அப்போது விவரிக்க இயலாது. பயம் ஒரு பக்கம். அவர்கள் என்னை முத்தமிட வேண்டும் என்கிற ஆசை ஒரு பக்கம்'' என்கிறான்.

பழங்கால மூட நம்பிக்கைகள் இவற்றைப் போல் 'உலா' வந்தாலும் ரத்தம் குடிப்பது சம்பந்தமாக சில உண்மை நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

இது ஒரு ரோமானிய தேசிய வீரனின் கதை. பலராலும் போற்றிப் பாராட்டப்பட்ட மாபெரும் வீரன் அவன். அவன் பெயர் விலாட் டேப்ஸ். தங்கள் எதிரிகளான துருக்கியர்களைப் போரில் கொன்று குவித்தான். தன் முன்னோர்களில் இவன்தான் முதன்மையானவன் என அவனைப் பற்றி 'டிராகுலா' மனிதன் ஹார்கரிடம் மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொண்டானாம்.

அந்த மாவீரன் விலாட் டேப்ஸ் செய்த செயல்கள் என்ன?

ஒரிஜினல் டிராகுலா - பதினைந்தாம் நூற்றாண்டில் டிரான்சில் வேனியாவின் மலைப்பகுதிகளை வல்லாசியா என்று அழைப்பார்கள். அந்தப் பகுதியின் இளவரசன்தான் அவன். ஓவியங்களிலும், மரச் சிற்பங்களிலும் காணப்பட்ட அவன் உருவத்தில் மிகவும் எடுப்பாக இருந்தது அவனது பயங்கரமான மீசை. மூக்கு நீண்டு கூர்மையாக இருந்தது. எதிராளிகளைப் பார்வையாலேயே குத்திக் கிழிக்கும் கண்கள்.

விலாட் என்கிற பெயரைத் தாங்கி இருந்தாலும், அவன் உருவத்திற்கேற்றாற்போல் 'டிராகுலா' என்றும் அழைத்தார்கள். டிராகுல் என்றால் பேய் என்று அர்த்தமாம்.

துருக்கியர்களுக்கு எதிராக யுத்தம் நடந்தபோது விலாட். போர்க் கைதியாகி விட்டான். துருக்கியர்கள் கொலை வெறி

கொண்டவர்கள். தங்கள் எதிராளிகளை எப்படிக் கொடூரமாக சித்ரவதை செய்கிறார்கள் என்பதை விலாட் நேரில் பார்த்தான். அதில் மிகவும் கொடூரமான சித்ரவதை என்னவென்றால், மிகவும் கூர்மையான மரத் தடியிலோ, இரும்புத் தடியிலோ மனிதனை அப்படியே செருகி விடுவது. துடிதுடித்து அவன் உயிர் தானாகப் போகும். இதிகாச காலத்தில் நம் தேசத்தில் 'கழு'வில் ஏற்றும் கதைதான் இது.

1448ஆம் ஆண்டு விலாட்டுக்கு பதினெட்டு வயதுதான். வல்லாசியாவை துருக்கியர்கள் ஆக்ரமித்தபோது ஒரு கிறிஸ்துவ மடத்தில் விலாட் சிறை வைக்கப்பட்டான். வெகு விரைவில் அங்கிருந்து தப்பிவிட்ட அவன், கிறிஸ்துவர்களின் தலைநகரமான கான்ஸ்டான்டிநோபில் துருக்கியர்களின் வசமானவுடன் 1456இல் விலாட் தன் நாட்டிற்குத் திரும்பினான். அடுத்த நான்கு வருடங்களில் அவன் நடத்திய பயங்கர ஆட்சியை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. ஒரு சமயம் தன் நாட்டிற்கு மிகவும் அருகில் இருந்த ஒரு நகரத்தின் மீது படையெடுத்து பத்தாயிரம் பேரை கொடூரமான முறையில் கொன்று குவித்தான். செயின்ட் பார்த்தலோமியா தினத்தன்று டிரான்சில்வேனியாவில் இருந்த ஒரு நகரத்தில் முப்பதாயிரம் பேரைக் கொன்றான்.

கொடூர மனம்தான் இதற்குக் காரணமா, அல்லது அரசியலில் ஏற்பட்ட தோல்விகளா என ஆராய்ந்தால் இரண்டுமே இருக்கலாம் என்கிற முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது.

தொடர்ச்சியாக அவன் பல நாடுகளின் மீது படையெடுத்து அட்டகாசங்கள் செய்தாலும், ஹங்கேரி மன்னர் மத்தியாஸ் அவனைப் பிடித்து பன்னிரண்டாண்டுகள் சிறையில் அடைத்து விட்டார்.

மக்களின் தோலை உரிப்பது, எரியும் தீயில் போட்டு வேக வைப்பது, உடம்பைக் கண்டம் துண்டமாக வெட்டுவது போன்றவைதான் விலாட் கையாண்ட தண்டனைகள்.

அவன் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, சிறைக் காவலர்களை சிநேகம் செய்து கொண்டு அவர்கள் மூலம் எலிகள்,

அணில்கள் போன்ற சிறு பிராணிகளை சிறைக்குள் வரவழைத்து, அவற்றைப் பல விதங்களில் சித்ரவதை செய்து மகிழ்ந்தான். அதனால்தான் 'பேய் மனிதன்' எனும் பெயர் மிகவும் பொருத்த மானது என்றார்கள்.

1474ஆம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலையடைந்த விலாட், தன் நாட்டிற்கு வந்து மூன்றாவது முறையாக அரியணையில் அமர்ந்தான். இரண்டாண்டுகள் தாம் அவனது ஆட்சி நடந்தது. 45ஆம் வயதில் துருக்கியர்களோடு புரிந்த யுத்தத்தில் அவன் கொல்லப்பட்டான். அவனது தலையைத் துண்டித்து தேனில் ஊற வைத்து ஒரு நினைவுச் சின்னமாக துருக்கி சுல்தானுக்கு அனுப்பினார்கள்.

விலாசம் இடப்படாத ஒரு கல்லறையில் அவன் உடல் உறங்குகிறது.

கதாசிரியர் ஸ்டோகர் ஏன் 'டிராகுலா'வை விலாட் என்னும் கொடூர மன்னனோடு சம்பந்தப்படுத்துகிறார்? ஆவி உலகத்திற்கும் அவனுக்கும் என்ன தொடர்பு?

தலைமுறை தலைமுறையாக ரோமானியக் குழந்தைகளைப் பெற்றோர் பயமுறுத்துவதே - 'ஒழுங்காக நடந்து கொள். இல்லை யென்றால் டிராகுலா உங்களை வந்து பிடித்துக் கொள்வான்' - என்பதுதான் வழக்கமாக இருக்கும்.

மக்கள் மனத்திலும் மாறாத நம்பிக்கை ஒன்று நிரந்தரமாக இடம் பெற்றிருந்தது. தங்கள் நாடு எப்போதெல்லாம் மற்றவர்களால் பயமுறுத்தப்படுகிறதோ அப்போதெல்லாம் தங்கள் தேசியத் தலைவன் திடீரெனத் தோன்றுவான் என்னும் நம்பிக்கைதான் அது. அந்த அழியாத நம்பிக்கைகளையும், கிராமப் புறங்களில் பரவிக் கிடந்த நாடோடிக் கதைகளையும் ஒன்றாக இணைத்து நாவல் எழுத வேண்டும் என்று ஸ்டோகர் நினைத்ததன் விளைவுதான் 'டிராகுலா'.

கதாபாத்திரமாகப் படைக்கப்பட்ட 'டிராகுலா' சாகவே விரும்ப மாட்டான். தன் வழித் தோன்றல்களை அவன் பெருக்கிக்

கொண்டே வந்தான். 'டிராகுலா' என்ற பெயரில் வெளிவந்த திரைப்படங்கள், பொம்மைகள், விளையாட்டுகள், உணவுப் பொருள்கள் எல்லாமே அமோகமாக விற்பனையாயின.

ஹங்கேரிய நடிகர் 'பெல்லா லுகோசி' என்பவர் 'டிராகுலா' வேடத்தில் நடித்து பெயரும், புகழும் அளவற்ற செல்வத்தையும் சம்பாதித்தார். ஆனால் அவ்வளவு பணத்தையும் போதைப் பொருள்களுக்கே செலவழித்து தன் 73ஆம் வயதில் இறந்தார்.

1980ஆம் வருடம் விசித்திரமான நோய் ஒன்று மக்களைத் தாக்கியது. அதன் பலனாக, தலைமுடி பயங்கரமாக வளர்ந்து, பற்கள் வெளியே நீட்டிக் கொள்ள, முகம் சுருங்கிப் போனது. இந்த நோய் வந்ததும் நோயாளிகள் வெளிச்சத்தைப் பார்க்கவே பயந்தார்கள்.

அதைப் போல தொடர்ந்து அறுபது நோயாளிகள் வரவே அதற்கும் 'டிராகுலா'தான் காரணம் என்றார்கள். அந்த அளவுக்கு மக்கள் மனத்தில் 'டிராகுலா' இடம் பிடித்திருந்தான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

நாவலில் ஹார்கர் கேட்கும் கேள்வி இதுதான்... ''இவன் எப்படிப்பட்ட மனிதன்? எந்த மிருகம் இந்த மனிதனைப் போல் இருக்கிறது?''

இதற்கு விடை தெரிந்தால், அவன்தான் 'டிராகுலா'!

■

காணாமற் போன விஞ்ஞானி

1938ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்தி ஐந்தாம் தேதி. 31 வயதே ஆன இத்தாலி நாட்டின் பிரபல விஞ்ஞானி எட்டோர் மேஜர்னா, நேப்பிள்ஸ் நகரில், சிசிலியில் உள்ள பாலர் மோவுக்குப் போவதற்காக கப்பலில் புறப்பட்டான். புறப்படும் முன்னர் அவன் இரண்டே கடிதங்களை மட்டும் எழுதினான்.

முதல் கடிதம் அவன் தங்கியிருந்த ஓட்டல் 'போலோக்னா'வின் அறையில் வைக்கப்பட்டிருந்தது. அது அவனது குடும்பத்திற்கு எழுதிய கடிதம். அந்தக் கடிதம் ஒரு விசித்திரமான வேண்டு கோளைத் தாங்கியிருந்தது.

''என் மறைவுக்குப் பின்னால் நீங்கள் நிச்சயம் கறுப்பு உடையை அணியவே கூடாது. துக்கத்தை அவசியம் வெளியில் காட்ட வேண்டுமென்றால் வேறேதாவது கலர்த் துணியை அணிந்து கொள்ளுங்கள். அதுவும் வெறும் மூன்று நாள்களுக்கு மட்டும்தான். உங்களால் முடிந்தால் என்னை அவ்வப்போது நினைத்துக் கொள்ளுங்கள். இந்த என் முடிவிற்காக என்னை மன்னித்து விடுங்கள்.''

இதைப் படித்தால் அவன் தற்கொலை செய்து கொள்ளப் போகிறான் என்கிற நினைவுதான் யாருக்கும் ஏற்படும்.

விஞ்ஞானி மேஜர்னா எழுதிய இரண்டாவது கடிதம் இதை ஊர்ஜிதப்படுத்தியது. அந்தக் கடிதம் நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பிரிவின் தலைவர் அன்டோனியோ கேரல்லிக்கு எழுதியது. ஜனவரி மாதம் முதல் மேஜர்னா இரண்டு மாதங்களாக அங்குதான் பணியாற்றிக் கொண்டிருந்தான்.

அந்தக் கடிதத்தில் இருந்த வாசகம்:

''நான் இப்போது எடுத்துள்ள முடிவு, தவிர்க்க முடியாதது. தன்னலத்திற்காகவோ அல்லது தற்பெருமைக்காகவோ நான் இந்த முடிவை ஏற்கவில்லை. எனக்கு நன்றாகத் தெரியும். இங்கே படிக்கும் மாணவர்கள் என் மறைவினால் நிச்சயம் அவதிப் படுவார்கள். உங்களுக்கும் இதனால் தொல்லை. தயவுசெய்து அதற்காக நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் இதுவரை என்னிடம் காட்டிய பாசத்திற்கும் பரிவுக்கும், நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.''

கேரல்லிக்கு இக்கடிதம் கிடைக்கும் முன் மேஜர்னா அவசரமாகக் கொடுத்த தந்தி ஒன்று அவருக்குக் கிடைத்தது. பாலர்மோவிலிருந்து அந்தத் தந்தி அனுப்பப்பட்டிருந்தது. 'நேப்பிள்ஸ் நகரிலிருந்து நான் தபாலில் அனுப்பிய கடிதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்' என்பதுதான் தந்தியின் வாசகம். அதைத் தொடர்ந்து இரண்டாவது கடிதம் மேஜர்னாவிட மிருந்து வந்தது.

''அன்புள்ள கேரல்லி! கடல் என்னை நிராகரித்து விட்டது. அதனால் நான் நாளைக்குத் திரும்பி வந்து ஓட்டல் 'போலோக்னா' வில் தங்குகிறேன். ஆனால் ஒரு விஷயத்தை உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறேன். நான் இனி ஆசிரியர் வேலை பார்ப்பதாக இல்லை என்று முடிவு செய்து விட்டேன். ஆனால் நீங்கள் அடுத்து காட்டும் வழியில் நான் நடக்கத் தயாராக இருக்கிறேன்.''

இந்தக் கடிதத்திலிருந்து ஒரு விஷயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. மேஜர்னா தற்கொலை முயற்சிகள் பயனளிக்க வில்லை. இதனால் மேஜர்னாவுக்குப் புதிய வாழ்க்கை ஏதும் கிடைத்து விடவில்லை. ஏனெனில் இதற்குப் பின்னால் கேரல்லி போவும், அவரது மாணவர்களும் மேஜர்னாவைப் பார்க்கவே இல்லை.

பொதுவாகவே மேஜர்னா சிறந்த மிகவும் புத்திசாலியான விஞ்ஞானி என்று பல்கலைக் கழகத்தில் பெயர் பெற்றவன்.

மேஜர்னாவுக்கு ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் இருந்த, நோபல் பரிசு பெற்ற என்ரிகோ பெர்மி, அவனைப் பற்றிக் குறிப்பிடும்போது கலிலியோவுக்கும், நியூட்டனுக்கும் சமமான விஞ்ஞான அறிவு படைத்தவன் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

1906ஆம் ஆண்டு சிசிலியில் இருந்த கேட்டானியா என்னும் இடத்தில் ஆகஸ்ட் ஐந்தாம் தேதியன்று பிறந்தவன் மேஜர்னா.

அவனுக்கு நான்கு வயதாகும்போது கடினமான பல கணக்குகளுக்கு விடை கண்டறியும் அபூர்வப் பிறவியாக இருந்தான். அவனைச் சுற்றி இருந்தவர்கள் அவனது புத்திசாலித் தனத்தைப் பாராட்டாமல் இருக்கவில்லை. அவர்கள் எல்லாரும் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக அவன் நன்றாகப் படித்தான்.

தொடக்கக் கல்வியை வீட்டில் பயின்றாலும், தன் பதினேழாவது வயதில் ரோம் நகரில் இருந்த பிரபல பள்ளி ஒன்றில், பள்ளிப்படிப்பை முடித்தான். 1923ஆம் ஆண்டு ரோம் சர்வ கலாசாலையில் என்ஜினீயரிங் படிப்புக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அங்கேதான் அவனது சகோதரனும், பள்ளித் தோழர்களும் படித்து வந்தனர். ஆனால் தன் சகோதரன், எதிர்காலத்தை வீணாக்கக்கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் மேஜர்னாவை விஞ்ஞானம் படிக்கச் சொன்னான், அவன் சகோதரன் லூசியானோ.

1928இல் விஞ்ஞானத்தைப் பயிலத் தொடங்கிய மேஜர்னா வின் ஆசிரியராக இருந்தவர்தான் என்ரிகோ பெர்மி!

ஒரே வருடத்தில் தன் கடின உழைப்பினால் டாக்டர் பட்டம் பெற்று விட்டான் மேஜர்னா. அதே சமயம் அவன் தொடர்ந்து விஞ்ஞானி பெர்மியுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டாலும் அடுத்த ஐந்தாண்டுகளில் இருவரும் அணு விஞ்ஞான ஆராய்ச்சியில் தீர்க்க முடியாத பல பிரச்னைகளுக்கு விடை கண்டார்கள்.

மேஜர்னா தன் ஆராய்ச்சிகளின் பலனாக வெளியிட்ட முடிவுகள் மொத்தம் ஒன்பதுதான். 1928ஆம் ஆண்டிலிருந்து

1937ஆம் ஆண்டு வரை இந்த அறிக்கைகள் வெளியிடப் பட்டன. என்றாலும், விஞ்ஞான உலகத்தின் மகத்தான சாதனைகளாக அவற்றை இன்னும் கருதுகிறார்கள்.

அவன் என்ன செய்தான் என்பதன் விரிவான விளக்கமும், தீராத பிரச்னைகள் - கணக்குகளை எப்படி முடிப்பது என்பதும் தெளிவாக அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவ்வளவு அறிவு பூர்வமாக யாரும் யோசித்து தங்கள் முடிவுகளைச் சொன்னதில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஓர் ஆராய்ச்சியின் முடிவுதானே இன்னோர் ஆராய்ச்சியின் தொடக்கம்? இதற்கு வித்திட்டவன் மேஜர்னா. சற்று சோம்பேறித் தனமும் கடுமையாகப் பேசக்கூடிய சுபாவமும் கொண்டவன் என்றாலும் அவனுடைய புத்திசாலித்தனத்திற்குத்தான் அறிஞர்கள் மதிப்பளித்தார்கள்.

தன்னுடைய குருநாதர் பெர்மியின் தூண்டுதலின் பலனாக அவன் 1939ஆம் ஆண்டு இத்தாலியை விட்டு ஜெர்மனிக்குச் சென்றான். அங்கே இருந்த தேசிய ஆராய்ச்சி மையம், அவனுக்கு சகல வசதிகளுடன் ஆராய்ச்சிகளுக்குரிய அனுமதியளித்தது. அங்கே அவன் இன்னொரு நோபல் பரிசு பெற்ற வெர்னர் ஹெப்சன் பெர்கைச் சந்தித்தான். அவரைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''ஓர் அருமையான விஞ்ஞானியையும், சிறந்த நண்பரையும் பெற்றேன்'' என்று குறிப்பிட்டிருக்கிறான் மேஜர்னா. ஹெப்சன், நிறைய ஆராய்ச்சி நூல்களை வெளியிடுமாறு மேஜர்னாவைத் தூண்டிக் கொண்டே இருந்தார்.

உடல்நலக் குறைவால், 1933ஆம் ஆண்டே ரோமுக்குத் திரும்பி வந்து விட்ட மேஜர்னா, கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டான். இதனால் தானாகவே அவனுக்கு நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு விட்டது. உடல் மெலிந்தது. கடுமையான விரதத்தாலும், நோயின் உபாதையாலும், ஏற்கெனவே கடுமையாக இருந்தவன் இப்போது எல்லார் மீதும் எரிந்து விழுந்தான். அவனது குடும்பத்தாரும் இதற்கு விலக்கில்லை.

கோடை கால விடுமுறையின்போது தன் தாயை அழைத்துக் கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்பவன், இந்தமுறை அது நடைபெறாது என்று தன் தாய்க்கும் கடிதம் எழுதி விட்டான்.

தொழிலைக் கவனிக்க, விஞ்ஞான இன்ஸ்டிட்யூட்டுக்குப் போவதும் குறைந்து போனது. வீட்டை விட்டு வெளியே போவதைப் பற்றியே அடிக்கடி யோசிக்கத் தொடங்கினான். ஓர் இளம் விஞ்ஞானி, முன்னுக்கு வர வேண்டியவன் - தனிமையை நாடும் சந்நியாசியைப் போலானான்.

அதுவும் சிறிது காலம்தான். நான்காண்டுகள் தனிமையை அனுபவித்த பிறகு, 1937ஆம் ஆண்டு பழையபடி வெளியே வந்த பிறகு, தன் ஆராய்ச்சியைத் தொடர்ந்து, அவனுடைய சிறந்த ஆராய்ச்சி அறிக்கையை உலகிற்குச் சமர்ப்பித்தான். தொடர்ந்து நேப்பிள்ஸ் சர்வ கலாசாலையில் ஒரு விஞ்ஞானப் பேராசிரியராக அவன் நியமிக்கப்பட்டான்.

தன்னைப் பற்றியே உயர்வாக நினைத்துக் கொண்டிருந்த அவன் நடத்தும் வகுப்புகளுக்கு மாணவர்கள் அதிகமாக வருவதே இல்லை. ஏனெனில் அங்கே வரும் மாணவர்களுக்கு அவன் என்ன சொல்கிறான் என்றே புரியவில்லையாம்.

1938ஆம் ஆண்டு, ஜனவரி 22ஆம் தேதி ரோம் நகர வங்கியில் இருந்த பணத்தையெல்லாம், நேப்பிள்ஸ் நகர வங்கி ஒன்றிற்கு மாற்றித் தருமாறு தன் சகோதரனிடம் கேட்டுக் கொண்டான். தொடர்ந்து இதுவரை தன் வேலைக்காக சம்பளமே வாங்காமல் இருந்த மேஜர்னா இப்போது அதைக் கேட்டுப் பெற்று ஒரு பெரும் தொகையைச் சேர்த்தான். இந்தப் பணம் - பாஸ்போர்ட் ஆகியவற்றுடன் கப்பல் ஏறிய மேஜர்னா திடீரென காணாமற் போனான்.

ஒரு பிரபல விஞ்ஞானி திடீரெனக் காணாமற் போய்விட்டதால் விசாரணை மிகவும் வேகமாகத் தொடர்ந்தது. பல சந்தேகங்கள் - பல சாட்சியங்கள் - பலவிதமான துப்புகள் எல்லாம் கிடைத்தும் - அவற்றால் எந்த முடிவும் கிடைக்கவில்லை.

மார்ச் 26ஆம் தேதி தந்தியும், கடிதமும் அனுப்பிய மேஜர்னா அப்போது கப்பலில் நேப்பிள்ஸ் நகருக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஏனெனில் அவன் பிரயாணம் செய்வதற்காக வாங்கிய டிக்கெட்டை துறைமுகத்தில் இறங்கும்போது கொடுத்திருக்கிறான். ஆனால் அந்தப் பயணச் சீட்டை சாட்சியாகக் கொண்டு வரும்படி கேட்டபோது அது காணாமற் போய்விட்டதாகச் சொல்லி விட்டார்கள்.

இன்னொரு பயணி முதலில் தன் அறையில், தன்னுடன் தான் மேஜர்னா பிரயாணம் செய்தான் என்று சொன்னவன், கடைசியில் 'என்னுடன் பிரயாணம் செய்தவன் பிரபல விஞ்ஞானி மேஜர்னா என்று எனக்குத் தெரியாது' என்று கூறிவிட்டான். ஆனால் ஒரு நர்ஸ், மார்ச் 26ஆம் தேதி நேப்பிள்ஸில் வந்திறங்கிய மேஜர்னாவை, தான் பார்த்ததாக உறுதியாகச் சொன்னாள்.

அவனது குடும்பத்தார் 'காணாமற் போனவன்' என்று அவன் படத்தைப் பிரசுரித்து விளம்பரப்படுத்தினார்கள். அதற்குப் பலன் ஜூலை மாதம் கிடைத்தது. நேப்பிள்ஸில் இருந்த ஒரு பாதிரியார் மடத்தின் தலைமைப் பாதிரியார் தகவல் சொன்னார்.

படத்தில் காணப்பட்ட தோற்றத்தைப் போல் ஒருவன் மார்ச் மாதக் கடைசியிலோ அல்லது ஏப்ரல் மாதத் தொடக்கத்திலோ தங்களிடம் வந்ததாகவும், இந்த மடத்தில் சில நாள்கள் விருந்தாளியாகத் தங்க முடியுமா என்று கேட்டதாகவும் அந்தப் பாதிரியார் சொன்னார். 'அது எப்படி முடியும்?' என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, அந்த நபர் அங்கிருந்து புறப்பட்டுப் போய் விட்டதாகவும், பிறகு திரும்பி வரவேயில்லை என்றும் அந்தப் பாதிரியார் தன் சாட்சியத்தை முடித்தார்.

அவன் மடத்திற்கு வந்த தேதி என்ன என்று மட்டும் அவரால் நிச்சயமாகக் கூற முடியவில்லை. அதாவது அது நேப்பிள்ஸ் நகரத்தை விட்டுப் போகும் முன்பா அல்லது திரும்பி அங்கே வந்த பிறகா என்பதைத்தான் அவரால் சரியாகச் சொல்ல முடியவில்லை.

ஏப்ரல் மாதம் பன்னிரண்டாம் நாள், மேஜர்னாவைப் போல் உருவமுள்ள ஒருவன் இன்னொரு மடத்திற்குப் போய், பாதிரியாக வேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறான். அங்கேயும் அவன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இதையெல்லாம் பார்க்கும்போது, ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடிகிறது என்கிறார், லியனார்டோ சிசியாசியா என்னும் எழுத்தாளர். நாற்பதாண்டுகளுக்குப் பிறகு மேஜர்னாவைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியவர் அவர்.

தன் மீது திணிக்கப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகள், தன்னால் ஒழுங்காகப் பாடம் நடத்த முடியாமல் போனது, உடல் உபாதை போன்ற தொல்லைகளிலிருந்து விடுபட, ஏதாவதொரு பாதிரியார் மடத்தில் சேர்ந்து, ஆண்டவனைப் பிரார்த்தனை செய்து கொண்டு தன் வாழ்நாளைக் கழித்து விடலாம் என்று அவன் நினைத்திருக்க வேண்டும். இப்படித்தான் அந்த எழுத்தாளர் எழுதியிருந்தார்.

ஆனால் தொடர்ந்த ஆராய்ச்சிகள் வேறுவிதமாக புதிய தகவல்களைத் தெரிவிக்கின்றன. மேஜர்னா தென் அமெரிக்கா விற்குப் போயிருக்கக் கூடும் என்கிற தகவல்தான் அது.

சிசிலியன் விஞ்ஞானியாக கேர்லாஸ் ரிவிரா 1950ஆம் ஆண்டு அர்ஜென்டைன் நகரில் வசித்தார். அப்போது அவர் தற்காலிகமாக ஒரு முதிய பெண்மணியின் வீட்டில் தங்கியிருந்தார்.

ஒருநாள் அந்தப் பெண்மணி ரிவிராவின் விஞ்ஞானப் பேப்பர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது தற்செயலாக மேஜர்னாவின் படத்தைப் பார்த்திருக்கிறார். அதைக் கண்ட அவள் தன் மகனுக்கு இந்தப் படத்திலுள்ள விஞ்ஞானியைத் தெரியும் என்று சொல்லியிருக்கிறாள். அத்துடன் இன்னொரு தகவலையும் அவள் சொன்னாள். படத்தில் உள்ள இந்த நபர், தன் விஞ்ஞான ஆராய்ச்சிகளை முற்றிலுமாகத் துறந்து விட்டு என்ஜினீயராக மாறி விட்டார். இது எப்படி என்று விசாரிப்பதற்குள் ரிவிரா, அந்த நகரை விட்டு அவசரமாக வெளியேற வேண்டியிருந்தது.

ஆனால் 1960ஆம் ஆண்டு மீண்டும் புவனஸ் அயர்ஸுக்கு வந்த அந்த சிசிலியன் விஞ்ஞானி ரிவிரா ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது கையைத் துடைக்க வைத்திருந்த வெள்ளைத் தாளில் அப்போது தன் மனத்தில் தோன்றிய சில கணக்குகளைப் போட்டுப் பார்த்திருக்கிறார்.

இதைக் கவனித்த, அவர் அமர்ந்திருந்த டேபிளைக் கவனித்த வெயிட்டர், ''இதைப் போல காகித 'நாப்கின்'களில் கணக்குகளைப் போட்டுப் பார்க்கும் இன்னொருவரையும் எனக்குத் தெரியும். அவர் இங்கே அவ்வப்போது வருவார். போவார். அவரது பெயர் எட்டோர் மேஜர்னா. யுத்தத்திற்கு முன் இத்தாலியிலிருந்து இங்கு வந்து விட்டார்'' என்று சொன்னான்.

இந்தத் தடயத்தை வைத்துக் கொண்டும் மேற்கொண்டு தொடரவே முடியவில்லை. ஏனெனில் அந்த வெயிட்டருக்கு, மேஜர்னா இருக்குமிடம் தெரியவில்லை. அதனால் ரிவிரா அப்போது தன் முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

ஆனால் ரிவிரா, காணாமற் போன விஞ்ஞானியை முழு மூச்சோடு கண்டுபிடிக்க முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார் என்பதை 1970ஆம் ஆண்டு அறிந்த மேஜர்னாவின் சகோதரி மரியாவும், அவரது கணவரும் விஞ்ஞானியுமான எராஸ்மோ ரிகேமியும், இந்தத் தகவல்களையெல்லாம் வைத்துக் கொண்டு மேற்கொண்டு தொடர விரும்பினார்கள்.

இன்னொரு தடயம் அவர்களை அர்ஜென்டைனா பக்கம் இழுத்துக் கொண்டு போனது. கௌதமாலாவில் பிரபல எழுத்தாளராக இருந்து மறைந்து விட்ட ஏஞ்சல் ஆஸ்டாரிபஸின் மனைவி, அவர்களுக்கு உதவ முன் வந்தாள்.

1960ஆம் ஆண்டு, காணாமற் போன இந்த விஞ்ஞானியை எலியனோரா, மஞ்சோனி என்கிற இரு சகோதரிகளின் வீட்டில் தாம் சந்தித்ததாக அந்தப் பெண் சொன்னாள். அவள் எலியனோரா வுக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதி என்பதும் எலியனோரா

கண்க்கில் மெத்தப் படித்தவள் என்பதும் அவள் சொன்ன தகவல்கள்.

மேற்கொண்டு உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள் என்ற போது மிஸஸ் ஆஸ்டாரிபஸ் பின் வாங்கி விட்டாள். ஏனெனில் மேஜர்னாவை அவள் நேரில் பார்க்கவே இல்லை. இரு சகோதரிகளுக்கும் அவன் மிகவும் வேண்டியவன் என்று பிறர் சொல்லக் கேட்ட தகவலைத்தான் அவள் சொல்லியிருக்கிறாள். எலியனோரா இறந்து விட்டதால், அவளது சகோதரி மஞ்சோனி இவர்களுக்கு ஏதாவது தகவல் தரலாம் என்றும் மிஸஸ் ஆஸ்டாரிபஸ் சொல்லி வைத்தாள். ஆனால் அந்த இரு சகோதரிகளும் மேஜர்னாவைப் பற்றி எந்தத் தகவல்களையும் தர மறுத்து விட்டார்கள். சொல்லக்கூடாது என்று இந்த மூன்று பெண்களும் ஒப்பந்தம் செய்து கொண்டார்களோ?

ஏனெனில் அவர்களுக்குக் கிடைத்த இரண்டு முக்கியமான தடயங்கள், அர்ஜென்டினாவைத் தான் நிலைக்களமாக காட்டின.

1938ஆம் ஆண்டே இந்த விஞ்ஞானி அர்ஜென்டைனாவுக்குப் போயிருக்க வேண்டும். ஆனால் எதற்காக ஓடினான், எதைக் கண்டு பயந்தான் என்பதற்கான காரணங்கள் எதுவுமே தெரியவில்லை. ஆனால் என்ரிகோ பெர்மி குறிப்பிட்டது போல் ஏதோ ஓர் ஆராய்ச்சியில் அவன் தோல்வியடைந்திருக்க வேண்டும். அதனால் விளைவுகளுக்குப் பயந்து அவன் காணாமற் போயிருக்க வேண்டும். அவனைப் போல் ஒரு புத்திசாலி, மறைய வேண்டும் என்று நினைத்து முடிவு எடுத்திருந்தால், அதை நிச்சயம் யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடிதான் செய்திருப்பான்.

எல்லாருமே மேஜர்னாவை முற்றிலும் மறந்துவிட்ட நிலையில் 1975ஆம் ஆண்டு, 'மேஜர்னா கேஸ்' என்ற பெயரில் லியர்னாடோ சிசியாசியா என்கிற இத்தாலிய எழுத்தாளர் ஒருவர் நாவல் ஒன்றை எழுதினார். அரசியல், சமுதாயம், விஞ்ஞானம் போன்ற தலைப்புகளில் கதை எழுதும் எழுத்தாளர் அவர்.

இந்த நாவலை எழுதிய அவர் மற்றவர்கள் சொன்ன தடயங்களை எல்லாம் விவரமாக ஆராயத் தொடங்கினார். இத்தாலியை விட்டு அந்த விஞ்ஞானி ஏன் வெளியேறினான் என்பதைக் கண்டு பிடிப்பதில் அந்தக் கதாசிரியர் தன் கவனத்தைச் செலுத்தினார். அப்போது அவருக்கு ஒரு விசித்திரமான விஞ்ஞானக் கோட்பாட்டைப் பற்றிய நினைவு வந்தது.

அதாவது மகா புத்திசாலியான மேஜர்னா, அணுவின் சக்தியால், அழிவு சக்தியைத் தோற்றுவிக்க முடியும் என்பதை எல்லாருக்கும் முன்பே தெரிந்து கொண்டு விட்டான். ஆனால் அப்போது நடந்து கொண்டிருந்த முசோலினியின் கொடுங்கோல் ஆட்சிக்கு தன் ஆராய்ச்சியின் முடிவு பயன்படக் கூடாது என்றுதான் அவன் இத்தாலியை விட்டு வெளியேறிவிட்டான் என்று குறிப்பிட்டிருந்தார் கதாசிரியர்!

இந்தக் கருத்து இத்தாலியில் பெரும் சர்ச்சைக்குள்ளானது. 1930ஆம் ஆண்டு எந்த விஞ்ஞானியும் அணு ஆராய்ச்சி செய்யவே இல்லை என்று மேஜர்னாவுக்குப் பின்னால் வந்த அமால்டி என்ற விஞ்ஞானி திட்டவட்டமாகச் சொன்னார்.

ஆனால் மறைந்த விஞ்ஞானியின் புத்திசாலித்தனத்தை மிகவும் நன்றாகத் தெரிந்து வைத்திருந்த எராஸ்மோ ரிகேமி, இந்தத் தியரியை மறுக்கவேயில்லை. ஏன் இருக்கக் கூடாது என்பது அவரது வாதமாக இருக்கலாம்.

ஆனால் மறைந்தவன், திரும்பவும் தோன்றவேயில்லை.

■

கொலையா? சதியா?

இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் சிலருக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜான். எஃப். கென்னடி, டெக்சாஸில் இருந்த டல்லஸ் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரியும். அவரைக் கொன்றவன் உடனே பிடிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டான் என்பது செய்தி.

இந்தக் காட்சியை தொலைக்காட்சிப் பெட்டியில் அநேகர் பார்த்தார்கள். ஆனால் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் ஒரு கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. கொலை செய்யப் பட்டதற்குக் காரணம் 'சதி' என்றால், அதன் பின்னணி என்ன?

கென்னடியின் ஆதரவாளர்கள், மற்றும் அரசியல் ஆலோசகர்கள், அவர் டல்லஸ் நகருக்குப் போகக் கூடாது என்று யோசனை சொன்னார்கள். ஏனெனில் டெக்சாஸ் மாகாணத் தில்அவருக்கு நிறைய விரோதிகள் - அதாவது அவரது கொள்கையைப் பிடிக்காதவர்கள் - இருந்தார்கள்.

யாருடைய பேச்சையும் அவர் கேட்கத் தயாராகயில்லை. அந்த மாகாணத்திற்குச் சென்று தான் யாருக்கும் விரோதி அல்லர் என்பதை விளக்கி அங்கேயிருக்கும் பிரமுகர்களிடம் நட்புரிமை பாராட்டி, அவர்களைத் தன் வழிக்குத் திருப்பவேண்டும் என்று அவர் நினைத்தார். முக்கியமாக அங்கே கவர்னராக இருந்த ஜான் கொனல்லி என்பவர் கென்னடியைப் பிடிக்காதவர் மட்டுமல்லர்; விரைவில் தேர்தல் நடத்தியாக வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தவர். தேர்தலை அடுத்த ஆண்டே நடத்த வேண்டும் என்று நினைத்தவர். இருந்தாலும் தன் மாகாணத்திற்கு ஜனாதிபதி வரும்போது வரவேற்காமல் இருக்க முடியுமா?

டல்லஸ் விமான நிலையத்தில் கென்னடியையும் அவரது துணைவியார் ஜேக்குலினையும், கவர்னர் கொனல்லியும் அவரது துணைவியாரும் வரவேற்றனர்.

கார்களின் ஊர்வலம் புறப்பட்டது.

இரண்டாவதாக வந்த திறந்த காரில் கென்னடியும் அவரது மனைவியும், கவர்னரோடும் அவரது துணைவியாரோடும் அமர்ந்திருந்தனர்.

ஊர்வலம் புறப்பட்டது. மக்கள் வெள்ளம் சாலையின் இரு பக்கமும் கூடி ஆரவாரத்துடன் ஜனாதிபதிக்கு வாழ்த்து கூறினார்கள்.

கவர்னரின் மனைவி மக்களின் மகிழ்ச்சியைப் பற்றி ஜனாதிபதியிடம் கூறி, ''டல்லஸ் மக்கள் உங்களை வெறுக்கிறார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டாள். அவளது பெயர் நெல்லி.

அப்போது மணி மதியம் 12.30. பகல் விருந்துக்குப் போகும் முன், ஒரு சிறிய விழாவில் ஜனாதிபதி கலந்து கொள்ள வேண்டியிருந்தது.

கார்களின் ஊர்வலம் ஓர் இடத்தில் சற்று நிதானித்தது. ஏனெனில் வலப் பக்கமாகத் திரும்பி மீண்டும் இடப் பக்கமாகப் போனால்தான் போகும் இடத்தை எளிதில் அடைய முடியும். திட்டமும் அதேபோல்தான் போடப்பட்டிருந்தது.

முதலில் சென்ற காரில் இருந்தவன் டிரைவரிடம், ''இன்னும் ஐந்து நிமிடங்களில் குறித்த இடத்தை அடைந்து விடலாம்'' என்றான்.

இன்னொரு காரில் இருந்த ஜனாதிபதியின் காரியதரிசி ஈவ்லின் லிங்கோலன், ''டல்லஸின் மையப் பகுதிக்கே வந்து விட்டோம். எங்கும் ஆர்ப்பாட்டம், கூச்சல் ஏதுமில்லையே'' என்றாள், அருகில் இருந்த உள்ளூர்ப் பெண்மணியிடம்.

அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்: ''நாங்கள் ஒன்றும் அவ்வளவு மோசமானவர்கள் அல்லர்!''

வழி நெடுக நின்று கொண்டிருந்த மக்கள் வெள்ளத்தில், ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த ஆப்ரகாம் ஜப்ருடர் என்ற நபர் தன் கேமிராவை, ஜனாதிபதி வரும் காரின் பக்கம் திருப்பிப் படம் எடுத்தான். அவனருகில் நின்று கொண்டிருந்த வேறொருவன் தன் மகனை மேலே தூக்கி ஜனாதிபதியைப் பார்க்கச் சொன்னான். அதைக் காரிலிருந்தே பார்த்து விட்ட ஜனாதிபதி, கையை அசைத்து, பையனைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

இந்தச் சமயத்தில்தான் துப்பாக்கியின் வெடி சப்தம் திடீரெனக் கேட்டது. கென்னடியின் கழுத்தில் பாய்ந்த குண்டு வேகமாக வெளிவந்து அருகில் இருந்த கவர்னரின் மார்பு, முதுகை உரசியது. கென்னடி தன் கழுத்தைப் பிடித்துக் கொண்டார். கொனல்லியின் மடி நிறைய ரத்தம். தன் மனைவியின் மீது திடீரெனச் சாய்ந்தார். அவள் முன் இருக்கையில் அமர்ந்திருந்தாள். கவர்னர் போட்ட சப்தத்தினால் திரும்பிய திருமதி கென்னடி, இன்னொரு குண்டு தன் கணவரின் மண்டையைச் சிதற அடித்ததைத்தான் பார்த்தாள்.

அமெரிக்காவின் 35ஆவது ஜனாதிபதியான கென்னடி, 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் தேதி கொலை செய்யப்பட்டதை அறிந்து உலகமே ஸ்தம்பித்தது. அன்றிலிருந்து தொடர்ந்து நான்கு நாள்களும் மக்கள் தங்களின் தொலைக் காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்தவர்கள் நகரவேயில்லை. எப்படி இந்தக் கொலை நடந்தது என்பதை, பல்வேறு கோணங்களில் காட்டியது அமெரிக்கத் தொலைக்காட்சி.

டெக்சாஸ் புத்தக மையத்திலிருந்து ஆறாவது மாடியின் ஜன்னலோரத்தில் நின்று இரண்டு முறை சுட்ட, லீ ஹார்வே ஆஸ்வால்டு, நிதானமாக இறங்கிப் போனான். ஆனால் 1.15 மணிக்கு அவனை ரோட்டில் நிறுத்தி கேள்வி கேட்ட ஜெ.டி. டிப்பிட் என்னும் போலீஸ்காரரை ஆஸ்வால்டு துப்பாக்கியால் சுட்டான். இதைப் பார்த்த மக்களில் சிலர் போலீஸுக்குத் தகவல்

தந்து அருகில் இருந்த சினிமா தியேட்டரில் ஆஸ்வால்டு ஒளிந்திருக்கக் கூடும் என்றார்கள். போலீஸ்காரர் டிப்பிட்டைக் கொலை செய்ததற்காக உடனே கைது செய்யப்பட்ட ஆஸ்வால்டு ஜனாதிபதியைக் கொன்றவன் என்றும் குற்றம் சாட்டப்பட்டான்.

முதல் குற்றத்தைத் தான் செய்ததாக ஒப்புக் கொண்டாலும், இரண்டாவது குற்றத்தை தான் செய்யவில்லை என்றும் யாரோ செய்த கொலைக்காக தன்னைப் பலிகடா ஆக்குவதாகவும் சொன்னான்.

12.38 மணிக்கு பார்க்லேண்ட் மெமோரியல் மருத்துவமனையில் ஜனாதிபதி கென்னடி சேர்க்கப்பட்டார். ஆனால் இரண்டு மணிக்கு அவர் இறந்து விட்டதாக டாக்டர்கள் கூறி விட்டனர். அதற்கு முன்பே ஒரு பாதிரியார் ஜான் கென்னடியின் படுக்கை அருகே வரவழைக்கப்பட்டிருந்தார். உள்ளூர் அதிகாரிகள், மக்களின் எதிர்ப்பையெல்லாம் பொருட்படுத்தாமல், கென்னடியின் உடல் ஒரு சவப்பெட்டியில் வைக்கப்பட்டு, விமான நிலையத்திற்குக் கொண்டு போகப்பட்டது.

அடுத்த ஒரு மணி நேரத்தில் லிண்டன் பி. ஜான்சன் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். நீதிபதி சாரா. டி. ஹாக்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். போர்ப் படையைச் சேர்ந்த விமானத்தில் நடந்த பதவி ஏற்பு விழாவின் போது, கென்னடியின் மனைவி ஜாக்குலின் ரத்தக்கறை படிந்த உடைகளுடன் அருகில் நின்று கொண்டிருந்தார்.

அன்று மாலையே ஜனாதிபதியின் மொத்தக் குழுவும் வாஷிங்டனுக்கு வந்து சேர்ந்தது. அங்கே இருந்த கடற்படை மருத்துவமனையில் கென்னடியின் பிரேத பரிசோதனை நடைபெற்றது.

நவம்பர் 23ஆம் தேதி ஆர்லிங்டன் தேசிய மயானத்தில் கென்னடியின் உடலைப் புதைப்பதற்காக ஒரு தனியிடத்தைத் தேர்ந்தெடுத்தார் ஜாக்குலின். சவ அடக்கம் திங்களன்று நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதே சமயம் டல்லஸில் ஆஸ்வால்டு மிகவும் கடுமையாக மூன்று மணி நேரம் தீவிர விசாரணைக்குள்ளானான்.

எஃப்.பி.ஐ. டைரக்டர் எட்கார் ஹூவெரின் வேண்டுகோளுக் கிணங்க, டல்லஸ் போலீஸ் காவலிலிருந்து ஆஸ்வால்டு ஷெரீப்பின் காரியாலயத்திற்குக் கொண்டு போகப்பட்டான். அந்த இடமாற்றம் நடந்து கொண்டிருக்கும்போது, டல்லஸ் நகரின் ஒரு பிரபல இரவு கேளிக்கை விடுதியை நடத்தும் ஜேக் ரூபி என்பவன், கும்பலில் இருந்து வெளியே வந்து நிருபர்கள், தொலைக்காட்சி கேமிராக்கள் முன்பு ஆஸ்வால்டைச் சுட்டு வீழ்த்தினான்.

ஜனாதிபதி கென்னடியைச் சுட்டதனால் ஏற்பட்ட கோபத்தில் தான் இந்த கொடூரத்தைச் செய்ததாகவும் ரூபி சொன்னான். கணவனை இழந்து சோகத்தால் தவித்துக் கொண்டிருக்கும் ஜாக்குலின் இந்த ஆஸ்வால்டு விசாரணை நடக்கும் டல்லஸுக்கு வரும் வேதனையைத் தவிர்க்கவும் தான் இப்படி செயல்பட்டதாகவும் ரூபியின் வாக்குமூலம் தொடர்ந்தது.

நவம்பர் 25ஆம் தேதி, திங்கள் காலை ஒன்பது மணியளவில், கென்னடியின் சவ ஊர்வலம் தொடங்கியது. தலைநகரில் தாங்க முடியாத அளவுக்குக் கூட்டம். வெள்ளை மாளிகையில் தங்கு தடையில்லாமல் மக்கள் தங்களது மறைந்த ஜனாதிபதியை கடைசி முறையாகப் பார்க்க உள்ளே நுழைந்தார்கள்.

செயின்ட் மேத்யூ சர்ச்சில் நடந்த இறுதி விழா சடங்குகளை கார்டினல் குஷ்ஷிங் நடத்தி வைக்க, உலகத்தின் பல பாகங்களிலிருந்து வந்த தலைவர்கள் அங்கே கூடியிருந்தார்கள்.

இறக்கப் போகிறோம் என்று தெரியாத நிலையில் அன்று காலையில் தன்னுடைய ஆலோசகர் கென்னத் ஓ. டோனலிடம் பின் வருமாறு சொன்னார் ஜனாதிபதி. அதை தெரிந்துதான் சொன்னாரா அல்லது தெரியாமல் சொன்னர்ரா என்றே சொல்ல முடியாது.

அவர் சொன்னதாவது:

''யாராவது ஒரு நபர் ஜனாதிபதியைச் சுட வேண்டுமென்றால், அந்தக் காரியத்தை மிகவும் எளிதாகச் செய்து விடலாம். நல்ல உயரமான கட்டடத்தின் மீது ஏறி நின்று கொண்டு டெலஸ்கோப் பொருத்திய துப்பாக்கியை உபயோகித்து சுட்டால், யாராலும் அதைத் தடுக்க முடியாது.''

இப்படித்தானே அவரது கொலை நடந்தது?

இது கென்னடிக்கு முன்பே தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை.

இந்தக் கொலை விவகாரத்தை, வாரன் கமிஷன் தன் அறிக்கையிலும் இதே தோரணையில்தான் குறிப்பிட்டிருந்தது. கமிஷனின் தலைவர் தலைமை நீதிபதி வாரன் பிரபு.

1964ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் தேதி, 26 பாகங்கள் அடங்கிய தன் அறிக்கையை அவர், ஜனாதிபதி ஜான்சனிடம் சமர்ப்பித்தார். முடிவாக அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது?

''அமெரிக்க ஜனாதிபதி ஜான். எஃப். கென்னடி, ஒரு வக்ரமான மூர்க்கன் லீ ஹார்வே ஆஸ்வால்டு என்னும் நபரால் சுட்டுக் கொல்லப்பட்டான்.''

வாரன் கமிஷன், மிகவும் விவரமாக விசாரணைகள் நடத்திக் கொண்டிருந்தபோதும் பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. ஆஸ்வால்டு இந்தக் கொலையை தன்னிச்சையாக செய்தே இருக்க முடியாது. அவனுக்குப் பின்னால் ஒரு சர்வதேச சதிக் கும்பல் இருந்திருக்கலாம் என்னும் சந்தேகந்தான் அது.

யார் மீது சந்தேகம் விழுந்தது?

க்யூபாவின் சர்வாதிகாரி பிடல் கேஸ்ட்ரோ, ரஷ்யாவின் ரகசிய போலீஸ் அதிகாரிகள் போன்றோர் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும்.

இன்னொரு சாரார், 'உள்நாட்டு சதியாக இருக்கலாம்' என்றார்கள். 'இதற்கு எஃப்.பி.ஐ மற்றும் சி.ஐ.ஏ. போன்ற உளவு

ஸ்தாபனங்கள் காரணமாகவும் இருக்கலாம்' என்றும் சொன்னார்கள்.

இவை யாவும் இந்தச் சதியில் ஈடுபடவில்லை என்றால் கூட மாபியா கும்பலைத் தவிர்க்கவே முடியாது என்றும் சொல்லப் பட்டது.

கென்னடியின் மரணத்தைக் குறித்த விசாரணை வாரன் கமிஷன் அறிக்கையுடன் முடிந்து விடவில்லை. 1976-1978ஆம் ஆண்டு வரையில் இந்தக் கொலையின் மறு விசாரணை தொடங்கப்பட்டு மீண்டும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

பிணப் பரிசோதனை செய்த கடற்படை மருத்துவமனையில் முறைப்படியான சோதனைகள் சரிவர நடத்தப்படவேயில்லை. ஏனெனில் அந்த வேலையில் ஈடுபட்ட டாக்டர்களில் ஒருவர், ''ஜனாதிபதியின் உடலில் குண்டுகள் சென்ற பாதையைப் பார்க்க வேண்டும்'' என்பதற்கு அவர் மிகவும் முக்கியமான அதிகாரிகளால், தடுக்கப்பட்டு விட்டதாக அந்த டாக்டர் தன் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

குண்டுகள் சென்ற பகுதியைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல் துப்பாக்கி எந்தக் கோணத்திலிருந்து சுடப்பட்டது என்பதை நிச்சயம் நிர்ணயிக்கவே முடியாது.

இரண்டு குண்டுகளும், புத்தக மையத்தின் ஜன்னலோரத்தி லிருந்து வெளிப்பட்டதா... அல்லது ஒரு குண்டு மட்டும் வேறு பக்கத்திலிருந்து வந்ததா என்பதை அறிய அந்தப் பரிசோதனை மிகவும் முக்கியம். அதைச் செய்யக் கூடாது என்று டாக்டரை ஏன் தடுக்க வேண்டும்?

கென்னடியின் மூளையும் சில முக்கியமான தடயங்களும் (அதாவது பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்டவை) கென்னடியின் காரியதரிசியிடம் பத்திரமாக ஒப்படைக்கப் பட்டன. 1966இல் இந்தப் பொருள்கள் தேசிய தொல்பொருள் ஆராய்ச்சிக் கூடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டன. ஆனால்

அங்கேயிருந்து கென்னடியின் மூளை மட்டும் காணாமற் போய் விட்டது எதற்காக? சாட்சிகளை மறைக்கவா?

வாரன் கமிஷன் முடிவாகச் சொன்னதென்ன?

பின்புறம் இருந்து சுடப்பட்ட இரண்டு துப்பாக்கிக் குண்டு களினால் கென்னடி இறந்து போனார். அவரை மேலேயிருந்து சுட்டது ஆஸ்வால்டுதான்.

இந்த முடிவுக்கு அவர்கள் வந்ததற்கு முக்கிய காரணம் ஜாப் ரூடரின் புகைப்படமும், குற்றவியல் நிபுணர்கள் போட்டுக் கொடுத்த சித்திரங்களும்தான்.

1970ஆம் ஆண்டு இன்னொரு சாட்சியம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நவம்பர் 22ஆம் தேதி கென்னடியின் ஊர்வலத்தின்போது பாதுகாவலனாக வந்த ஒரு போலீஸ்காரனின் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த 'டேப் ரிக்கார்டர்'.

ஆனால் அது சரிவர வேலை செய்யவில்லை என்று கிடப்பில் போடப்பட்டது. ஏனெனில் அதிலிருந்து தெளிவான சப்தமே வரவில்லை.

ஆனால் இப்போது அதை எடுத்து, கம்ப்யூட்டர் உதவியுடன் அதில் என்ன பதிவாகியிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்ததால், அதனால் ஓரளவுக்குத் தகவல் தெரிந்தது.

1978ஆம் ஆண்டுதான் அந்த டேப் ரிக்கார்டரில் பதிவான சப்தங்கள் மூலம், நான்கு குண்டுகள் வெடித்த சப்தத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. மூன்று வெடிகள் மேலேயிருந்தும், இன்னொன்று மிக அருகில் இருந்தும் வெடித்ததாக சப்தம் பதிவாகியிருந்தது.

ஆஸ்வால்டு மூன்று குண்டுகளை வெடித்ததற்கு சாட்சிகள் இருந்தன. ஆனால் நான்காவது குண்டு?

மிகவும் அருகிலிருந்து சுடப்பட்டதாக அல்லவா தெரிகிறது! ஊர்வலத்துக் கும்பலில் நின்று கொண்டிருந்த யாரோ ஒருவன், கென்னடியைப் பார்த்து சுட்டிருக்க வேண்டும்.

நான்காவது வெடி சப்தம் கேட்டது என்று சொன்ன சாட்சியங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டது வாரன் கமிஷன்.

துப்பாக்கி சுட்ட புகை வந்ததைக் கூட, காரின் புகை என்று சொல்லிவிட்டார்கள்.

சுட்டுவிட்டு ஓடியவனைப் பிடிக்க, ஓடிய மூன்று மனிதர்கள் அதில் வெற்றியடையவில்லை. ஜப் ரூடரின் படம் எதைக் காட்டியது?

முதல் குண்டு தலையில் பட்டதுமே கென்னடியின் தலை தொங்கிப் போனது தெரிந்தது. அடுத்து எடுக்கப்பட்ட படங் களும் அவரது பாதித் தலை சிதறியதை மிகவும் துல்லியமாகக் காட்டின.

எல்லா சாட்சியங்களையும் வைத்துப் பார்த்தபோது கென்னடி யாரோ செய்த சதியால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று 1979ஆம் ஆண்டு கொடுத்த அறிக்கை சொன்னது. யார் அந்த சதிகாரர்கள் என்பதை அந்த அறிக்கை சொல்லவில்லை.

இத்தனை விசாரணைகள் நடந்த பின்பும் கொலைகாரன் ஆஸ்வால்டைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ள முடியவில்லை. அவன் ஏன் கொலையில் ஈடுபட்டான் என்பதற்கான காரணமும் தெரியவில்லை.

பதினாறு வயதில் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்ட அவன், 1956ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதி அமெரிக்கக் கடற்படையில் சிப்பாயாகச் சேர்ந்தான்.

ரேடார் மெக்கானிக்காக தேர்வு பெற்றவுடன் டோக்கியோ விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டான். ஓய்வு நேரங்களில் நண்பர்களுடன் அரட்டையடிப்பது, கம்யூனிஸம் சம்பந்தமான புத்தகங்களை ஆழ்ந்து படிப்பது போன்றவைதான் அவனது பொழுது போக்கு. கம்யூனிஸத் தத்துவம்தான் உலகில் மிகச் சிறந்தது என்று அப்போதே எல்லாரிடமும் சொல்லிக் கொண் டிருந்தானாம்.

1958ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குத் திரும்பி வந்த ஆஸ்வால்டு, இரண்டு முறை 'கோர்ட் - மார்ஷல்' தண்டனையைப் பெற்றான். ஒரு முறை அனுமதியில்லாமல் துப்பாக்கி வைத்திருந்த காரணத்திற்காகவும், இன்னொரு முறை சக இராணுவத்தினனை கடுமையான, எரிச்சலூட்டும் வகையில் திட்டியதற்காகவும் இந்த தண்டனை.

எப்போதுமே கம்யூனிஸ அரசியல் பேசிய அவன், க்யூபாவின் தலைவராகப் பதவியேற்ற பிடல் காஸ்ட்ரோவின் தீவிர ஆதரவாளன் ஆனான்.

தன் தாயாருக்கு உடல்நலம் சரியாக இல்லை என்று சொல்லி, இராணுவத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டான். பல நாடுகளைச் சுற்றிய பிறகு மாஸ்கோ போய்ச் சேர்ந்தான். அங்கே 1959ஆம் ஆண்டு, அக்டோபர் 31ஆம் தேதி அமெரிக்கத் தூதரகத்திற்குச் சென்று தன் அமெரிக்கப் பிரஜா உரிமையை ரத்து செய்து விட்டு, ரஷ்யக் குடிமகனானான்.

ரேடார் தொழில் நுட்பங்களை அவன் ரஷ்யர்களுக்குக் கற்றுத் தர முன் வந்தான். அதனால் லகுவாக அமெரிக்க விமானத்தை யும் ரஷ்யர்களால் எளிதில் சுட்டு வீழ்த்த முடிந்தது.

இதனால் பாரிஸில் நடந்த அமெரிக்க - ரஷ்ய உச்சி மாநாடு பாதியில் கலைந்தது.

ஆஸ்வால்டு ரஷ்யாவில் இரண்டரை ஆண்டுகள் தங்கியிருந்தான். அங்கேயே ஒரு ரஷ்யப் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டான். ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையானான்.

இதற்குப் பின்னும் அவனுக்கு ரஷ்யப் பிரஜா உரிமை கிடைக்கவில்லை. ரஷ்யர்களுக்கு எந்தவிதமான இராணுவ ரகசியத்தையும் சொல்லவில்லையென்று சொல்லி, அவனை 1962ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி ரஷ்யாவை விட்டு வெளியேற அனுமதித்தார்கள்

இதில் வேடிக்கை என்னவென்றால் அமெரிக்கா மீண்டும் அவனைத் தன் குடிமகனாக ஏற்றுக் கொண்டதுதான். அவன் ரஷ்யாவின் ஒற்றனாகச் செயல்பட்டானா என்பதைக் கூட அமெரிக்காவின் சி.ஐ.ஏ. விசாரிக்கவில்லை. கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பின்பும் பல கேள்விகள் கேட்கப்படாமலேயே விட்டுப் போயின.

ரஷ்யாவிலிருந்து வந்தவனை சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் தவறியது ஏன் என்பதற்கு விடையில்லை. டல்லஸ், போர்ட்வொர்த்தில் பல வேலைகளைச் செய்த பின்னர், திருப்தியடையாமல் 1963ஆம் ஆண்டு குளிர் காலத்தில் நியூ ஆர்லியன்ஸுக்குக் குடிபெயர்ந்தான் ஆஸ்வால்டு. அங்கே துப்பாக்கி ஒன்றை வாங்கிக் கொண்டான். அந்தத் துப்பாக்கியில் டெலஸ்கோபிக் லென்ஸும் இணைக்கப்பட்டிருந்தது. மிகவும் தொலைவில் இருப்பதைத் துல்லியமாகப் பார்த்துச் சுடுவதற்கு ஏதுவாக இருக்கும். அதை எப்போது உபயோகப்படுத்தினான்?

வாரன் கமிஷனில் இவ்வாறு சொல்லப்பட்டு இருந்தது.

மேஜர் ஜெனரல் எட்வின் ஏ. வாக்கர் முதலாளித்துவ எண்ணம் கொண்டவர். கன்சர்வேடிவ் மனிதர். க்யூபாவிற்குப் போர்ப் படைகளை அனுப்பச் சொல்லி கென்னடியை விடாமல் நச்சரித்துக் கொண்டிருந்தவர்.

இந்த மேஜரைக் கொன்று விட முயன்றான் ஆஸ்வால்டு என்பதுதான் வாரன் கமிஷன் செய்தி.

நியூ ஆர்லியன்ஸில் தன்னை ஒரு முக்கியமான அரசியல் பிரதிநிதியாக மாற்றிக் கொண்ட ஆஸ்வால்டு, க்யூபா நாட்டின் பிரதிநிதியாகவும் பிடல் காஸ்ட்ரோவின் புகழைப் பரப்ப வந்த தூதுவனாகவும் நடமாடிக் கொண்டிருந்தான். இதற்கு க்யூபா நாட்டின் ஆதரவு இருந்ததாகச் சொல்ல முடியாது. க்யூபாவின் ஆதரவாளராக இருந்த ஓய்வு பெற்ற தளபதி பானிஸ்டர் என்பவர் இவனுக்கு அவ்வப்போது உதவிகள் செய்து கொண்டிருந்தார். இந்த இருவரின் சலசலப்பு சர்க்காருக்கு எட்டாமல் இருக்குமா?

1963ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இரண்டு முறை ஆஸ்வால்டு கைது செய்யப்பட்டான்.

ஓர் அயல்நாட்டை வெளிப்படையாக மூர்க்கத்தனமாக ஆதரித்து, நடவடிக்கைகள் எடுத்தால் எந்த நாடுதான், அப்படிப்பட்ட துரோகிகளை விட்டு வைக்கும்?

இதனால் மனமுடைந்து போன ஆஸ்வால்டு, தான் அமெரிக்காவிற்குத் திரும்பி வந்தது தவறோ என்று நினைத்து, ரஷ்யாவிற்கே திரும்பிப் போக நினைத்தான். அதனால் செப்டம்பர் மாதம் மெக்ஸிகோ நகருக்குச் சென்றான். ரஷ்யாவுக்குப் போகத் திட்டமிட்டது இங்கிருந்துதான்.

க்யூபா வழியாக ரஷ்யாவிற்குப் போய் விட, அங்கிருந்து எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியைத் தழுவின. அதனால் டல்லஸுக்குத் திரும்பி வந்து பாடப் புத்தக மையத்தில் வேலைக்குச் சேர்ந்தான். இது அக்டோபர் மாதத்தின் இடையில் நடந்தது.

நவம்பர் 19ஆம் தேதி செவ்வாய்கிழமையன்று, மியாமியில் கென்னடி பேசிய பேச்சு பத்திரிகைகளில் வந்திருந்ததை ஆஸ்வால்டு படித்தான்.

கென்னடி என்ன பேசியிருந்தார்?

''க்யூபாவில் நடக்கும் பிடல் காஸ்ட்ரோவின் கொடுங்கோல் ஆட்சியை நீக்கி விட்டு, அமெரிக்கா உதவியுடன், க்யூபாவில் நல்லாட்சியை நிறுவ வேண்டும்'' என்றுதான் அவர் பேசினார்.

இந்தப் பேச்சுடன், கென்னடி வெள்ளிக்கிழமையன்று டல்லஸுக்கு வருவதாகவும் செய்தி வெளியாகியிருந்தது.

கென்னடி பயணம் செய்யும்போது, அவரது ஊர்வலம் ஆஸ்வால்டு பணியாற்றும் புத்தக மையம் வழியாகத்தான் போகும் என்றும் பத்திரிகைச் செய்தி சொல்லியது.

ரஷ்யாவோ, க்யூபாவோ ஆஸ்வால்டை இந்தக் கொடூர வேலைக்கு ஏற்பாடு செய்திருந்தால், அவன் கொலை செய்த பிறகு தப்பித்துச் செல்வதற்கு, அவர்கள் ஏன் வழி வகைகளைச் செய்யவில்லை?

இந்தக் கொலைக்குத் திட்டமிட்ட சதிகாரர்கள், ஆஸ்வால்டுக்கும் ரஷ்யா, க்யூபா நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால் இந்தக் கொலையை அவர்கள் செய்து விட்டு பழியை இவன் மீது திணித்து விட்டார்களா?

சதிகாரர்கள் போட்ட திறமையான திட்டந்தானா இது?

யார் அந்தச் சதிகாரர்கள்? மாபியா கும்பல்தான்!

ஜான் கென்னடியும் அவரது சகோதரர் ராபர்ட் கென்னடியும் திட்டமிட்டு கொலை, கொள்ளை நடத்தும் மாபியா கும்பலைக் கூண்டோடு அழிக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டவர்கள். 1957ஆம் ஆண்டு செனட்டராக இருந்தபோது ஒரு கமிட்டியை நியமிக்க ஏற்பாடு செய்து மாபியா கும்பலை நாட்டிற்கு அடையாளம் காண முயற்சிகள் எடுத்துக் கொண்டார் கென்னடி. இதற்கு உதவியவர் அவரது சகோதரர் ராபர்ட் கென்னடி.

1961ஆம் ஆண்டு ராபர்ட் கென்னடி அட்டர்னி ஜெனரல் ஆனவுடன் முதல் வேலையாக மாபியா கும்பல் மீதுதான் போர் தொடுத்தார்.

கார்லோ, மார்செல்லோ என்னும் மாபியா கும்பலின் தலைவன் தன் தலைமையிடமான நியூ ஆர்லியன்ஸிலிருந்து கௌதமாலாவுக்கு ஓடிவிட்டான். ஆனால் வெகு விரைவில் அவன் அமெரிக்காவுக்குத் திரும்பி வந்து, கென்னடி குடும்பத்தாரைப் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

1962ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்த மார்செல்லோ தன் நண்பன் ஒருவனிடம் என்ன சொன்னான் தெரியுமா?

''ஒரு நாயை நீ கொல்ல நினைத்தால் அதன் வாலை நறுக்கினால் போதாது. கழுத்தையே வெட்ட வேண்டும்'' என்றான்.

அதனால் அவர்கள் குறி ராபர்ட் கென்னடியல்லர்; ஜனாதிபதி கென்னடி என்பது அதன் மூலம் உறுதியாகியது.

''1964ஆம் ஆண்டு கென்னடி தேர்தலில் போட்டியிடக் கூடாது'' என்பது மாபியா கும்பல் எடுத்த முடிவு. இந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவன் இந்தத் தகவலை எஃப்.பி.ஐ. பிரதிநிதி ஒருவனிடம் கசிய விட்டான். அப்போது இந்தச் செய்திக்கு அதிக முக்கியத்துவம் தரப்படவில்லை. ஆனால் ஓராண்டிற்கு முன்பு அதாவது 1963ஆம் ஆண்டு வாக்கில் மார்செல்வோவின் கூட்டாளி ஒருவன் ''ஜனாதிபதியின் தலைக்கு ஒரு விலை இருக்கிறது'' என்று சொன்னதாகவும் செய்தி உலாவியது.

மாபியா கும்பலுக்குக் கென்னடி மீது இன்னொரு வகையிலும் கோபமிருந்தது. பிடல் காஸ்ட்ரோ க்யூபாவின் அதிபரான பின், அந்த நாட்டிலிருந்து மாபியா கும்பலை அடியோடு ஒழித்து விட்டார். அந்த நாட்டின் மீது ஏன் விரைவில் கென்னடி நடவடிக்கை எடுக்கவில்லை என்கிற கோபந்தான் மாபியா கும்பலுக்கு.

போதை மருந்து, சூதாட்டம், விபசாரம் மூலமாக வருடத்திற்கு 110 மில்லியன் டாலர்களை மாபியா கும்பல் க்யூபாவில் சம்பாதித்துக் கொண்டிருந்தது. இதை ஒழித்துக் கட்டிய பிடல் காஸ்ட்ரோவின் மீது, மாபியா கும்பலுக்குக் கோபம் வருவது இயற்கை.

கென்னடி, க்யூபா மீது வேகமாக நடவடிக்கை எடுத்து, அதன் அதிபரை ஒழித்துக் கட்டப் போகிறார் என்று கேள்விப்பட்டபோது மிகவும் சந்தோஷமாக இருந்த மாபியா கும்பல், அந்த நடவடிக்கை உடனே எடுக்கப்படாததால், கும்பலின் கோபம் கென்னடி மீது திரும்பியது. அதுவுமில்லாமல் க்யூபாவின் அதிபர் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள ரஷ்யாவின் பக்கம் சாய்ந்தார். இதனால் அமெரிக்காவின் நடவடிக்கைகள் சற்று பின்னடைந்தன.

அதாவது ஒரு முடிவை எடுத்தே ஆக வேண்டும் என்னும் தீவிரத்தில் இருந்த மாபியா கும்பல், ஆஸ்வால்டையும் அவனது

நண்பர் ஜேக் ரூபியையும் தொடர்பு கொண்டது. இவர்கள் க்யூபாவின் ஆதரவாளர் - கென்னடி மீது வன்மம் கொண்டவர்கள்.

கைதேர்ந்த தொழில்முறை கொலையாளிகள் இருக்கும்போது மாபியா கும்பல், இவர்கள் இருவரையும் ஏன் அணுகினார்கள் என்பதற்கு சரியான பதில் கிடைக்கவில்லை.

கென்னடியின் மரணத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுதிய அமெரிக்க எழுத்தாளர் ஸ்டிவ் ரிவேலி, மாபியா கும்பல் மூன்று கார்சிகன் நாட்டவர்களை இந்த வேலைக்காகத் தேர்ந்தெடுத்தது என்று தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அந்த மூவரும் கொலை நடந்த இடத்திலேயே இருக்கவில்லை என்பதற்கு ஆதாரம் இருந்தது.

ஒருவனுக்கு கண் ஆபரேஷன்; இன்னொருவன் பிரான்ஸின் கடற்படையின் பணியில் இருந்தான்; மூன்றாமவன் மார்சேல்ஸ் சிறையில் இருந்தான்.

ஆக, அவர்கள் மூவரும் கென்னடியின் கொலையில் பங்கேற்கவில்லை என்பது தெளிவாகியது.

கென்னடி இறந்து விட்ட இருபத்தைந்தாண்டுகளுக்குப் பிறகு எழுந்த சந்தேகங்கள்தான் மேலே குறிப்பிட்டவை. இதோ இன்னொரு யூகம்...

ஆஸ்வால்டு, கென்னடியைக் குறி வைக்கவில்லை; அருகில் இருந்த கவர்னர் ஜான் கொனல்லியின் மீதுதான் குறி வைத்தான் என்கிறார்கள்.

ரஷ்யாவிலிருந்து திரும்பி வந்தவுடன், அமெரிக்காவில் ஆஸ்வால்டுக்குத் தகுந்த வேலை கிடைக்கவில்லை. காரணம் அவனது ரிக்கார்டுகள் சரியாக இல்லை. கடற்படையில் வேலை செய்து விட்டுத் திரும்பிய அவன், இங்கே காரியதரிசியாக இருந்த ஜான் கொனல்லிக்கு தன் நிலையைப் பற்றி எழுதினான். அவனது ரிக்கார்டுகள் மோசமாக இருந்ததால் அவனது வேண்டுகோளை ஜான் கொனல்லி நிராகரித்து விட்டார்.

மூன்றாம் முறையாகவும், கடைசி முறையாகவும் வாரன் கமிஷன் முன்னால் சாட்சி சொல்ல வந்த ஆஸ்வால்டின் மனைவி மரினா, என்ன சொன்னாள்?

''என் கணவருக்கும் ஜனாதிபதிக்கும் எந்தப் பகையுமில்லை. அவருக்கு உதவாத கவர்னரைத்தான் அவர் குறி வைத்தார்'' என்றாள்.

அவள் இதை கடைசியில் சொல்வதற்கு முன்பே வாரன் கமிஷன் தன் முடிவான அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டது. அதனால் ஆஸ்வால்டு மனைவியின் வாக்குமூலம் அதில் சேர்க்கப்படவேயில்லை.

இது விஷயமாக இருபத்தைந்தாண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் நடந்த 'மக்களின் எண்ணம் என்ன?' என்கிற வாக்கெடுப்பில், 'சதித்திட்டம் தீட்டப்பட்டுத்தான் கென்னடி கொல்லப்பட்டார்' என்று ஒரு சாராரும் - 'உண்மையான நிலை என்ன என்று மக்கள் அறிந்து கொள்ளக் கூடாது என்று எல்லாமே அரசாங்கத்தால் மூடி மறைக்கப்பட்டது' என இன்னொரு சாராரும் சொன்னார்கள். 'இந்த விஷயத்தில் இவ்வளவு நாள்கள் கழித்து விசாரணை நடத்தி என்ன பயன்?' என்று இன்னொரு கும்பலும், 'இனி எந்த விசாரணையும் தேவையில்லை' என்று ஒரு சாராரும் சொன்னார்கள்.

இந்த நான்கு எண்ணங்களுக்கும் முறையே கிடைத்த முடிவுகள். 1 - 66%. 2 - 61%. 3 - 46%. 4 - 59%.

'இனி எப்போதும் இந்த மர்மங்களுக்கு விடை கிடைக்கப் போவதில்லை. அதனால் விடைகளை நாம் தெரிந்து கொள்ள சிரமமே படாமல் அப்படியே விட்டுவிடலாம். தெரிந்து கொள்ளாமல் இருப்பதும் நல்லதுதான்' என்ற எண்ணத்தைச் சொன்னவர் லூயி ஸ்ரோக்ஸ் என்னும் அதிகாரி.

ஆஸ்வால்டு ஜான் கென்னடியை ஏன் கொன்றான் என்பதற்கு இன்றுவரை விடை கிடைக்கவேயில்லை.

■

காணாமற் போன மகன்

1789ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் தேதி முதன் முதலாக பிரெஞ்சு புரட்சிக்கு வித்திடப்பட்டது, பல விதமான தொல்லைகளால் மக்கள் அவதிப்பட்டதால், பாரிஸ் மக்களில் ஒரு பகுதியினர் திடீரென கிளர்த்தெழுந்து புகழ்பெற்ற பாஸ்டில் சிறையைத் தகர்த்தனர்.

கொடுங்கொல் அரசாட்சி, லஞ்ச லாவண்யம், மக்களைப் பல வழிகளில் துன்புறுத்தியது போன்றவைதான் இந்தப் புரட்சிக்கு முக்கிய காரணம்.

அக்டோபர் மாதம், கும்பலாகப் புறப்பட்ட பெண்கள் வெர்சேல்ஸ் அரண்மனையை முற்றுகையிட்டு, மன்னன் பதினாறாம் லூயியையும், அவனது மனைவி மேரி அன்டாய்னெட்டையும், இரு குழந்தைகளையும் நகரின் மையப் பகுதிக்கு அழைத்து வந்து நிறுத்தினார்கள்.

அங்கே மன்னனிடம் அவர்கள் கட்டாயப்படுத்தி தேசிய சட்டசபை அங்கீகரித்த பல சீர்திருத்தங்களை உடனே அமலாக்கச் சொன்னார்கள். அவை மக்களின் நலனுக்காகத் தீட்டப்பட்ட திட்டங்கள். ஆனால் மக்களுக்கு இது திருப்தி அளிப்பதாகத் தெரியவில்லை. பெரும் புரட்சி ஒன்று ஏற்படும் போலத் தெரிந்தது.

மன்னன் இதை உணர்ந்து கொண்டவனாக 1791ஆம் ஆண்டு ஜூன் மாதம் பாரிஸ் நகரை விட்டுத் தன் குடும்பத்துடன் வெளியேறினான். ஆனால் அவர்கள் தென் கிழக்கு எல்லையில் இருந்த வேரன்ஸ் நகரில் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

1792ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி தேசிய மகாசபை கூடி, மன்னர் ஆட்சியை ஒழிக்க சட்டம் கொண்டு வந்து, அதை

உடனே நிறைவேற்றி பிரான்ஸை குடியரசு நாடாகப் பிரகடனம் செய்தது. தேசத் துரோகத்திற்காக தண்டிக்கப்பட வேண்டிய பதினாறாம் லூயியைத் தூக்கிலிட வேண்டும் என்று 387 அங்கத்தினர்களில் 334 பேர் கேட்டுக் கொண்டதால் அத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அதைப் போலவே இராணியான மேரி அன்டாய்னெட்டும் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டாள். மன்னர் தூக்கிலிடப்பட்டது, 1793ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் தேதி.

அவர்களுடைய ஆட்சி காலம் கொடுங்கோன்மை நிறைந்ததாகக் கருதப்பட்டது. இந்த நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்ததற்கு முக்கிய காரணமாக இருந்தவன் மேக்ஸ் மில்லியன் ரோபஸ்பியர் என்பவன்.

இவனது முடிவும் 1794ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் தேதி வரத்தான் செய்தது. அவனும் அவனது சகாக்களாகப் பணியாற்றிய 21 பேரும் அவனுடனேயே தூக்கிலிடப்பட்டார்கள். எந்த இடத்தில் ரோபஸ்பியர் தனது எதிரிகளைத் தூக்கிலிட்டானோ அதே இடத்தில்தான் அவனுக்கும் முடிவு ஏற்பட்டது.

இந்தச் செயல்களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்து செயல்பட்டவர் தேசிய மகாசபையின் தலைவர் பால்.டி. பராஸ் என்பவர். எதிரிகள் தூக்கிலிடப்பட்டவுடன் அவர் நேராக அரச பரம்பரையின் வாரிசுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட இடத்திற்கு விரைந்தார்.

பதினாறாம் லூயி மற்றும் மேரி அன்டாய்னெட் ஆகியோரின் குழந்தைகள் மேரி தெரிஸாவும், லூயி சார்லஸும். மேரிக்கு வயது 16. சார்லஸுக்கு வயது 9. அவர்கள் இருவரும் அப்போது அரசியல் அநாதைகளாகக் கருதப்பட்டனர். அவர்கள் பத்திரமாக இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளத்தான் பால், அவர்கள் இருந்த இடத்திற்கு விரைந்தார்.

1785ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு அன்று பிறந்த லூயி சார்லஸ் வெர்சேல்ய்ஸ் நகரில் தன் இளமைப் பருவத்தை

ஆனந்தமாகக் கழித்துக் கொண்டிருந்தான். அதாவது பிரெஞ்சு புரட்சி தொடங்கும் வரை. அவனுக்கு மூத்தவன் காச நோயால் இறந்து விட்டவுடன், சார்லஸ்தான் மன்னருக்கு வாரிசு என்கிற நிலைக்கு வந்தான்.

மன்னரைத் தூக்கிலிட்ட பிறகு சார்லஸ் பதினேழாம் லூயியாக மகுடம் சூட்டப்பட்டான். பாதுகாவலனாகவும் அரசுப் பொறுப்புகளைக் கவனிக்கவும் அவனது மாமன் ஒருவன் நியமிக்கப்பட்டான். மன்னனுக்கு உரிய வயது வரும்வரை அவன்தான் பாதுகாப்பு.

அரச பரம்பரையினால் தேசிய மகா சபைக்கு எப்போதும் ஆபத்து என்பதை உணர்ந்த தேசியவாதிகள் டவ்பின் லூயி சார்லஸை, செருப்பு தைத்து விற்கும் அந்தோணி சைமன் என்கிற ஒரு தொழிலாளியிடம் ஒப்படைத்து இளவரசனை நன்கு கவனித்துக் கொள்ளச் சொன்னார்கள். சைமனும் அவன் மனைவியும் தொழிலாளர்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களது நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் எல்லாமே முரட்டுத்தனமாகவும், நாகரிகமற்றதாகவும் இருந்தன. இளவரசனுக்குக் குடியரசு தத்துவங்களைப் போதித்தனர். புரட்சி கரமான கீதங்களைக் கற்றுக் கொடுத்தனர். இந்தத் தம்பதிதான் பின்னர் வெறி பிடித்த சந்தர்ப்பவாதிகள் என இகழப்பட்டனர்.

இளவரசனின் நிலை என்ன?

அவனை இதுவரை பாதுகாத்து வந்த சைமன் 1794ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டான்.

அதற்குப் பிறகு கோட்டையில் ஒரு பெரிய அறையில் லூயி சார்லஸ் காவலில் வைக்கப்பட்டான். அதே அறைதான், அவன் தந்தையின் சிறையாகவும் பயன்பட்டது. நான்கு காவலாளிகள் அவனை மிகவும் பத்திரமாகப் பார்த்துக் கொண்டனர்.

அவ்வப்போது மாற்றப்பட்ட அக்காவலாளிகள் இளவர சனைப் பாதுகாப்பதில் மிகவும் கவனமாக இருந்தனர்.

அவனுடைய சகோதரியும் அதே கோட்டையின் மேற் பகுதியில் அடைக்கப்பட்டிருந்தாள். அவளிடம் சகோதரன் இறந்து விட்டதாகவும், அவன் சடலத்தை அங்கிருந்து அகற்றி விட்டதாகவும் அவள் நம்பும்படியாகச் சொல்லப்பட்டது.

தனிமையில் விடப்பட்ட சிறுவன், உடல் நலம் குன்றி நோய் வாய்ப்பட்டான். தேசிய மகாசபையின் தலைவர் பராஸ் சிறைக்கு வந்து பார்த்தபோது இளவரசனின் நிலையைக் கண்டு கோபமுற்று, வைத்தியர்களை வரவழைத்து வைத்தியம் பார்க்கச் சொன்னார். ஜூலை 28ஆம் தேதி இளவரசனின் நிலையில் மாறுதல் தெரிந்தது. அரசனைக் கவனிக்கும் வைத்தியர்கள், அவனையும் கவனித்துக் கொண்டார்கள்.

அடுத்த வருடத் தொடக்கத்தில் தேசிய மகாநாடு கூடி ஓட்டெடுப்பு நடத்தியது. எதற்காக?

இளவரசன் லூயி சார்லஸை என்ன செய்வது என்பது பற்றி நடந்த ஓட்டெடுப்பில் அவனை நாடு கடத்துவது என்று முடிவாகியது. ஆனால் பிரயாணம் செய்யக் கூடிய நிலையில் அவன் உடல் நிலை இல்லை.

ஆனால் 1795ஆம் ஆண்டு ஜூன் 28ஆம் தேதி ஒரு பிரகடனம் வெளியானது. வாத நோயும் காச நோயும் தாக்கியதால் பதினேழாம் லூயியாகப் பதவி ஏற்க இருந்த இளவரசன் சார்லஸ் இறந்து விட்டான் என்பதே அச்செய்தி.

அலங்கோலமாக அரசை நிர்வகித்து கொடுங்கோன்மையை ஆயுதமாக்கி, நிர்வாகத்தை நடத்தி வந்த ரோபஸ்பியர் இறந்த பின்னரும் பிரான்ஸ் நாடு சீராகவில்லை.

அடுத்து வந்த சில ஆண்டுகளில் மாவீரன் நெப்போலியன் அழிக்க முடியாத சக்தியாக உருவெடுத்தான். ஐரோப்பா கண்டம் முழுவதையும் யுத்த களமாக்கினான் என்றால் மிகையாகாது.

போரில் மிக வல்லவனும், சிறந்த ராஜ தந்திரியுமான நெப்போலியனும் 1814ஆம் ஆண்டு தோல்வியைச் சந்திக்க வேண்டி வந்தது.

பிரான்ஸ் நாட்டின் எதிரிகள் யாவரும் ஒன்று சேர்ந்து அவனைத் தோற்கடித்தார்கள்.

அதன்பின் பிரான்ஸில் மீண்டும் மன்னராட்சி ஏற்பட்டது. இறந்து போன பதினேழாம் லூயியின் காவலனாக இருந்த மாமன், தன்னையே பதினெட்டாம் லூயியாகப் பதவியேற்றுக் கொண்டான்.

மாமனான புரோவென்ஸும், அவனது தம்பி பத்தாம் சார்லஸும் தங்களின் அரச பதவியைக் காப்பாற்றிக் கொள்ள, போட்டியாளர்கள் பலருடன் போராட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

அதில் வெற்றி பெற்றவன் அரச பரம்பரையைச் சேர்ந்த லூயி பிலிப்ஸ். 1830 முதல் 1848ஆம் ஆண்டு வரை அவன் பிரான்ஸ் நாட்டைப் பரிபாலித்து வந்தான். தொடர்ந்து ஏற்பட்ட புரட்சியால் மீண்டும் பிரான்ஸ் குடியரசு நாடானது.

இந்த முப்பதாண்டுகளில் யார் யாரோ தாங்கள் டவ்பின்னின் சந்ததியினர் என்று சொல்லிக் கொண்டு அரசாள முன்வந்து போராடினர்.

1834ஆம் ஆண்டு ஒரு போராளியைப் பிடித்து அவன் மீது வழக்கைப் பதிவு செய்து கோர்ட்டில் நிறுத்தினர்.

அப்போதுதான் சர்க்கார் தரப்பு வக்கீல் உண்மையான பதினேழாம் லூயி எழுதிய கடிதம் ஒன்றை சாட்சியாக வைத்தார்.

கடிதத்தில் இருந்த செய்தி என்ன?

இங்கே வந்திருப்பவனின் பெயர் கார்ல் வில்ஹாம் நௌன் டிராப் என்பதாகும். இவன் தொழில், உடைகள் தைப்பது. பல ஆண்டுகளாக ஜெர்மனியில் வசித்த இவன் தட்டுத் தடுமாறித் தான் பிரெஞ்சு மொழியைப் பேசுகிறான். இதே நௌன்டிராப், வெர்சேல்ஸ் கோர்ட்டில், தான் தான் உண்மையான அரச பரம்பரை வாரிசு என்று சொல்லி அதில் வெற்றியும் பெற்று விட்டான். பிரான்ஸின் உண்மையான அரசன் என்று இவன் சொல்லும்போது அதைச் சிலர் நம்பவும் செய்தார்கள்.

பாரிஸ் நகரின் மிகப் பெரும் மனிதர்கள், சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் - இந்த டெய்லர் நௌன்டிராப், பதினாறாம் லூயி, அவன் மனைவி மேரி அனிடாய்னெட் ஆகியவர்களைப் பற்றி பல முக்கியமான விஷயங்களையும், ரகசியங்களையும் சொன்ன போது நம்பத்தான் செய்தார்கள்.

இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண் டிருப்பவன் ஏன் அரச பரம்பரையைச் சேர்ந்தவனாக இருக்கக் கூடாது?

வெர்சேல்ஸில் நடந்த முக்கிய சம்பவங்கள், பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னும் பின்னும் நடந்த சம்பவங்கள் ஆகியவற்றைப் பற்றி, பல கேள்விகளை அவனிடம் கேட்டபோது அதற்கு சரியான பதிலை உடனுக்குடன் சொன்னான் நௌன்டிராப்.

பல பிரபல மனிதர்களுடன் தன் இளம் வயதிலேயே தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதால், இப்போது இத்தனை ஆண்டு களுக்குப் பிறகு அவர்களுக்கு தன்னை நினைவிருக்கும் என்றும் தான் நம்பவில்லை என்கிற விஷயத்தையும் நம்பும்படியாகச் சொன்னான்.

ஒரே ஒரு விஷயத்திற்கு மட்டும் அவனால் சரியாகவும், உடனுக்குடன் பதில் சொல்ல முடியவில்லை. என்ன அது?

கோட்டைச் சிறையில் வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப் பட்டதை எல்லாரும் ஏற்றுக் கொண்டாலும், இவன் எப்படி அந்தச் சிறைச் சாலையிலிருந்து தப்பி வந்தான் என்பதை அவனால் விளக்கவே முடியவில்லை.

அவன் சொன்ன சம்பவங்கள், கதைகள் யாவும் 1795ஆம் ஆண்டு முதல் 1810ஆம் ஆண்டு வரை மட்டும் நடந்தவை. சிறையை விட்டு வெளியே வந்த போதிலிருந்து ஜெர்மனி நாட்டில் தோன்றியது வரைதான், அவன் விளக்க எடுத்துக் கொள்ளப்பட்ட கால கட்டம்.

அவன் காதல் வலையில் விழுந்ததும் இந்த சமயத்தில்தான்.

நௌன்டிராப், பாரிஸ் நகரிலிருந்து கடத்தப்பட்ட பிறகு, பெரும்பாலான நாள்களை, தான் சிறையில் கழித்ததாகவே சொன்னான். தேசிய தீவிரவாதிகள் தன்னை மிகவும் கொடுமைப் படுத்தியதாகவும் வெளியுலகத் தொடர்பே இல்லாமல் செய்து விட்டதாகவும் அவன் சொன்னான்.

கனவில் நடப்பது போல் பல விஷயங்கள் தன் வாழ்வில் நடந்ததாகக் குறிப்பிட்ட அவன் கப்பல் வழியாக அமெரிக்கா வுக்குப் பயணம் செய்தது; துரோகம், திருட்டு, போலி ஆவணங்களைத் தயாரித்தது; கொலைகள் செய்தது போன்ற சகல விஷயங்களிலும் அவனை மற்றவர்கள் சம்பந்தப்படுத்தியதாகக் கதையளந்தான்.

ஒருவழியாக ஐரோப்பாவிற்கு அவன் மீண்டும் வந்து சேர்ந்து விட்டாலும், நடந்த இந்தச் சம்பவங்களுக்கு அவனிடம் எந்த விதமான ஆதாரங்களோ, ஆவணங்களோ இல்லை.

1810ஆம் ஆண்டிற்குப் பிறகு நடந்த சம்பவங்களுக்கு அவனிடம் நிறைய ஆதாரங்கள் இருப்பதாக நௌன்டிராப் சொன்னான்.

இருந்தாலும் அவனை நம்பியவர்கள், ஆதரித்தவர்கள் யாரும் அவன் காணாமற் போன டவ்பின் - அதாவது இளவரசன் என்பதை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஜெர்மனியை அடைந்த அவன், சிறிதும் சிரமமில்லாமல் எளிதாக புருஸியன் நாட்டுக் குடிமகனாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டான்.

1822ஆம் ஆண்டு பிராடன்பர்க்கில் ஒரு குடும்பத்தோடு தங்கினான். அந்தக் குடும்ப வாழ்க்கையும் அதிக நாள்கள் நீடிக்கவில்லை.

கள்ள நாணயம் தயாரித்தல், நம்பிக்கை மோசம் செய்தல், தன் வீட்டிற்கு தானே நெருப்பு வைத்து விட்டு, பணத்தை வசூலிக்க முயலுதல் போன்றவற்றுக்காக அவன் சிறையில் அடைக்கப் பட்டான்.

நீதி மன்றத்தில் அவனை நிறுத்தி விசாரணை நடத்திய போது, ஒரு நீதிபதி அவனுக்கு மனநிலையே சரியில்லை என்றார். இருந்தாலும் நௌன்டிராப்புக்கு மூன்றாண்டு சிறை தண்டனை கிடைத்தது.

தண்டனைக்குப் பிறகு விடுதலையான அவன் க்ரோசன் நகருக்கு வந்தான். அதற்குப் பிறகுதான் 1827ஆம் ஆண்டு வாக்கில் தான், பிரான்ஸ் நாட்டு அரச வம்ச வாரிசு என்று பிரகடனம் செய்தான்.

பத்திரிகைகளின் வாயிலாக அந்தச் செய்தி பாரிஸ் நகருக்கு எட்டவே, அவன் பிரான்ஸின் தலைநகருக்கு வரவழைக்கப் பட்டான்.

அவன் சொல்வதையெல்லாம் நம்புவதற்கு ஒரு கும்பல் தயாராக இருந்தது என்றாலும் முக்கியமான நபர் ஒருவரைச் சந்தித்து, அவரைத் திருப்திப்படுத்தினால்தான் உண்மை வெளியாகும் என்று சொன்னவர்களும் இருந்தார்கள். இவன் சொல்வது முற்றிலும் உண்மையென்றால் 1795ஆம் ஆண்டி லிருந்து இவனை நன்றாக அறிந்தவள் ஒருத்திதான் - அதாவது இளவரசனின் சகோதரி மேரி தெரிசா. சிறைத் தண்டனையி லிருந்து விடுதலையாகி எங்கோ மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவள், இவனைப் பற்றிச் சொல்ல முன் வர வேண்டும்.

பிறப்பின்போதே, தன் சகோதரனுக்குப் பதிலாக கோட்டையில் வேறொரு குழந்தை தொட்டிலில் வைக்கப்பட்டது என்பதை மேரி தெரிசா நன்றாக அறிந்திருந்தாலும், நௌன்டிராப்பை அவள் சிறையில் இருந்தபோது சந்திக்க விரும்பவில்லை. தன் சகோதரனின் படத்தையும், நௌன்டிராப்பின் படத்தையும்

ஒப்பிட்டுப் பார்த்த அவள், இரண்டுக்கும் எந்த விதமான ஒற்றுமையும் இல்லை என்று சொல்லி விட்டாள். சட்ட பூர்வமாக தான் அரசின் வாரிசு என்று நௌன்டிராப் நிரூபிக்க முயல, சாட்சி சொல்ல இளவரசி வர மறுத்து விட்டாள். அதனால் இந்த சட்ட யுத்தத்தில் தோற்றுவிட்ட அவன், அரசன் லூயி பிலிப்ஸினால் இங்கிலாந்துக்கு 1836ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டான்.

தன்னை ஏற்றுக் கொள்ளாத பிரபு வம்சத்தாரை எப்படியும் அழித்தே தீர வேண்டும் என்று, லண்டனில் வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவினான் நௌன்டிராப். அங்கே மற்றவர்களை அழிக்கத் தயாரித்த வெடிகுண்டு தானாக வெடித்து, அவன் குடியிருந்த வீட்டையே நாசமாக்கி விட்டது.

அடுத்தபடியாக 1840ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியன்று பிரான்ஸ் மன்னனாக முடி சூட்டிக் கொள்ளப் போவதாக நாட்டின் எல்லாரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான். அதனால் அவனுக்கு ஏகப்பட்ட ஆதரவாளர்கள் சேர்ந்தனர். ஆனால் அவனது நம்பிக்கை வீண் போனது. அவனால் அரசவைக் கட்டிலில் ஏற முடியவில்லை. அதனால் அவனது ஆதரவாளர்கள் அவனை விட்டுப் போய் விட்டனர்.

நெதர்லாந்து நாட்டில் 1845ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10ஆம் தேதி நௌடிராப் உயிர் நீத்தான். விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டான் என்றும் சொல்லப்பட்டது.

ஆனால் அவனது வழித்தோன்றல்கள் பிடிவாதமாக தாங்கள் அரச பரம்பரையினர்தான் என்று 20ஆம் நூற்றாண்டு வரை சொல்லிக் கொண்டிருந்ததோடு நில்லாமல், தங்கள் பெயருக்கு முன்பு 'பிரபு' என்கிற பட்டத்தையும் சேர்த்துக் கொண்டார்கள்.

இதற்கு ஆதாரம் இல்லாத காரணத்தால் 1954ஆம் ஆண்டு பிரெஞ்சு கோர்ட் தடை விதித்தது. பிரான்ஸ் நாட்டின் மன்னனான பதினேழாம் லூயி முடி சூட்டும் முன்னரே இறந்து விட்டார்

என்பது அரசியல் மற்றும் சட்ட ரீதியாக நிரூபிக்கப்பட்டு விட்டது. அவன் இறந்தது, 1976ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் நாள் ஆகும்.

எந்த வதந்திகள் எப்படியிருந்தாலும் கடைசியாக அரசாட்சி, அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவரிடம்தான் ஒப்படைக்கப் பட்டது.

நௌன்டிராப்பின் உரிமைகளுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று பல வழிகளில் நிரூபிக்கப்பட்டாலும் டவ்பின்னின் மரபைக் குறித்து, இருநூறாண்டுகளுக்கு முன்பு தேசிய மகா சபையின் எண்ணத்தைக் குறித்து எல்லாரும் சந்தேகப்பட்டனர். ஏனெனில் டவ்பின் இடத்தில் வேறொரு குழந்தையை வைத்திருக்கக் கூடும் என்கிற வதந்தியை யாராலும் ஆணித் தரமாக மறுக்க இயலவில்லை.

தேசிய சபையின் ஒரு நிர்வாக உறுப்பினர், சிறையில் இருந்த இளவரசன் டவ்பின்னைப் பார்க்கச் சென்றபோது, அவனுக்கு வயது 10. அவன் வாய் பேசாத ஊமையாகவும் காது கேளாத வனாகவும் இருந்தான்.

அவன் சிறையில் இறந்து விட்டதாகச் சொல்லப்பட்டபோது அவன் பிணத்தைப் பரிசோதித்த டாக்டர், ''இளவரசன் என்று சொல்லப்பட்ட பிணத்தைத்தான்'' தான் பரிசோதித்ததாக தன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அவன் தலைமுடியும், மேரி அன்டாய்னெட்டின் தலைமுடி யும் ஒரே மாதிரியாக இல்லை. தாயின் முடி, மகனின் முடியுடன் ஒத்துப் போக வேண்டுமல்லவா?

குழந்தையாகவே இறந்துவிட்ட டவ்பின்னுக்குப் பதிலாக வேறொரு குழந்தை நிச்சயம் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அவனுடைய பாதுகாவலனாக இருந்த சைமனின் மனைவி வேறொரு புதிய தகவலை 1794ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சொன்னாள்.

''குழந்தையின் உணவு, உடைகள் கொண்டு போகும் சிறிய கூடையின் கீழ்ப் பகுதியில் ஓர் இடம் காலியாக இருக்கும். அந்த இடத்தில் குழந்தையை மறைத்து வெளியே கொண்டு போகவோ, உள்ளே கொண்டு வரவோ முடியும்'' என்றாள் அவள்.

கைப்பிடி வைத்த அந்தக் கூடை சற்றே பெரியது. மேரி அன்டாய்னெட்டின் குழந்தைகளைக் கவனித்துக் கொண்ட செவிலித்தாய், தன் பிரத்தியேக அறையில் லூயி சார்லஸின் படம் ஒன்றை வைத்திருந்தாள்.

அவளிடம் டவ்பின் இறந்ததைத் தெரிவிக்க வந்த இரண்டு சிப்பாய்கள், அந்தப் படத்தைப் பார்த்து விட்டு, சிறையில் இருந்த பையனின் உருவத்தைப் போலவே அந்தப் படம் இருப்பதாகச் சொன்னார்கள்.

இறுதி சடங்குகளை நடத்திய பாதிரியாரும் அதையே தான் சொன்னார்.

இறந்தது உண்மையான இளவரசனா? அல்லது போலியா? என்பது விடை தெரியாத வினாவாகவே இன்றுவரை இருந்து வருகிறது.

■

கசாப்புக் கடைக்காரரின் மகனா அரசன்?

பிரான்ஸ் நகரின் எல்லைப் பகுதியில் இருக்கிறது பிளாரன்ஸ் நகரம். அந்த நகரில் ஓர் அழகான பண்ணை பங்களா. அதில்தான் 1822ஆம் ஆண்டு, கோடைக் காலத்தை இளவரசன் சார்லஸ் ஆல்பர்ட் இன்பமாகக் கழித்துக் கொண்டிருந்தான். அவனுடன் அவன் இளம் மனைவி மரியா தெரிசாவும் பச்சிளம் குழந்தையான விக்டர் எம்மானுவலும் இருந்தனர்.

செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி மாலை நேரம். இருள் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவிக் கொண்டிருந்தபோது, கையில் ஒரு மெழுகுவர்த்தியுடன் நர்ஸ் ஒருத்தி விக்டர் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தாள்.

விளக்கு வெளிச்சத்தில் கொசுக்களை விரட்டி விடலாம் என்கிற நல்லெண்ணம் அவளுடையது. ஏனெனில் இளவரசனின் தூக்கம் கெடக்கூடாதல்லவா?

அவள் தொட்டிலின் அருகே குனிந்து இளவரசனைப் பார்த்தபோது, கையிலிருந்து மெழுகுவர்த்தி தொட்டிலுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்த துணியின் மீது பட்டு, குபீரெனத் தீ பற்றிக் கொண்டது.

குழந்தை அப்போது தூங்கிக் கொண்டிருந்தது. நெருப்பு தீவிரமாக தொட்டிலை ஒரு நொடியில் ஆக்ரமித்தபோது, நர்ஸ் இளவரசனை 'தீ' நாக்குகளிலிருந்து காப்பாற்றி விட வேண்டும் என்கிற ஆதங்கத்தில் அவனை வாரி எடுத்தாள்.

அதற்குள் நர்ஸின் ஆடையில் தீ பற்றிக் கொள்ளவே, அதை அவளால் உடனே அணைக்க முடியவில்லை. அதனால் அவள் உடம்பில் தீக்காயங்கள்.

காயங்கள் அதிகமாக இருந்ததால் அடுத்த சில வாரங்களில் அவள் இறந்தே போனாள்.

இளவரசன் மட்டும் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கப் பட்டான். பிளாரன்ஸ் நகரின் சார் பதிவாளரின் அதிகார பூர்வமான ஏட்டில், சார்லஸ் ஆல்பார்ட், அவன் மனைவி மரியா தெரிசா ஆகியவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் பதிவாகி வந்தது. இதனால் அவர்கள் வாழ்க்கைக் குறிப்பை யார் வேண்டுமென்றாலும், எப்போதும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருந்தது.

செப்டம்பர் 16ஆம் தேதி இளவரசனுக்கு தீ விபத்து ஏற்பட்டு, அதனால் காயமடைந்த அவன் குணமாக சில நாள்கள் ஆகும் என்று சொல்லப்பட்டது. உடலில் மூன்று பகுதியில் தீக்காயங்கள் அதிகமாகப் பரவியிருந்தன. இதற்குப் பிறகு ஒரு மாதம் வரை அரச குடும்பத்தினர் பற்றிய செய்திகள் ஏதும் பதிவாகவே யில்லை.

அக்டோபர் 10ஆம் தேதி ஆல்பார்ட் ஒரு விழாவில் கலந்து கொள்ளச் சென்றதாக மட்டுமே தகவல்.

பண்ணை வீட்டில் நடந்த தீ விபத்திற்கு நான்கு நாள்கள் கழித்து எங்கோ வெளியில் போன அரசன் நகருக்குத் திரும்பி விட்டான் என்றும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

சார்லஸ் இது விஷயமாக தன் கடிதங்கள் எதிலும் விளக்கம் தரவேயில்லை.

சார்லஸின் கடிதங்களில், தன் மகன் ஆபத்தில்லாமல் தப்பி விட்டான் என்பதுதான் முக்கியமான விஷயமாக இருந்தது. அதே சமயம் குழந்தையின் தாதிக்கு ஏற்பட்ட காயங்களும், உயிரைப் பறிக்கும் அபாயகரமானதாக இல்லை என்றும் குறிப்

பிடப்பட்டது. இது எந்தளவுக்கு உண்மையான விஷயம் என்றே தெரியாது.

ஆனால் அக்டோபர் 3ஆம் தேதி இளவரசி மரியா தெரிசாவின் தோழி ஒருத்தி, தீக்காயமடைந்த நர்ஸ் மிகவும் நன்றாகத் தேறி வருகிறாள் என்றும், பிளாரன்ஸ் திரும்பும் நாளில் அவளும் உடன் செல்வாள் என்றும் சொல்லப்பட்டது.

அந்தச் சிறு கிராமத்தின் மேயர், போலீஸ் இலாகாவுக்குத் தகவல் தெரிவித்தார். அதாவது இளவரசனும் இளவரசியும் தங்கள் கோடைக் கால ஓய்வை, பண்ணை வீட்டில் முடித்துக் கொண்டு நகருக்குத் திரும்புகிறார்கள் எனத் தெரிவித்தார்.

மேயர், போலீஸுக்கு அரசரின் நடவடிக்கைகளைப் பற்றித் தெரிவிக்க வேண்டியது கடமைதானே? இது நடந்தது, அக்டோபர் நான்காம் தேதி.

இதற்குப் பிறகு, இரண்டு நாள்களில் கோமாவில் இருந்த நர்ஸ் இறந்து போனாள் என்று செய்தி வந்தது.

சார்லஸ், பிளாரன்ஸுக்குத் திரும்பி வரும் தேதிகளில் ஏன் இந்தக் குளறுபடி? மூன்று நாள்களுக்கு முன்பு குணமடைந்து வந்ததாகச் சொல்லப்பட்ட நர்ஸ் திடீரென எப்படி இறந்தாள்?

பண்ணை வீட்டில் நடந்த தீ விபத்திற்கு நர்ஸ் ஒருத்திதான் பலியானாளா?

ஒன்றுமே நடக்கவில்லை போலத் தெரிந்தாலும் அதன் பின்னணியில் நிறைய விஷயங்களிருப்பதாகவே தெரிந்தது.

வதந்திகள் மெதுவாகக் கசியத் தொடங்கின. பிளாரன்ஸ் நகரிலும் அதைச் சுற்றியிருந்த சிறிய ஊர்களிலும் ஒரு வதந்தி மிகவும் தீவிரமாகப் பரவியது. அதென்ன வதந்தி?

பண்ணை வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில், அரசனின் குழந்தை இறந்து போய் விட்டதாகவும், அந்தக் குழந்தைக்குப் பதிலாக, அதனிடத்தில் வேறொரு குழந்தை வைக்கப்பட்டதாகவும்

சொல்லப்பட்டது. அரச குடும்பத்தைப் பற்றிய பேச்சுகள் காட்டுத் தீ போல் எங்கும் பரவின.

குழந்தைக்குப் பதிலாக, வேறொரு குழந்தை வைக்கப் பட்டதே, அது யாருடையது?

முறை தவறிய உறவினால், ஒரு கசாப்புக் கடைக்காரனுக்குப் பிறந்த குழந்தை அது என்றார்கள். அவன் பெயர் மக்கியாஷியா. அவன் உறவாடிய விலைமாதின் பெயர் ரெஜினா பெட்டினி என்பதாகும்.

வெகு விரைவில், பிளாரன்ஸ் அரண்மனைக்குப் போகும் பாதையில், மூன்று மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொண்டு குடியேறிய இந்தக் கசாப்புக் கடைக்காரன் மற்றொரு புதிய பெண்ணையும் மணந்து கொண்டான். தன் வீட்டின் கீழ்ப் பகுதியில் அவன், தன் புதிய கசாப்புக் கடையைத் தொடங்கினான்.

அவனுடைய முன்னாள் காதலி ரெஜினா, பின்பு கசாப்புக் கடைக்காரனின் இளைய சகோதரனை மணந்து கொண்டாள். அத்துடன் விரைவாக மக்கியாஷியா இன்னொரு வீட்டைக் கட்டியதோடு, 'ரியல் எஸ்டேட்' வியாபாரத்தையும் செய்யத் தொடங்கினான். இதனால் 1888ஆம் ஆண்டு அவன் இறக்கும்போது அவனுக்குச் சொந்தமாக 43 வீடுகள் இருந்ததாகச் சொல்லப்பட்டது.

உயிருடன் இருந்தபோது, தன் குடும்பத்தை அவன் மிகவும் நன்றாகப் பாதுகாத்து வந்தான். அவனுக்கு 17 குழந்தைகள் இருந்தனர். சாதாரண கசாப்புக் கடைக்காரனுக்கு இவ்வளவு அதிகமான பண வசதி எப்படி வந்தது? அவன் ஒரு ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக சார்லஸ் ஆல்பர்ட், அவனுக்கு பணத்தை அள்ளித் தந்தாரா?

ஆனால், அதே சமயம் தீ விபத்திலிருந்து இளவரசனைக் காப்பாற்றப் பாடுபட்டு, அதனால் தன் உயிரையும் இழந்த

நர்ஸுக்கோ, அவளைச் சார்ந்த குடும்பத்தினருக்கோ ஆல்பர்ட் எந்த உதவியையும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாளடைவில் இந்த தீ விபத்து விவகாரம் சுத்தமாக மறக்கப்பட்டது. விபத்து நடந்த பண்ணை பங்களா ஒரு பெரிய பள்ளியாக மாற்றப்பட்டு, அங்கே வசதி மிகுந்த பிரபுக்களின் குழந்தைகள் படித்தார்கள். இப்போதெல்லாம் அந்த இடத்திற்கு ஆல்பர்ட் போவதேயில்லை.

தன் குழந்தைக்குப் பதிலாக வேறொரு குழந்தையை அந்த இடத்தில் வைத்தான் என்றால், ஆல்பர்ட் தன் மகனின் மரணத்தை மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

இதைப் பற்றிய விவரங்களை நன்றாக அறிய வேண்டு மென்றால் 1820ஆம் ஆண்டில் நடந்த இத்தாலிய நாட்டு அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

மாவீரன் நெப்போலியனின் சாம்ராஜ்யம் 1814-15இல் சரிந்தபோது, இத்தாலியத் தீபகற்பத்திலிருந்த சில சிறிய மாகாணங்கள் ஆஸ்திரியாவின் ஆளுகைக்குள் வந்தன. அதில் சார்டினியா மாகாணமும் ஒன்று. அது மிகப் பெரிய தீவாகவும் கருதப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக தலை தூக்கிய அந்தப் பகுதி விக்டர் எம்மானுவல் I என்னும் மன்னனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

1821ஆம் ஆண்டு ஆஸ்திரியாவுக்கு எதிராக இந்த மன்னன் புரட்சி செய்யக் கிளம்பியதால் அதில் தோல்வியுற்றான். அதனால் கட்டாயமாக அரசாட்சியை தன் சகோதரன் சார்லஸ் பெலிக்ஸிடம் ஒப்படைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சார்லஸ் பெலிக்ஸ் அந்த அரச குடும்பத்தின் கடைசி வாரிசு. துரதிர்ஷ்டவசமாக பெலிக்ஸுக்குக் குழந்தை பாக்கியம் இல்லை. அதனால் அவனுக்குப் பின்னால் அரசுக்கு ஒரு வாரிசைத் தேட வேண்டிய கட்டாயம் மத குருமார்களுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டது.

அப்போதுதான் மன்னனின் தூரத்து உறவுக்காரனான சார்லஸ் ஆல்பர்ட் அவர்களுக்குக் கிடைத்தான்.

சாவாய் காரிங்னோ அரச குடும்பத்தைச் சேர்ந்த சார்லஸ், சகல விதத்திலும் அரசாட்சிக்குத் தகுதியானவனாகவே இருந்தான். சார்லஸ் ஆல்பர்ட்டும், அவனது மகன் விக்டர் எம்மானுவலும், தடுமாறிக் கொண்டிருந்த அரசாட்சிக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளித்தார்கள்.

இந்த சமயத்தில்தான் பண்ணை வீட்டில் ஓய்வெடுக்கப் போன இடத்தில் விக்டர் எம்மானுவேல் தீ விபத்துக்குள்ளானான். வாரிசு இல்லாத சார்லஸ் ஆல்பர்ட், அரசாட்சிக்குத் தகுதியானவனான இருக்க முடியாதே...

சார்டினியா நாட்டுக்குத் தொடர்ச்சியாக அரசாள வாரிசு தேவை. விக்டர் இறந்து போனான் என்றால் அவனுக்காக உடனே வேறொரு குழந்தையை அந்த இடத்தில் வைக்க வேண்டும் என்கிற கட்டாயம் சார்லஸுக்கு.

அதனால் வாரிசு இறந்த விஷயம் முற்றிலுமாக மறைக்கப் பட்டது. அத்துடன் புதிய வரவும் வெளியுலகிற்குத் தெரியாமல் இருக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

சார்லஸ் ஆல்பர்ட்டும், மரியா தெரிசாவும் தங்களுடைய குமாரனின் வளர்ச்சியிலோ, புத்திசாலித்தனத்திலோ, மற்றவர் களுடன் பழகுவதிலோ சிறிதளவும் கூட திருப்தியடைந்தவர் களாகத் தெரியவில்லை.

தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் மரியா, தன் மகன் அரண் மனையில் எல்லாரையும் தன் நடத்தையால் வெறுப்பேற்றுகிறான் என்று குறிப்பிட்டிருந்தாள். பயங்கரமாக சப்தம் போடுவது, படிப்பில் அக்கறை செலுத்தாமல் இருப்பது போன்றவைதான் அவனது குணங்களாக இருந்தன.

நெருப்பு விபத்திற்குப் பிறகு, அரச தம்பதிக்குப் பிறந்த இரண்டாவது மகன் பெர்டினாண்ட்.

அமைதியானவனாகவும், புத்திசாலியாகவும், கடமையில் கண்ணும் கருத்துமாகவும் வளர்ந்த அவன், தன் சகோதரனுக்கு எல்லா விதங்களிலும் நேர் எதிரிடையாக இருந்தான். எல்லா விதங்களிலும் அவன் சார்லஸ் ஆல்பர்ட்டைப் போலவே இருந்ததாக எல்லாரும் சொன்னார்கள்.

அரச வம்சத்தின் முதல் வாரிசாக இருந்த விக்டர் எம்மானுவல், அரச பரம்பரையில் உள்ளவர்களில் யாருடைய ஜாடையாகவும் இல்லை என்று அவன் தாயாரே சொல்லிக் கொண்டிருந்தாள்.

அரச வம்சத்தின் பெயரைக் காப்பாற்றப் பிறந்த பெர்டினாண்ட் உடல் நலத்தில் சிறந்தவனாக இல்லாமல், நோயாளியாகவே இருந்தான். காச நோய்க்கு அடிமையான அவன் தன் 32ஆவது வயதில் உயிர் நீத்தான்.

அதே சமயத்தில் திடகாத்திரமாகவும், முரட்டுத்தனமாகவும் வளர்ந்த விக்டர் எல்லாவிதமான கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாகியிருந்தான். முறை தவறிப் பிறந்த குழந்தைகளுக்கு அவன்தான் தந்தை என்றார்கள்.

1831ஆம் ஆண்டு சார்லஸ் ஆல்பர்ட் சார்டினியா நாட்டின் மன்னனாகப் பதவியேற்றான். நல்ல நிர்வாகியான அவன், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி, அதில் வெற்றியும் கண்டான். சட்ட திட்டங்களை மக்களுக் கேற்றவாறு திருத்தியமைத்தான்.

இராணுவத்தைப் பலப்படுத்தினான். ஓரளவு தன்னை நிலைப்படுத்திக் கொண்ட பிறகு, சார்லஸ் ஆஸ்திரியா நாட்டின் பிடியிலிருந்து, தன் நாட்டை விடுவித்துக் கொள்ளப் போராடத் தொடங்கினான். அப்போது நடந்த போரில் ஆல்பர்ட் தோற்று விட்டதால், எதிரிகளால் அவன் சிறுமைப்படுத்தப்பட்டான். போர்ச்சுகல் நாட்டின் மத குருமார்களின் மடத்தில் தன் காலத்தைக் கழித்த அவன், அங்கேயே மரணமடைந்தான். அதற்கு முன், தன் பதவியைத் துறந்த அவன் தன் மூத்த மகன் விக்டர் எம்மானுவலுக்கு அரச பதவியை அளித்தான். விக்டர்

எம்மானுவல் II என்கிற பெயரில் அவனும் அரியணையில் ஏறினான். அரசாளத் தகுதியே இல்லாத ஒருவனுக்கு அரசு பதவி கிடைத்த கதை இதுதான்.

தைரியசாலியான அவன், மீண்டும் தன் நாட்டு மக்களின் உரிமைக்காக, தன் தந்தையைப் போலவே போராடத் தொடங்கினான். ஆஸ்திரிய நாட்டின் எந்தத் தேவைகளையும் அவன் பூர்த்தி செய்யத் தயாராக இல்லை. ஆஸ்திரிய நாட்டிற்கெதிராக புரட்சிக் குரலை எழுப்பிய இத்தாலியர்களுக்கு உடனே மன்னிப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தான். இதனால் மக்கள் அவனைத் தங்களின் தலைவனாக ஏற்றுக் கொண்டார்கள்.

இன்னொரு புத்திசாலித்தனமான செயலையும் அவன் செய்தான். காமிலோ பிரபுவைத் தன் அரசவையில் சேர்த்துக் கொண்டான். அவர் ஓர் அரசியல் சாணக்கியர். இத்தாலிய மக்களுக்காகவே பாடுபடும் பிரபு. அவரைப் பிரதம மந்திரியாக்கியதன் மூலம், எம்மானுவல் நல்ல பெயரைச் சம்பாதித்தான். அவரது முழுப் பெயர் காமிலோ பென்சோ கேவர் என்பதாகும்.

என்ன செய்தாலும், அவனை நல்லவனாகவே பார்க்காத ஒரு கும்பல் அங்கே இருக்கத்தான் செய்தது. இதில் மிகவும் முக்கிய நபர், இங்கிலாந்து மகாராணி விக்டோரியா. அவள் இவனை விட ஒரு வயது மூத்தவள்.

''காட்டுமிராண்டி போலிருக்கும் இவன் நாகரிகமானவனே அல்லன்; சிறு வயது முதற்கொண்டே இவனை நான் நன்றாகவே அறிவேன். ஐரோப்பிய மன்னர்களில் இவன் மிகவும் வித்தியாசமானவன்'' என எழுதி வைத்தாள்.

கேவர் பிரபு ஒரு நல்ல விவசாயி, வியாபாரி - இவை அவர் அரசியலுக்கு வருவதற்கு முன்பு செய்து கொண்டிருந்த தொழில்கள் - இத்தாலிய தேசிய இயக்கத்தை நிறுவிய முன்னோடிகளில் ஒருவர் என்று 1847ஆம் ஆண்டு இத்தாலியப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டது. அந்தப் பத்திரிகை உதயமாதவற்கும் இவரே காரணகர்த்தா!

பிரதமரான பின்பு அவர் இருமுனைச் சண்டைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

இத்தாலியில் இரண்டு பிரிவுகள். அவர்களுக்குள் இருந்த வேற்றுமைகளை அகற்றி ஒன்று சேர்க்க வேண்டும். ஒரு சாரார் இப்போதிருக்கும் நிலையை ஒப்புக் கொண்டாலும், இன்னொரு சாரார் ஒற்றுமையான புதிய இத்தாலி உருவாக வேண்டும் என்கிற கருத்துள்ளவர்கள்.

ஐரோப்பாவில் உள்ள எல்லா அரசுகளையும் சந்தித்து 'ஒற்றுமையான இத்தாலியினால் உங்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராது. அதனால் பயப்படத் தேவையில்லை'' என்றார் பிரதமர்.

தன்னுடைய இராஜதந்திரமான பேச்சுகளால் நினைத்ததைச் சாதித்துவிட்டார் கேவர் பிரபு என்றே சொல்லலாம்.

1861ஆம் ஆண்டு மார்ச் பதினான்காம் தேதி இத்தாலிய சாம்ராஜ்யம் ஒரு குடையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு, அதற்கு விக்டர் எம்மானுவல் II மன்னனாகப் பதவியேற்றான்.

அவன் பதவியேற்ற மூன்றே மாதங்களில் கேவர் பிரபு இறந்து விட்டார்.

ஒரு சாதாரண கசாப்புக் கடைக்காரனின் மகனை ஒருங் கிணைந்த இத்தாலியின் மன்னனாக முடிசூட்டியது கேவர் பிரபுவிற்கு ஒரு சாதனையா?

இதைப் போன்ற மறைமுகக் குற்றச்சாட்டுகள் ஆங்காங்கே எழுந்ததை விக்டர் எம்மானுவலும் உணர்ந்தான். அவன் காதுபடவே பல பிரபுக்கள் பேசினார்கள்.

அதனால் அந்த வதந்திகளைத் தடுக்க பல கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டான் அந்த முரட்டு அரசன்.

1860ஆம் ஆண்டு நடந்த இத்தாலிய ஐக்கிய விழாவிற்கு பிளாரன்ஸ் நகருக்கு மன்னன் வருகை தந்தான். அங்கே மன்னனின் சொத்துகளுக்குப் பாதுகாவலனாக நியமிக்கப்

பட்டிருந்தவன் இறந்து போன நர்ஸ் தெரிசா ஜனனோட்டி ரக்காவின் புதல்வன்.

சார்லஸ் ஆல்பர்ட் பண்ணை வீட்டில் தன் மனைவியுடன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது எழுதிய பல கடிதங்களை, அந்த நிர்வாகி டஸ்கேனி கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பி வைத்தான். இவை 1822ஆம் ஆண்டு கோடைக்காலத்தின் போது எழுதப்பட்டவை. இதனால் என்னவென்று கேட்கிறீர்களா?

ஏப்ரல் 15ஆம் தேதி மன்னன் பிளாரன்ஸுக்கு வரும் முன்னரே, கடிதத்தின் சில முக்கிய பகுதிகள் பிளாரன்ஸின் பிரபல பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளியாயின.

கொடூர தீ விபத்து, நர்ஸின் துணிச்சலான காரியங்கள், அரச குடும்பத்தின் ஒரே வாரிசான குழந்தை எந்தவிதமான ஆபத்து மில்லாமல் தப்பியது போன்ற விஷயங்கள் அப்பத்திரிகையில் விபத்து நடந்த 38 ஆண்டுகளுக்குப் பின்னால் வெளியாயின.

இதில் முக்கியமாக ஒரு கேள்வி எழுந்தது. இறந்து போன நர்ஸின் மகனுக்கு அரசன் ஆல்பர்டின் கடிதங்கள் எவ்வாறு கிடைத்தன? அரசனாலேயே கொடுக்கப்பட்டு இருக்கலாமோ?

நடந்து முடிந்தவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்ய எண்ணிய விக்டர் எம்மானுவல், இப்போது கான்வென்ட்டாக மாறி விட்ட பண்ணை பங்களாவில் நர்ஸின் தியாகத்தைப் பாராட்டி ஒரு கல்வெட்டைத் திறந்து வைத்தான். எது உண்மை, எது பொய் என்று தெரியாது. ஆனால் நர்ஸின் உயிர் பலியானது உண்மை. அதற்காக இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அரச மரியாதை செய்யப்பட்டது, யாரைத் திருப்திபடுத்த?

ஆனால் வதந்திகளை ஒரேயடியாகத் தவிர்த்து விட முடியவில்லை. விக்டர் எம்மானுவல் சாகும் வரை அவை, அவனைத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன.

ஒரு கசாப்புக் கடைக்காரன் மகன்தான் எம்மானுவல் என்பது வெறும் வதந்திதான் என்று நம்பப்பட்டாலும், இதற்கு மரண அடி

விழுந்தது 1883ஆம் ஆண்டில்தான் - அதாவது மன்னன் எம்மானுவல் இறந்து ஐந்தாண்டுகள் ஆன பிறகு.

இதற்கு என்ன ஆதாரம்?

இதோ இருக்கிறது, படியுங்கள்.

விக்டர் எம்மானுவலைத் தூக்கிப் பிடித்தவர்களில் மிகவும் முக்கியமானவர் நாவலாசிரியர், மாசிமோ எஜக்லியோ என்பவர். 1849-52 ஆண்டுகளில் இவர்தான் மன்னனின் பிரதம மந்திரியாக இருந்து ஆலோசனை சொன்னவர்.

எந்தவிதமான அனுபவமும் இல்லாத மன்னனுக்கு எல்லாமே சொல்லிக் கொடுத்து, அவனை ஒரு நல்ல மன்னனாக ஆக்கிய பெருமை இந்த எழுத்தாளரையே சாரும். மன்னனை விட 20 வயது மூத்தவரான இந்த எழுத்தாளர், மக்களிடத்தில் நன் மதிப்பைப் பெற்ற ஒரு சிறந்த ஆலோசகர், நம்பிக்கையானவர்.

ஆனால் காலப் போக்கில் மன்னனுக்கும் இந்த எழுத்தாளர் ஆலோசகருக்கும் ஏதோ மனக்கசப்பு ஏற்பட்டு விட்டது. அதனால் இவர் இடத்தில் முதன் மந்திரியாக கேவர் திடீரென நியமிக்கப்பட்டார்.

1866ஆம் ஆண்டு இந்தப் பிரபல எழுத்தாளர் எஜக்லியோ இறந்து போனார். ஆனால் இறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தன்னுடைய நெருங்கிய நண்பரும், புத்தகப் பதிப்பாளரு மான கேஸ்பெரோ பர்பிரா என்பவருக்கு ஓர் உண்மையைச் சொல்லியிருக்கிறார்.

மன்னன் எம்மானுவல் உண்மையில் கசாப்புக் கடைக்காரனின் மகன்தான் என்பதைத் தான் நம்புவதாகவும், அதைத் தான் இதுவரை யாரிடமும் சொன்னதில்லை என்றும் சொல்லியிருக் கிறார்.

பர்பிரா தன்னுடைய நினைவுகளைப் பதிவு செய்த ஆவணங்களில் எழுத்தாளர் சொன்னதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

அவரது இந்தப் புத்தகம் அவர் இறந்த பிறகு 1883ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

''ஆங்கிலேய மன்னர்களின் குழந்தைகள் மிகவும் மென்மையான பந்தயக் குதிரை போன்ற தோற்றமுடையவர்கள். ஆனால் எம்மானுவல்? அவனது கைகள் ஒரு கசாப்புக் கடைக்காரனின் கைகளைப் போலவே இருந்தன'' என அந்தப் பதிப்பாளர் தன் பதிப்பித்த நினைவுகளில் குறிப்பிட்டிருக்கிறார்.

எழுத்தாளர், சொன்னதன் அடிப்படையில்தான் பதிப்பாளர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறாரா? அப்படியென்றால் முன்னால் பிரதம மந்திரியின் கூற்றுக்கு என்ன ஆதாரம்? ஏதோ ஓர் இக்கட்டான சந்தர்ப்பத்தில் மன்னன் இவரிடம் தன் பிறப்பைப் பற்றி உளறி இருப்பானா? அல்லது தன்னை மந்திரி பதவியிலிருந்து விலக்கியதற்காக மன்னன் மீது, பிரதம மந்திரி இவ்வாறு பழியைப் போடுகிறாரா?

மன்னனின் நிர்வாகப் போக்கு பிடிக்காமலும், ஐக்கிய இத்தாலிக்கு அவன் மன்னனாக இருக்க லாயக்கற்றவன் என்பதாலும், தன் பதவியை எழுத்தாளர் ராஜினாமா செய்தார் என்றுதான் அப்போது காரணம் சொல்லப்பட்டது.

ஆனால் மொத்தமாக இத்தாலியர்களுக்கு, தங்களுடைய மன்னனின் பிறப்பைப் பற்றிக் கவலையே இல்லை.

1946ஆம் ஆண்டு இத்தாலி மக்கள், மன்னராட்சிக்கு ஒரு முடிவைக் கண்டார்கள். எம்மானுவலின் பேரன் அப்போது அரசனாக இருந்தான்.

விக்டர் எம்மானுவல் II என்பவன் சரியான சமயத்தில் பதவிக்கு வந்து சிறப்பாக அரசாண்டான் என இத்தாலிய மக்கள் இன்றும் சொல்கிறார்கள்.

■

ஏமாற்றப்பட்ட வாரிசு

1828ஆம் ஆண்டு நூரன் பெர்க்கில் ஓர் இளைஞன் திடீரெனத் தோன்றினான். அவன் யார், எங்கேயிருந்து வந்தான் என்று யாருக்குமே தெரியாது. நூரன்பெர்க், ஜெர்மனியில் உள்ள ஓர் ஊர். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அதே இளைஞன் கொலை செய்யப்பட்டான். அவன் யார் என்பதும், யாரால் கொல்லப்பட்டான் என்பதும் யாருக்குமே தெரியாத மர்மமாகிப் போனது.

சற்று விவரமாகத் தெரிந்து கொள்வதென்றால் - அரண்மனையின் பூந்தோட்டத்திலிருந்து அவன் அலறிக் கொண்டே ஓடி வந்தான். ஒன்றுக்கொன்று சம்பந்தமேயில்லாத வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வந்தன. 'மனிதனின் கையில் கத்தி... பர்ஸைக் கொடுத்தான்... கத்தியால் குத்தி விட்டான்... நான் இங்குமங்குமாக ஓடினேன்...'' என்றான் அந்த வாலிபன், தன்னை யாரோ துரத்திக் கொண்டு வந்ததுபோல் ஓடி வந்தபடி.

அவனது இட மார்பில் கத்தியால் ஆழமான காயம் ஏற்பட்டிருந்தது.

1833ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி, இந்த சம்பவத்திற்குப் பிறகு மூன்று நாள்கள் கழித்து இறந்து போனான்.

கேஸ்பர் ஹவுசர் என்றழைக்கப்பட்ட அந்த வாலிபன் உள்ளூரில் ஓர் ஆசிரியர் வீட்டில் தங்கியிருந்தான் என்று சொன்னார்கள். கத்திக் குத்தால்தான் அவன் இறந்தான் என்று முடிவானது.

அவன் சொன்ன அந்த பர்ஸும், அவனைக் கொன்ற கத்தியும் கண்டுபிடிக்கப்பட்டன. பன்னிரண்டு அங்குல நீளமிருந்தது அக்கத்தி.

அதை உபயோகித்து, அந்த இளைஞனைக் கொன்றவன் யார்? கொலை செய்ததற்கு என்ன காரணம்?

இவற்றுக்கெல்லாம் விடை தெரியவில்லை. தெரிந்தால் ஐந்தாண்டுகளுக்கு முன்பு நூரன்பெர்க்குக்கு வந்த கேஸ்பர் ஹவுசர் என்னும் வாலிபனின் உண்மையான கதை என்ன என்பது தெரிந்து விடும்.

சற்று பின்னோக்கிப் போகலாம்.

1828ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் தேதி.

விசித்திரமாகவும், கோமாளித்தனமாகவும் உடையணிந்த ஓர் உருவம் நூதன்பெர்க், அன்சிலிட் சதுக்கத்தில் நடக்க முடியாமல் தடுமாறிக் கொண்டே வந்தது.

இடையில் கிழிந்து போன டிரௌசர், மேலே ஒரு பழைய சாம்பல் நிற ஜாக்கெட், அதற்கு மேல் மிகவும் பழைய சட்டை, காலில் கிழிந்த பூட்ஸ், தலையின் மீது நீளமான ஒரு தொப்பி.

இவற்றுடன் காணப்பட்ட அவனால் சரியாகக் கூட அடியெடுத்து வைக்க முடியவில்லை. நடைபழகும் ஒரு சிறு குழந்தையைப் போல் அவன் தடுமாறியவாறு நடந்தான்.

அவனை வியப்போடு பார்த்தவர்கள் இருவர். தொழிலால் அவர்கள் செருப்பு தைக்கும் தொழிலாளர்கள். ஜேக்கப், ஜார்ஜ் என்பன அவர்களின் பெயர்.

'அவன் யார்?' என்று அவர்கள் இருவரும் விசாரித்தபோது, முக்கி முனகிக் கொண்டே அவன் சொன்னது என்னவென்றே அவர்களுக்குப் புரியவில்லை. தொடர்ந்து அவர்கள் வற்புறுத்தியபோது தன்னிடமிருந்து ஒரு கசங்கிய கடிதத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தான்.

நூரன்பெர்க்கில் முகாமிட்டிருந்த ஆறாவது பிரிவு காலாட் படையின், நான்காவது பகுதி கமாண்டருக்கு அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது.

அக்கடிதம் அவர்களிடம் மரியாதையை உண்டாக்கியது. ஜார்ஜ் அந்தப் பக்கமாகப் போவதால், வாலிபனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய், நகரத்தின் பிரதான வாயிலில் இருந்த காவல்காரனிடம் ஒப்படைத்தான்.

அவனோ, பையனைச் சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விட்டான்.

அங்கேயிருந்த காவல்காரன் ஒருவன், தளபதி வரும்வரை அவனைக் குதிரை லாயத்தில் படுக்க வைத்தான். சாப்பிட கொஞ்சம் உணவும் கொடுத்தான். ரொட்டியை மட்டும் பையன் சாப்பிட்டு விட்டு, நீரை அருந்தியபின் களைப்பினால் அவன் அப்படியே தூங்கி விட்டான்.

இரவு எட்டு மணிக்கு மேல்தான் தளபதியான பிரபு பிரெடரிக் அங்கே வந்தார். வேலைக்காரன் அவரிடம் விஷயத்தைச் சொல்லி, வாலிபன் கொடுத்த கடிதத்தையும் காட்டினான். தளபதிக்கோ அக்கடிதத்தைப் பார்த்து எதையுமே தெரிந்து கொள்ள முடியவில்லை. வாலிபனை எழுப்பி, தன்னிடம் அழைத்து வரச் சொல்லி வேலைக்காரனுக்கு உத்தரவிட்டார்.

அவர் வாலிபனிடன் கேட்ட கேள்விகளுக்கு ஓரிரு வார்த்தைகளால், அதுவும் புரியாத வார்த்தைகளால் பதிலை முணுமுணுத்தான். அவனால் சரியாகப் பேச முடியவில்லையோ, என்னவோ என்று கூட தளபதி நினைத்தார்.

அவனிடம் நெடுநேரம் பேசிப் பார்த்தும், அவன் யார், எங்கிருந்து வந்தான், அவனிடம் கடிதத்தைக் கொடுத்து அனுப்பியது யார் என்பது போன்ற அறிந்து கொள்ள முடியவில்லை. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வார்த்தை களைக் கொண்டு பிரபுவால் எதையுமே யூகிக்க முடியவில்லை.

வாலிபனின் இந்த நடவடிக்கையால், பொறுமைசாலியாக இருந்த அவருக்கே கோபம் வந்து விட்டது. அதனால் அந்த வாலிபனை அவர் போலீஸில் ஒப்படைத்து விட்டார்.

அவர்களும் கேள்வி மேல் கேள்வி கேட்டு பயமுறுத்தினர். பைத்தியக்காரன் போலிருந்த அந்த வாலிபன், தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். அழுது கொண்டே, ''எனக்கு எதுவுமே தெரியாது'' என்றான். அதே வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொன்னான். பேசிக் கொண்டிருக்கும்போதே, தன் கால்களை அடிக்கடி பார்த்து வேதனைப்பட்டான். கால்களில் வலி இருக்குமோ என்று போலீஸார் சந்தேகப்பட்டார்கள்.

ஏதோ ஒரு குழந்தையின் நடவடிக்கை போலிருந்தது அவன் பேச்சும் செய்கைகளும். அவனிடம் பேச்சு கொடுப்பவர்களுக்கு இந்தப் பதினாறு வயதான வாலிபனின் உடலில் ஒரு குழந்தை குடி கொண்டிருக்கிறதோ என்கிற சந்தேகம்தான் வரும்.

தங்கள் கேள்விகளுக்கு எந்தவிதமான பதிலும் ஒழுங்காக வராததால், போலீஸார் அவனிடம் ஒரு காகிதமும் பேனாவும் கொடுத்து, அவனது பெயரையும் மற்ற விவரங்களையும் எழுதச் சொன்னார்கள்.

அப்போதுதான் நடக்கக்கூடாத அதிசயம் நடந்தது. தங்கு தடையின்றி காகிதத்தில் அவன் தன் பெயரை எழுதினான்.

'கேஸ்பர் ஹவுசர்!'

பெயர் எழுதியதைப் பார்த்த அதிகாரிகள், அவன் எங்கிருந்து வந்தான் என்பதையும், அதே காகிதத்தில் குறிப்பிடச் சொன்னார்கள். ஆனால் அவன் அதற்குச் சொன்ன ஒரே பதில்: ''எனக்குத் தெரியாது!''

முடிவாக போலீஸ் அதிகாரிகள் நூரன்பெர்க் கோட்டைக்குள் இருந்த பெரிய சிறைச்சாலையில் அவனை அடைத்தார்கள்.

இதுதான் நூரன்பெர்க்கை அவன் அடைந்த முதல்நாள் அனுபவம். சரித்திர ஏடுகளும் இதைத்தான் குறிப்பிட்டிருக்

கின்றன. அந்த ஆவணங்களில் அவன் கொண்டு வந்த கடிதமும் இருக்கிறது. கடிதம் மூலம் பல பதில்கள் கிடைக்கும் என்பதற்கு பதிலாக சில கேள்விகள் எழுந்ததுதான் இதில் வியப்புக்குரிய விஷயம்.

அந்தக் கடிதத்தை எழுதியவன் யார்?

அதை அவனே அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறான்.

தினக்கூலியாக வேலை செய்யும் அந்தத் தொழிலாளிக்குப் பத்து குழந்தைகள்.

1812ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ஆம் தேதி, அநாதையாகக் கிடந்த ஓர் ஆண் குழந்தையை, தான் எடுத்துப் பராமரித்ததாகக் குறிப்பிட்ட அவன், அக்குழந்தை எங்கே பிறந்தது, அதன் பெற்றோர் யார் என்கிற விவரங்கள் அவனுக்குக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டான்.

கடிதத்தின் கீழே கையெழுத்து இல்லை. இதில் வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால், கடிதத்துடன் இன்னொரு காகிதமும் இணைக்கப்பட்டிருந்ததுதான். கடிதம் குழந்தையின் ஆடையில் செருகி வைக்கப்பட்டிருந்தது.

அதன்படி பார்த்தால், கடிதத்தை எழுதியது குழந்தையைப் பெற்ற தாயாகத்தான் இருக்க வேண்டும்.

''நான் ஓர் ஏழை. எனக்கு இந்த ஆண் குழந்தை பிறந்தது ஏப்ரல் 1812ஆண்டு 30ஆம் தேதி. இப்போது இக்குழந்தைக்கு ஆறு மாதங்கள் ஆகின்றன. என்னால் இக்குழந்தையை வளர்க்க முடியவில்லை. 'கேஸ்பர்' என்னும் பெயரை இக்குழந்தைக்கு வைத்திருக்கிறேன்.''

அக்கடிதத்தின்படி பார்த்தால், குழந்தையின் தந்தை உயிருடன் இல்லைபோல் தெரிந்தது. காலாட்படையில் பணி செய்த இராணுவ வீரன் என்பதை மட்டும் அக்கடிதம் மூலம் அறிய முடிந்தது.

அதனால்தான் அந்தத் தாய் தன் மகனை, ஆறாவது பிரிவு காலாட்படையின் நான்காவது பகுதி கமாண்டரிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தாள்; அதுவும், அவன் வளர்ந்து வாலிபனான பிறகு.

முதல் கடிதம் போலவே குழந்தையின் தாயும் தன் கடிதத்தில் கையெழுத்திடவில்லை. வாலிபனால் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியவில்லை. கடிதங்களில் கையெழுத்தும் இல்லை. அவனைப் பற்றிய விவரங்கள் தெரிவதற்குப் பதிலாக குழப்பங்கள்தான் அதிகமாயின.

இதில் முக்கியமான ஒரு கேள்வி எழுகிறது. கடிதம் எழுதிய பெண்மணிக்கு 1828ஆம் ஆண்டு ஒரு குறிப்பிட்ட இராணுவ முகாம் நூரன்பெர்க்கில் இருக்கும் என்று எப்படித் தெரியும்?

முகாம்கள் அடிக்கடி மாறக் கூடியவை. 1812ஆம் ஆண்டு அது வேறோர் இடத்தில் இருந்தது. 16 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த முகாம் எங்கே மாற்றப்படும் என்று யாருக்குமே தெரியாதபோது இப்பெண்ணுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது?

. கசங்கிப் பழுதடைந்த அக்கடிதம் போலியாக இருக்கலாம். மேலும் இரண்டு கடிதங்களும் ஒரே மையினால்தான் எழுதப்பட்டவை போல் தெரிந்தன. காகிதங்களும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. ஆக, இந்த இரு கடிதங்களும் ஒரே சமயத்தில் ஒரே நபரால் எழுதப்பட்டவையாக இருக்கலாம் என்னும் யூகம் எழத்தான் செய்கிறது.

இக்கடிதங்களை எழுதிய நபர், எழுதிய காலம் ஆகியவற்றைக் கொண்டு, வந்த வாலிபனின் நிலையைப் பார்த்தால், சம்பந்தப்பட்டவர்களைக் குழப்பிவிட்டு, தவறான பாதைக்கு வழிகாட்டுவது போலிருந்தது.

அந்த இரு கடிதங்களையும் அந்த வாலிபன்தான் எழுதியிருக்க வேண்டும் என்கிற எண்ணமும் எடுத்த எடுப்பில் அடிபட்டுப் போய் விட்டது. காரணம் காகிதத்தில் எழுதிய அவன் பெயர்.

அந்த எழுத்துகளுக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் இருந்தது: இதன் மூலம் அந்த வாலிபன் ஏதாவது பயனடைய வேண்டும் என்று நினைத்திருந்தால், இந்த வழியை விடச் சிறந்த வேறு வழி எவ்வளவோ இருக்கின்றனவே. மற்றவர்களை நம்பச் செய்வது என்பது ஒரு கலை. அக்கலையில் இந்த வாலிபனுக்கு அதிகப் பயிற்சியில்லை என்பது தெளிவாகியது.

கேஸ்பர் ஹவுசர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும் அதிக நாள்கள் அங்கே அவன் இருக்கவில்லை. சிறையின் வார்டராக இருந்தவர் ஆண்டிரியாஸ் ஹில்டெல். அவருக்குச் சிறைக்குள்ளே தங்குவதற்கு வீடு இருந்தது. அந்த வீட்டின் அருகே இருந்த ஒரு சிறு அறைக்கு கேஸ்பர் மாற்றப்பட்டான். ஹில்டெல் அவனை மிகவும் உன்னிப்பாகக் கவனித்ததில், அவன் ஒரு மன நோயாளி அல்லன் என்பதும், படிப்பு வாசனையே இல்லாத காரணத்தால் தான் அவன் இப்படி வெகுளித்தனமாக நடந்து கொள்கிறான் என்பதையும் அறிந்து கொண்டார்.

இந்த ஒரு காரணத்தால் அவர், அவனைத் தன் குடும்பத்தில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ள முடிவு செய்து விட்டார். சிறைக்குள்ளே அதிகாரியான அவர், இதற்கான அனுமதியும் கேட்டுப் பெற வேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது.

அவரது வீட்டிற்கு வந்த சில தினங்களில் மேஜையின் முன் அமர்வது எப்படி? கரண்டியை உபயோகித்துச் சாப்பிடுவது எப்படி? தினசரி கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை சுகாதார வசதிகள் என்ன? என்பனவற்றையெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டான்.

ரொட்டி, நீரைத் தவிர வேறெந்தவிதமான ஆகாரத்தின் மீதும் அவன் விருப்பமே காட்டவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக மற்ற உணவின் மீது ஈடுபாடு கொள்ள அவனைப் பழக்க வேண்டியிருந்தது. ஹில்டெல்லின் குழந்தைகளுடன் அவன் விளையாடத் தொடங்கினான். அவர்களில் பதினோரு வயதான ஜூலியஸுடன்

நெருங்கிப் பழகினான். அதனால் அவன் சில வார்த்தைகளையும் கற்றுக் கொண்டான். அதன் பிறகுதான் அவனால் ஒரு முழு வாக்கியத்தையும் பேச முடிந்தது.

சிறைக்குள் இப்படி ஒரு விசித்திரமான மனிதன் இருக்கிறான் என்கிற செய்தி வெளியே பரவ, அவன் எப்படியிருக்கிறான் என்பதைப் பார்க்க மக்கள் திரள் திரளாக சிறைச்சாலைக்கு முன் வரத் தொடங்கினர். இந்தச் சந்தடியால் அவனுக்கு மீண்டும் மன உளைச்சல் ஏற்பட்டு விடுமோ என்று பயந்த அதிகாரிகள் கூட்டத்தைத் தடுத்து நிறுத்தினார்கள். அத்துடன் நில்லாமல் கேஸ்பரை ஓர் ஆசிரியரிடம் ஒப்படைத்தனர். அவர் உள்ளூரில் ஒரு பள்ளியில் வேலை செய்தார். ஜார்ஜ் பிரெடிரிக் டௌமர் என்பது அவர் பெயர்.

ஆசிரியரின் பொறுப்பில் அவன் போனவுடன், மக்களின் ஆர்வம் குறையத் தொடங்கி விட்டது. ஆசிரியரின் போதனைகளால், வாலிபன் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வந்தான். உடலளவிலும், மனத்தளவிலும் அவனிடம் கண்ட மாறுதல், ஆசிரியரையே வியப்படைய வைத்தது.

கேஸ்பர் கொஞ்சம் கொஞ்சமாக நாகரிக மனிதனாக மாறி வரும்போது, திடீரென்று மீண்டும் பரபரப்பாகப் பேசப்பட்டான். எதனால்?

1829ஆம் ஆண்டில் அக்டோபர் 17ஆம் தேதி அவன் டௌமரின் வீட்டில் இருந்தபோது, கறுப்பு அங்கி அணிந்த ஒரு மனிதன், கூர்மையான ஆயுதத்தால் அவனைத் தாக்கி விட்டு மறைந்தான்.

அதனால் கேஸ்பரின் நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டது. உயிருக்கு உலை வைத்த இந்தத் தாக்குதல் நெற்றியில் பட்ட காயத்தோடு முடிந்தது. எதனால் இந்தத் தாக்குதல் நடைபெற்றது? கேஸ்பர் உயிரோடு இருப்பது யாருக்கோ பிடிக்கவில்லை என்பதன் விளைவா இது?

கேஸ்பர், 1828ஆம் ஆண்டு, ஜூலை மாதம் நூரன்பெர்க்கில் அடியெடுத்த வைத்த சில வாரங்களுக்குப் பின், வக்கீலும் தத்துவ மேதையுமான பால் ஜான் அனிஸ்லம் என்பவர், அவன் மீது கவனம் செலுத்தி அவனுடன் அறிமுகம் செய்து கொண்டு அவனைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்.

பால் தன் விசாரிப்புகளை, ஆராய்ச்சிகளைத் தொடர்ந்ததன் பயனாக 1832ஆம் ஆண்டில், தன் முயற்சிகளுக்குப் பலன் கிடைத்து விட்டதாக நினைத்தார்.

கேஸ்பர் ஹவுசர் என்பவன் உண்மையில் யார் என்ற கேள்விக்கு விடை கிடைத்து விட்டதாக அவர் முடிவுக்கு வந்தார்.

பால் ஜான், ஜனவரி 4ஆம் தேதி தன் டைரியில் இவ்வாறு குறிப்பிட்டார். ''கேஸ்பர் ஹவுசர் என்கிற இந்த வாலிபன் உண்மையில் பாதேன் அரண்மனையின் வாரிசான இளவரசன் என்பதைக் கண்டுபிடித்து விட்டேன்.''

இதற்கு முன்பே கேஸ்பர் ஹவுசர், நகரில் தோன்றியபோதே எழுந்த ஊகங்கள் அடங்கும் முன்பே வக்கீலின் ஆராய்ச்சி முடிவு வெளிப்பட, கேஸ்பர் ஹவுசர் மிகவும் முக்கியமான மனிதனாகி விட்டான். அரச குடும்பத்தில் ஏற்பட்ட சூழ்ச்சித் திட்டங்களால் கேஸ்பர் ஹவுசர் பலிகடா ஆகிவிட்டான் என்று பரவலாக எல்லாரும் பேசத் தொடங்கினர். பாதேன் இளவரசனாக இருக்க வேண்டியவன், இப்படி நடுத்தெருவில் வீசி எறியப்பட்டது எதனால்? யார் செய்த சூழ்ச்சி இது?

சட்டப் பூர்வமான ஆதாரங்களுடன் கேஸ்பர் ஹவுசர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் என்பதை வக்கீல் வெளியிட்டார்.

தன் கருத்தை அவர் எழுதி ஒரு விண்ணப்ப வடிவத்தில் 1832ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாதேன் இளவரசி கரோலினுக்கு அனுப்பி வைத்தார். வாரிசு ரீதியாக பார்க்கப் போனால் கேஸ்பருக்கு, கரோலின் அத்தை முறை.

ஜெர்மன் நாட்டு அரச குடும்பங்களின் சரித்திரங்களை விவரமாக ஆராய்ந்த வக்கீல் ஒரு மாபெரும் உண்மையைக் கண்டு

பிடித்தார். கேஸ்பர் ஹவுசர் 1812ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் தேதி கார்ல் தம்பதிக்கு மகனாகப் பிறந்தவன். அப்போது கார்ல், பாதேன் நாட்டு இளவரசன். அவன் மனைவி ஸ்டீபென்னி. இவள் யார் என்ற ஆராய்ச்சியில் இறங்கினால், இவள் பிரெஞ்சு மகாராணி ஜோசப்பின்னின் முதல் கணவனின் சகோதரி மகள். ஆனால் இவளைத் தன் மகளாக சுவீகரித்துக் கொண்டவன் சக்கரவர்த்தி நெப்போலியன். ஜோசப்பின் மகாராணியின் இரண்டாவது கணவன்தான் நெப்போலியன்.

வாட்டர்லூ யுத்தத்தில் தோல்வி காண்பதற்கு முன்பு தன் முக்கியமான உறவினர்களை ஐரோப்பாவில் பல நாடுகளில் முக்கியமான பதவியில் அமர்த்தி விட்டான். அவன் செய்த மிக நல்ல காரியம் இது.

ஸ்டீபென்னிக்கு பிறந்த ஆண் குழந்தை பிறந்த மூன்றே வாரங்களில் இறந்து விட்டதாக அரசாங்கக் குறிப்பேடுகள் தெரிவித்தன.

ஆனால் வக்கீலின் ஆராய்ச்சியின் பயனாக இளவரசன் அங்கிருந்து கடத்தப்பட்டு, அவன் இடத்தில் இறந்த குழந்தை யொன்று வைக்கப்பட்டது என்கிறார்.

இந்த சதிவலைக்குப் பின்னாலிருந்தவள் இன்னொரு சீமாட்டி. ஹாட்ச் பெர்க் எனும் பெயர் கொண்ட அந்த சீமாட்டி, கார்ல் பிரெடரிக் எனும் பிரபுவின் இரண்டாவது மனைவி. இவளுக்கு ஏன் இந்தக் கெடுமதி?

தனக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு எக்காலத்திலும் அரசுரிமை கிடைக்கப் போவதில்லை என்பதை அறிந்த அவள், அதற்குத் தடையாக இருந்த எந்த வாரிசையும் விட்டு வைக்கத் தயாராக இல்லை. கேஸ்பர் ஹவுசர் ஒரு முக்கியமான வாரிசாக இருந்ததே இதற்குக் காரணம் என்பதை நிதானமாகவும், சாட்சியங்களோடும் தெரிந்து கொண்ட வக்கீல் பால் ஜான், அந்த உண்மைகளை மெதுவாக வெளியிடத் தொடங்கினார்.

ரா. வேங்கடசாமி

இதனால் கேஸ்பருக்கு உண்மையான அந்தஸ்து கிடைத்து விடும் என்று தெரிந்து கொண்ட கெடுமதியாளர்கள் வக்கீல் பால் ஜானைக் கொன்று விட்டார்கள். அவர் திடீரென நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டதாக வெளியுலகத்திற்குச் சொல்லப்பட்டது.

இறப்பதற்கு முன்பு அவர் சில தவிர்க்க முடியாத, அதே சமயம் மறுக்க முடியாத ஆதாரங்களை விட்டுச் சென்றார். அவற்றை அவ்வளவு எளிதாக ஒதுக்கித் தள்ளி விட முடியாது.

நூரன்பெர்க் நகருக்குள் கேஸ்பர் அடியெடுத்து வைத்த ஆண்டு 1828. அப்போது அவனுக்குப் பதினாறு வயது. அவன் கொண்டு வந்த கடிதத்தின்படி அவனது பிறந்த ஆண்டு 1812. பெயரிடப்படாத பாதேன் இளவரசன் பிறந்ததும் அதே ஆண்டில்தான்.

ஹாட்ச் பெர்க் சீமாட்டி தன் வாரிசுகளை அரியணையில் அமர்த்த, செய்த சதித் திட்டம் என்பதற்கு இதை விட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

1812ஆம் ஆண்டு கார்ல் மகா பிரபுவிற்கு இரண்டு உறவினர்கள் - சகோதரர்கள் முறை. அவருக்குப் பிறகு அவர் களுக்குத்தான் அரசுரிமை காத்துக் கொண்டிருந்தது. பிரெடரிக், லட்விக் என்னும் அந்த இருவரும் கார்ல் பிரெடரிக்குக்கு முதல் மனைவி மூலம் பிறந்தவர்கள். 1817ஆம் ஆண்டு பிரெடரிக் இறந்தார். அதனால் லட்விக் அரியணையில் ஏறி 1818 முதல் 1830ஆம் ஆண்டு வரை அரசாட்சி நடத்தினார், இருவரில் பெரியவர் என்கிற காரணத்தினால். அதுவுமல்லாமல் பிரெடரிக் இளம் வயதிலேயே இறந்து விட்டார்.

இதற்குப் பிறகுதான் ஹாட்ச் பெர்க் குடும்ப வாரிசு அரியணை ஏற வேண்டும். ஆனால் இந்த மாறுதல்களை எப்படி 1812ஆம் ஆண்டிலேயே எதிர்பார்த்திருக்க முடியும்?

இன்னொரு முக்கியமான கேள்வியும் இங்கே எழுகிறது. 1812ஆம் ஆண்டு பிறந்த குழந்தை ஏன் நாடு கடத்தப்பட்டு, அந்த இடத்தில் ஓர் இறந்த குழந்தை வைக்கப்பட்டது? அதற்குப் பதிலாக அந்தக் குழந்தையைக் கொன்றிருக்கலாமே? இது ஓர் ஆபத்தான முயற்சியல்லவா? இந்தச் சதி பாதேன் அரண்மனையிலா நடந்தது என்கிற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பது ஒரு பக்கம். ஒரு தொழிலாளியின் இறந்த குழந்தை தொட்டிலில் வைக்கப்பட்டது என்பதற்கான சந்தர்ப்ப சாட்சியங்கள் மட்டுமே உள்ளன. அந்தக் குழந்தை இதற்காகவே கொல்லப்பட்டதா? அல்லது தானாக இறந்ததா என்கிற கேள்விகளுக்கும் பதிலில்லை.

இதை நம்புவதற்கு உள்ள ஒரே காரணம். ஸ்டீபென்னியை கவனித்துக் கொண்ட நர்ஸ், அவள் அறைக்குள் விடப்படவே இல்லை. இரண்டாவதாக ஸ்டீபென்னி தன் இறந்து போன குழந்தையைப் பார்க்க அனுமதிக்கப்படவே இல்லை.

ஹாட்ச்பெர்க் சீமாட்டிதான் இந்த விஷமங்களைச் செய்தாள் என்பதற்கான சாட்சியங்கள் சரிவர இல்லையென்றாலும், குழந்தை இருந்த அறைக்குள் அவள் அடிக்கடி போய் வந்தாள் என்பதுதான் அவள் மீது சந்தேகம் கொள்ள வைக்கிறது. மேலும் இறந்த குழந்தையின் தந்தையான பிளாட்ச்மேன் என்னும் தொழிலாளியை வேலைக்குச் சேர்த்ததே இந்த ஹாட்ச்பெர்க் சீமாட்டிதான்.

இந்த இட மாறுதலில் தொழிலாளியின் குழந்தைதான் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்? அதற்கென்ன ஆதாரம்?

முறையான தேடுதலும், சரியான ஆராய்ச்சியின் பயனாகவும் தான் அதிர்ஷ்டவசமாக இந்தத் தடயங்கள் கிடைத்தன என்றே சொல்ல வேண்டும்.

பிளாட்ச்மேனின் குழந்தை 1812ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் தேதி பிறந்ததாக சர்ச்சில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. பிறந்த தேதிக்கு எதிராக அந்தக் குழந்தை வளர்ந்து பெரியவனாகி இறந்த பிறகான தேதியும் இதற்கு எதிராகவே குறிப்பிடப்படும். இது சர்ச்சில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை.

ஆனால் இந்தக் குழந்தை பிறந்த தேதி மட்டும்தான் இருக்கிறது. இறந்த தேதி இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக வேறொரு நீண்ட குறிப்பு எழுதப்பட்டிருந்தது.

1833ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 முதல் 16ஆம் தேதிக்குள் அந்தக் குறிப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். என்ன குறிப்பு அது?

'ராயல் கிரேக்க இராணுவத்தில் பணியாற்றிய காஸ்பர் எர்னஸ்ட் பிளாட்மேன் என்னும் பெயருடைய வீரன் 1833ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மியூனிச் நகரில் இறந்து விட்டான். இந்த நபர் அரண்மனையில் வேலை செய்த கிரிஸ்டோ பிளாட்ச்மென் என்னும் தொழிலாளியின் மகன்'.

இந்தச் செய்தியின் பின்னணியை தீவிரமாக ஆராய்ந்ததில் இந்தப் பெயரில் பவேரியா இராணுவத்தில் யாரும் பணியாற்ற வில்லை என்றே தெரிந்தது. மேலும் ரிஜிஸ்தரில் பதிவு செய்யும்போது எர்னஸ்ட் என்று முதலில் உள்ள பெயரைத்தான் குறிப்பிடுவார்கள். ஆனால் இங்கே எர்னஸ்ட் பிளாட்ச்மென், கேஸ்பர் ஹவுசர் இரண்டும் சேர்ந்து ஒரே பெயரானதுதான் விந்தை.

இவற்றையெல்லாம் கவனிக்கும்போது யோசிப்பதற்கு நிறைய சந்தர்ப்பமும் இடமும் இருக்கிறது.

நூரன்பெர்க் அரண்மனைத் தோட்டத்தில் 1833ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் தேதி கேஸ்பர் ஹவுசர் திடீரெனத் தாக்கப்பட்டது எப்படி என்கிற கேள்வி எழுகிறதல்லவா?

கேஸ்பர் ஹவுசரின் குழந்தைப் பருவமும், வாலிபனாக வளர்ந்த பருவமும் பற்றிய தகவல்கள் எல்லாமே மர்மமாக இருக்கின்றன. கடத்தப்பட்ட குழந்தை இவன்தான் என்றால், பிளாட்ச்மென் தம்பதியர் இவனை இரண்டு வயது வரை வளர்த்திருக்க வேண்டும். பிறகு 1815ஆம் ஆண்டில் அவன் லேசாகப் பேசத் தொடங்கியவுடன் மேல் ரெய்ன் மாவட்டத்திலிருந்த லாபென் பெர்க், அருகில் பிரம்மாண்டமாக எழுந்திருந்த பியூகன் மாளிகைக்கு அவனைக் கொண்டு போயிருக்க வேண்டும்.

அந்த மாளிகை ஹாட்பெர்க் சீமாட்டிக்குச் சொந்தமானது. பையனை ஒளித்து வைக்க அதுதான் பாதுகாப்பான இடம் என்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும்.

ஏனெனில் முன்பு அந்த மாளிகை ஓர் இராணுவ மருத்துவமனையாகப் பயன்பட்டது. சந்தேகம் எழுதவற்கு இடமேயில்லை.

கேஸ்பர் ஹவுசர் இளம் வயதில் எப்போதுமே அரண்மனை, இராணுவம் போன்றவை குறித்தே பேசுவானாம். கையில் காகிதம் கிடைத்தால்அரண்மனை, போர்க்கருவிகள் போன்றவற்றை படமாகக் கிறுக்குவதும் அவன் வழக்கம். அவன் வரையும் அரண்மனையின் படம் ஏறக்குறைய பீயூகன் மாளிகையைப் போலவே இருக்குமாம்.

இவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால் கேஸ்பர் அங்கே பல ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும் என்னும் முடிவுக்குத்தான் வர வேண்டும்.

இன்னொரு முக்கிய தடயமும் சொல்லப்பட்டது. 1816ஆம் ஆண்டு ரைன் நதியில் கிடைத்த, ஒரு பாட்டிலினுள் இருந்த காகிதத்தில் எழுதப்பட்டிருந்த செய்தி என்னவென்றால், 'நான் ஓர் இருட்டறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறேன். அந்த இடம் லாபென் பெர்க்கில் இருக்க வேண்டும். அது ரைன் நதிக் கரையில் உள்ளது. இப்போது அரசு நடத்திக் கொண்டிருக்கும் நபருக்கு

நான் எங்கே அடைபட்டிருக்கிறேன் என்பது தெரியாது' கடிதத்தின் கீழே HANS SPRANCIO என்று கையெழுத்திடப்பட்டிருந்தது. ஜெர்மனியில் இருந்த இந்தப் பெயரை கவனித்துப் பார்த்தால் 'அவர் மகன் கேஸ்பர்' என்று உச்சரிக்க வரும் என்றார்கள்.

ஆனால் நான்கு வயது கூட நிரம்பாத இந்தக் குழந்தை இப்படி ஒரு செய்தியை நிச்சயம் அனுப்பியே இருக்க வேண்டும். ஆனால் இந்தச் சதியின் பின்னணியில் உள்ள யாரோ ஒரு நபர், உண்மையை உலகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இந்த வேலையைச் செய்திருக்கலாம். இது சாத்தியமே!

அடுத்தபடியாக கேஸ்பர் அடைத்து வைக்கப்பட்டிருந்த இடம் நூரன்பெர்க் நகரிலிருந்து இருபத்தைந்து மைல்களுக்கு அப்பால் இருந்த பில்சாச் கோட்டை. இந்தக் கோட்டை கார்ல் கிரிசென்பெக் பிரபுவுக்குச் சொந்தமானது. தன் நில புலன்களின் கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்காக ஆண்டிற்கொரு முறைதான் அவர் அந்தக் கோட்டைக்கு வருவார்.

இந்தக் கோட்டையின் கீழ்த் தளத்திற்கும் மேல் தளத்திற்கும் இடையே கம்பிகளால் மூடப்பட்ட ஒரு சிறு இருட்டறை உண்டு. வெளியுலகிற்கு இப்படியோர் இடம் இருப்பதே தெரியாது. ஆனால் காற்றும் வெளிச்சமும் வரும்.

1829ஆம் ஆண்டில் ஏப்ரல் 24 அன்று அவனிடம் விவரங் களைத் துருவித் துருவிக் கேட்டபோது, அவன் ஒரு காகிதத்தில் பில்சாச் கோட்டையின் படத்தை வரைந்து அந்த அறையை அதில் குறித்திருந்தான். அந்த அறையில் இருந்த மரக் குதிரை அவனுக்கு விளையாட்டுப் பொருளாக இருந்ததாம்.

1982ஆம் ஆண்டு கோட்டையைப் புதுப்பித்தபோது அறையிலிருந்த மரக் குதிரையைக் கண்டெடுத்தார்கள். குதிரை பழுதடையாமல் நன்றாக இருந்ததாம். கேஸ்பர் கொடுத்த இந்த விவரம் உண்மையானது என்பது ஊர்ஜிதமானது.

இந்த மாளிகையில் அவன் அடைத்து வைக்கப்பட்டிருந்தான் என்பது இதன் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டாலும் 1828ஆம் ஆண்டு, நூரன்பெர்க்கில் அவன் ஏன் நிராதரவாகக் கொண்டு வந்து விடப்பட்டான் என்கிற கேள்விக்குப் பதிலில்லை.

குழந்தைப் பருவத்திலும் வாலிப வயதிலும் சரியான பராமரிப்பும் அன்பும் கிடைக்காமல் வளர்ந்த கேஸ்பர், பிறகு ஐந்தாண்டுகள் தன் மீது அன்பு செலுத்தியவர்களுடன் கழித்தான். எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டான். மொத்தத்தில் மனிதனாக வாழக் கற்றுக் கொண்டான். அப்போது அவனுக்கு பதினான்கு வயது.

கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பதை மட்டும் அவனால் நினைவுபடுத்திக் கோவையாகச் சொல்ல முடிய்வில்லை. பல்வேறு ஆராய்ச்சியாளர்கள், பல சந்தர்ப்பங்களில் இந்த கேஸ்பர் ஹவுசர் உண்மையில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனா என்கிற ஆராய்ச்சியில் இறங்கினாலும் அவர்களால் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வர முடியவே இல்லை.

1828ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன் என்ன நடந்தது என்பதற்கான விவரம் எதுவுமே இல்லாததுதான் குறை.

■

ஷேக்ஸ்பியரின் கதை

இவரைப் போல் இலக்கிய உலகில் அழியாப் புகழ் பெற்றவர்கள் யாருமே இல்லை. 37 நாடகங்கள், 154 பதினான்கு வரிக் கவிதைகள், 2 நெடுங்காவியங்கள், பல உரை நடைக் கட்டுரைகளின் வாயிலாகப் புகழ் பெற்றவர்.

அவருடைய உண்மையான உணர்ச்சிகள் என்ன? அவர் எப்படிப்பட்டவர் என்பதை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அவர் யாருக்கும் கடிதங்களோ அல்லது சொந்தமாக நாட்குறிப்போ எழுதி வைத்ததாகவே தெரியவில்லை. 147 வரிகளில் ஒரு நாடகத்தின் காட்சியை அவர் தன் கிறுக்கல் எழுத்துகளால் எழுதி வைக்கப்பட்டிருந்ததைக் கூட பிற்காலத்தவர் எதனாலோ அழித்து விட்டனர். இது 1595ஆம் ஆண்டில் நடந்த சம்பவம்.

அவருடைய நாடகங்களெல்லாம் இவர் ஒரு பெரிய புகழ் பெற்ற நாடகாசிரியர் என்று அவரது காலத்தவர் பாராட்டினாலும், தன்னுடைய கவிதைகளும், காவியங்களுந்தான் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவை என்று ஷேக்ஸ்பியர் மனதார நம்பினார்.

அவருடைய மொத்த நாடகங்களும் ஒரே புத்தகமாக வெளியிடப்பட்டது, 1616ஆம் ஆண்டில்தான். அப்போது அவர் இறந்து ஏழாண்டுகள் ஆகியிருந்தன. ஆனால் முழுக்க முழுக்க இந்த நாடகங்கள் எல்லாம் அவரால் எழுதப்பட்டவை என்பதை ஒப்புக் கொள்ள அவரது காலத்தவர் சிலர் மறுக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியரின் முழு சரித்திரம் எழுதி வைக்கப்படாத குறை... இங்கொன்றும் அங்கொன்றுமாக கேள்விப்பட்ட சம்பவங்களை வைத்துத்தான் அவரது சரித்திரம் பின்னப்பட்டது.

இங்கிலாந்தின் தென் கிழக்கு பர்மிங்ஹாமில் ஸ்ட்ராட்போர்டு என்று ஒரு பெரிய கிராமம். நகரத்திற்கும் இந்த கிராமத்திற்கு மிடையே 21 மைல்கள். சுமார் 20,000 பேர் ஜனத்தொகையைக் கொண்ட அந்த கிராமத்திலிருந்த சிறிய மாதா கோயிலில் வைக்கப்பட்டிருந்த ஜனனக் குறிப்பேட்டில் 1564ஆம் ஆண்டு ஏப்ரல் 26ஆம் தேதி ஜான் ஷேக்ஸ்பியருக்கு வில்லியம் என்னும் மகன் பிறந்தான் என்று லத்தீன் பாஷையில் குறிப்பிடப் பட்டிருந்தது.

மேரி ஆடனுக்கும் ஜான் ஷேக்ஸ்பியருக்கும் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவன்தான் வில்லியம். அவர்களுக்கு மொத்தம் எட்டு குழந்தைகள். ஜானுக்குக் கையுறைகளைத் தயாரிக்கும் வேலை. சமூகத்திலும் நல்ல அந்தஸ்து இருந்தது.

வில்லியம் தனக்குப் பெயர் சூட்டுவதற்கு இரண்டொரு நாள் முன்னதாகத்தான் பிறந்திருக்க வேண்டும். வில்லியம் என்ன படித்தான், எங்கே படித்தான் என்பதற்கான விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஸ்ட்ராட்போர்டு இலக்கணப் பள்ளியில் அவன் லத்தீன் பாஷையின் இலக்கணத்தைப் படித்தான் என்று மட்டும் தெரிகிறது. சர்ச்சுக்குப் போவது, பைபிள் படிப்பது போன்றவை அவனுக்கு இளமையில் கற்றுக் கொடுக்கப்பட்ட பாடங்கள்.

1582ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், பதினெட்டே வயதான ஷேக்ஸ்பியர், தன்னை விட எட்டு வயது மூத்தவளான அன்னி ஹாத்வேயை திருமணம் செய்து கொண்டார். அவள் ஒரு பணக்கார விவசாயியின் மகள். ஆறே மாதத்தில் அவர்களுக்கு சூசென்னா என்னும் மகள் பிறந்தாள்.

1585ஆம் ஆண்டில் அவர்களுக்கு இரட்டைக் குழந்தை பிறந்தன. ஓர் ஆண், ஒரு பெண். ஆணுக்கு ஹேமட் என்கிற பெயரும், பெண்ணுக்கு ஜூடித் என்கிற பெயரும் வைத்தார்கள்.

அதற்குப் பிறகு 1592ஆம் ஆண்டு லண்டன் நாடக மேடைகளில் நடிகனாகவும், நாடக ஆசிரியராகவும் ஷேக்ஸ்பியர் தோன்றும் வரை, அந்த இடைக்காலத்தில் அதாவது ஏழாண்டுகள் என்ன நடந்தன என்பதற்கான குறிப்புகள் எதுவுமே இல்லை.

ஷேக்ஸ்பியர் வளர்ந்து வாலிபனாக உருவெடுத்தபோது ஸ்ட்ராட்போர்டு ஊர்ப் பெரிய மனிதர்களில் சிலர் நாடகத் தயாரிப்பில் ஆர்வம் காட்டினர். கொஞ்சம் கொஞ்சமாக பென்ட்டகோஸ்ட்டில் நாடக மேடைகள் உருவாகின. அப்போது தான் யாரேனும் ஒரு தயாரிப்பாளர் ஷேக்ஸ்பியருக்கு நடிக்க வாய்ப்பைக் கொடுத்திருக்க வேண்டும் அல்லது பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று பொழுதுபோக்கிற்காக நடத்தப்பட்ட தெருக் கூத்துகளைக் கவனித்திருக்க வேண்டும்.

அதுவுமல்லாமல் அந்த நேரத்தில் ஊர் ஊராகச் சுற்றும் தெருக் கூத்து நடிகர்கள் ஷேக்ஸ்பியரின் ஊரிலும் கூத்து நடத்தினார்கள். ஒரே வருடத்தில் ஐந்து விதவிதமான கோஷ்டிகள் ஸ்ட்ராட்போர்டுக்குள் வந்து கூத்துகள் நடத்தினார்கள். அப்போது குடிகாரர்கள் போட்டுக் கொண்ட சண்டையில் ஒரு கூத்து நடிகன் கொல்லப்பட்டான். அவனுக்குப் பதிலாக இந்த வருங்கால நடிகனை - அதாவது ஷேக்ஸ்பியரை - அவர்கள் அழைத்துக் கொண்டு போய் விட்டார்களா? அதற்கும் சரியான சான்றுகள் இல்லை.

ராபர்ட் கிரீன் என்ற ஓர் அரைகுறை நாடக ஆசிரியன் - அவனாக தன் மனம் போனபடி நாடகங்கள் எழுதி அரங்கேற்றுவது அவனது வழக்கம். லண்டனில் அவன் தன் நாடகங்களை நடத்தியபோது அதில் அதிக முக்கியத்துவம் இல்லாத ஒரு வேடம் ஷேக்ஸ்பியருக்குக் கிடைத்தது. இதுதான் அவருக்கு முதலில் கிடைத்த நாடக மேடை அனுபவம்.

'தன்னைப் போல் நாடகம் எழுதுபவர் இங்கே யாருமில்லை' என ராபர்ட் கிரீன் தம்பட்டம் அடித்துக் கொண்டான். அவன் அறைகூவல் விடுத்ததைப் போல் லண்டனில் யாரும் பிரமாதமாக நாடகங்கள் எழுதியதே இல்லை. ஆனால் நடிக்கும்போது

ஷேக்ஸ்பியர் நாடக ஆசிரியனின் எழுத்துகளில் - வசனங்களில் - சற்றே மாற்றி அமைத்துப் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டார்.

'ஆறாவது ஹென்றி' என்றொரு நாடகம். அந்த நாடகம் மிகவும் நன்றாக நடந்தது. 'பெண் உடையில் ஒரு புலி வருகிறது' போன்ற புரட்சிகரமான வசனங்களை ஷேக்ஸ்பியர் நாடகத்தில் சேர்த்த போது மக்கள் நன்றாக ரசித்தனர்.

என்னதான் இது தன் எழுத்து என்று ராபர்ட் கிரீன் தம்பட்டம் அடித்துக் கொண்டாலும் நாடகத்தில் முக்கால் பகுதியை ஷேக்ஸ்பியர்தான் எழுதியிருக்க வேண்டும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

1592ஆம் ஆண்டிற்கு முன்பு இந்த நாடக ஆசிரியன் இதை எழுதியிருக்கலாம் என்று விமர்சகர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஏனெனில் அப்போதுதான் ஷேக்ஸ்பியர் பல நாடகக் கம்பெனிகளில் சேர்ந்து நடித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் 1593ஆம் ஆண்டு நடிகனாகவும், எழுத்தாளனாகவும் இருந்த ஷேக்ஸ்பியரின் நடவடிக்கைகளில் கொஞ்சம் சுணக்கம் ஏற்பட்டது. அவனுடன் இருந்த மேடை நண்பர்களும் அவ்வாறே சோர்ந்து போயிருந்தனர். இதற்குக் காரணம் என்னவென்றால் அப்போது லண்டனின் 'பிளேக்' நோய் பரவியிருந்தது. இதனால் நாடகங்கள், நடனங்கள், கேளிக்கைகள் போன்ற எதுவுமே நடக்கக் கூடாதென மகாராணி உத்தரவு போட்டு விட்டார்கள். அந்த இடங்களில்தானே மக்கள் அதிகமாகக் கூடுவார்கள்?

ஆனால் மதப் பிரசங்கம், மாதா கோயிலுக்குப் போதல் போன்றவை மட்டும் தடை செய்யப்படவில்லை. 1594ஆம் ஆண்டின் இடைக்காலம் வரை நாடகக் கொட்டகைகள் திறக்கப்படவேயில்லை.

பிளேக் நோய் முற்றிலும் அடங்கிய பின்னர் ஷேக்ஸ்பியர் தனக்கென ஒரு புரவலரைப் பிடித்து தான் எழுதிய இரண்டு நெடுங்கவிதைகளை அவருக்குச் சமர்ப்பித்தார்.

1. Venus and Adonis, 2. The Rape of Lucrece என்னும் அந்த இரண்டு கவிதைகளும் 1593ஆம் ஆண்டில் வெளியாயின. முதலில் குறிப்பிட்ட கவிதைதான் முதலில் அச்சில் வந்த ஷேக்ஸ்பியரின் எழுத்து.

நாடக மேடைகள் திரும்பவும் திறக்கப்பட்டன. ஷேக்ஸ்பியர் தன்னை சேம்பர்லின் பிரபுவின் நாடகக் கம்பெனியுடன் இணைத்துக் கொண்டார். 18 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறும் வரை ஷேக்ஸ்பியர் அந்த நாடகக் கம்பெனியை விட்டு விலகவேயில்லை. பிரபுவின் பராமரிப்பு நிர்வாகத்தில் இருந்த அந்தக் கம்பெனி அப்போது மிகவும் பிரபலமாக இருந்தது.

எலிசபெத் மகாராணியின் நிதித் துறையைக் கவனித்து வந்த கணக்காளர், சேம்பர்லின் பிரபுவின் மூன்று ஊழியர்களுக்கு மட்டும் பணம் கொடுத்ததாகக் கணக்கெழுதியிருக்கிறான். எதற்கு?

1594ஆம் ஆண்டு டிசம்பர் 26 - 28 தேதிகளில் மகாராணிக்கு முன்பாக கிரீன்விச் அரண்மனையில் நாடகங்களில் நடித்ததற்காக.

நகைச்சுவை, துன்பியல், சரித்திரம் என்று நாடகங்கள் மேடைகளில் தொடர்ச்சியாக அணிவகுத்தன. இதனால் ஷேக்ஸ்பியருக்கு பணமும், புகழும் ஒருங்கே கிடைத்தன. அந்த நாடகக் கம்பெனியின் பாகஸ்தர்களில் ஒருவராகவும், அவர் இருக்க அனுமதிக்கப்பட்டார். அத்துடன் இல்லாமல், நாடக மேடையில் முக்கிய பங்கு வகிக்கும் பொறுப்பான ஒரு நபராகவும் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டது வியப்பான விஷயமில்லை. தன் சொந்த நாடகங்களை அங்கே அரங்கேற்றவும், அதில் நடிக்கவும் செய்தார்.

அவர் நாடகங்கள் மட்டுமன்று; மற்றவர்களின் நாடகங்களும் அதே மேடையில் தொடர்ச்சியாக அரங்கேறின. முக்கியமாக இளம் புயல் பென் ஜான்சனின் நாடகங்களும் நடிப்பும் மேடையில் இடம் பெற்றன.

‘ஹாம்லெட்’ நாடகத்தில் ஹாம்லெட்டின் தந்தையின் ஆவியாக நடித்த நடிப்பை எல்லாரும் பாராட்டினார்கள்.

‘As you like it’ என்னும் நாடகத்தில் பென் ஜான்சன் வேலைக்கார ‘ஆதாமாக’ நடித்ததை ஷேக்ஸ்பியரின் சகோதரனே மனம் திறந்து பாராட்டினான். அப்படியொரு நடிப்பு யாருக்குமே வராது என்றான்.

தன் நாடகங்கள் நூல் வடிவில் பதிப்பிக்கப்படுவதில் ஷேக்ஸ்பியர் எப்போதுமே ஆர்வம் காட்டியதேயில்லை. ஆனால் நாடக மேடைக்கு எழுதிய பல நாடகங்கள் சென்ற நூற்றாண்டின் கடைசியில் பதிப்பிக்கப்பட்டன. அதற்கு ஷேக்ஸ்பியரின் அனுமதி பெறப்பட்டதா, இல்லையா என்றே தெரியவில்லை. ஆனால் சில நாடகங்களில் ஷேக்ஸ்பியரின் பெயரே கூட இருக்காது - எழுதியவரின் பெயரே இல்லாமல் நாடகங்கள் பதிப்பிக்கப் பட்டன என்பது விசித்திரமான விஷயங்கள்தானே?

சில நாடகங்கள் முற்றுப்பெறாமலிருந்தாலும், தவறாக இருந்தாலும் அவற்றை ஒழுங்குபடுத்துவது நாடக ஆசிரியரின் வேலை.

நாடகங்கள் எழுதுவது, மேடையில் நடிப்பது போன்ற கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்று விட்ட ஷேக்ஸ்பியருக்கு சொந்த நாடகக் கம்பெனி நடத்த வேண்டும் என்கிற ஆசையும் வந்தது. அதனால் சேம்பர்லின் பிரபுவின் நாடகக் கம்பெனி ஆட்கள் சிலருடன் சேர்ந்து, தேம்ஸ் நதிக்கரையில் பிரம்மாண்டமான முறையில் ஒரு நாடகக் கொட்டையை நிர்மாணித்தார். நாடகக் கொட்டகைக்கு ‘தி குளோப்’ என்று பெயரிடப்பட்டது. அதில் முதன் முதலாக அரங்கேறிய நாடகம் ‘ஜூலியஸ் சீசர்’.

ஷேக்ஸ்பியரின் மனைவி அன்னி ஹாத்வே, தன் மூன்று குழந்தைகளுடன் லண்டனுக்கு வந்து, தன் கணவனுடன் வசித்தாளா என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமே இல்லை. ஆனால் ஸ்டார்ட்போர்டில் ஒரு சிறிய வீட்டில்தான் தன் குடும்பத்தை நடத்தி வந்தார் என்பதற்கான சான்றுகள் உள்ளன.

நல்ல வசதி வந்தவுடன், அவருக்கும் தான் பெரிய வீட்டிற்குப் போக வேண்டும் என்கிற எண்ணம் மனத்தில் தோன்றியபோது, மாதா கோயிலுக்கு எதிரே இருந்த சேப்பல் தெருவில் ஒரு மூன்றடுக்கு மாளிகையில் தன் குடும்பத்தை ஷேக்ஸ்பியர் குடி வைத்தார். சிறு வயதில் அதே தெருவில் தான் விளையாடியது அவரது நினைவிற்கு வந்ததும், இந்தப் புதிய குடிபெயர்ப்புக்குக் காரணம்.

ஷேக்ஸ்பியரின் ஒரே மகன் ஹாமெட் தன் பதினோராவது வயதிலேயே இயற்கை எய்தி விட்டான். ஆனால் தன் இரு புதல்விகளுக்கும் திருமணம் செய்து வைக்கும் வரை ஷேக்ஸ்பியர் உயிரோடிருந்தார். பெரிய மகளான சூசன்னா ஒரு பெண் மகனைப் பெற்றெடுத்தாள். அவள்தான், நாடக ஆசிரியரின் ஒரே பேத்தி. அவளது பெயர் எலிசபெத் ஹால்.

1612ஆம் ஆண்டிற்குப் பிறகு ஸ்டார்ட்போர்டுக்கே ஷேக்ஸ்பியர் திரும்பி வந்து விட்டார்.

1616ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் தேதி இந்த நாடக ஆசிரியர் தன் கடைசி உயிரை எழுதினார். தன்னுடன் இன்பமாக 33 ஆண்டுகள் கழித்து தன் மனைவிக்கு அதாவது அன்னி ஹாத்வேக்கு தன் சொத்துகள் முழுவதையும் எழுதி வைத்தார். ஒரு மாதத்திற்குப் பிறகு ஏப்ரல் மாதத்தில் இருபத்தி மூன்றாம் தேதி தன் 52ஆவது வயதில் அந்த மாபெரும் நாடக ஆசிரியர் இயற்கை எய்தினார்.

ஷேக்ஸ்பியர் உயிரோடிருந்தபோது எழாத சந்தேகங்கள் அதன் பின்னர் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்தன.

ஸ்டார்ட்போர்டு என்கிற சிறிய நகரத்தில் இருந்து வந்த, அதிகம் படிக்காக ஒரு சாதாரண நடிகன் இவ்வளவு அற்புதமான நாடகக் காவியங்களை வடித்திருக்க முடியுமா என்பதுதான் முதல் சந்தேகம். ஷேக்ஸ்பியர் மட்டுந்தான் இந்த நாடகங்களை எழுதினாரா, அல்லது வேறு யாராவது எழுதினார்களா என்கிற பேச்சுகள் நாட்டில் உலவத் தொடங்கின.

நாடகக் கதாபாத்திரங்கள் வெளியிட்ட பல வேறுபட்ட உணர்ச்சிக் கொந்தளிப்புகளை எழுத்துகளால் வடிக்க வேண்டும் என்றால் அந்த நாடக ஆசிரியனுக்கு சரித்திரம், இலக்கியம் தத்துவங்கள், மற்றும் சட்ட நுணுக்கங்கள் போன்ற எல்லாமே தெரிந்திருக்க வேண்டும். ஒரு கிராமத்து இளைஞனுக்குப் பணக்காரர்கள் எப்படி நடந்து கொள்வார்கள், வக்கீல்கள் வழக்கு மன்றங்களில் எப்படிப் பேசுவார்கள் என்று எப்படித் தெரியும்?

நன்றாகப் படித்தவர்கள், பெரிய இடத்தில் வேலை பார்த்தவர்கள், வசதி மிக்கவர்கள் தாங்கள் எழுதிய நாடகங்களுக்கு தன் பெயரைப் போட்டுக் கொள்ள அவர்களுக்கு ஷேக்ஸ்பியர் அனுமதி கொடுத்தாரா?

இலக்கியத் தரமும், கதையம்சமும் கொண்ட இந்த பிரபல நாடகங்களை ஷேக்ஸ்பியர்தான் எழுதினாரா என்கிற பேச்சு ஆங்காங்கே எழுந்தது. ஆனால் இதற்கான விடையை யார் கண்டுபிடிப்பது?

1781ஆம் ஆண்டு ஜே. வில்மாட் என்னும் ஆங்கிலப் பாதிரியார் ஸ்டார்ட்போர்டில் பல ஆவணங்களைப் பரிசோதித்த தில் திடுக்கிடும் ஓர் உண்மையைக் கண்டு பிடித்தார். கல்வி அறிவும், அனுபவமும் அதிகமில்லாத ஷேக்ஸ்பியர் சாகாவரம் பெற்ற இந்த நாடகக் காவியங்களை எழுதியிருக்கவே முடியாது, என்பதே அது. தான் கண்டுபிடித்து விட்ட இந்த உண்மைகளை எல்லாருக்கும் தெரியும்படியாக வெளியிடாமல் அவற்றை அவரே எரித்து விட்டார்.

ஆனால் பாதிரியார் வில்மாட் இந்த உண்மைகளை, ஏன் சந்தேகங்களை தன் நண்பர் ஒருவரிடம் சொல்லி வைத்தார். அவர்கள் இருவருக்குள் நடந்த உரையாடல்கள் 1932ஆம் ஆண்டு வரை வெளியுலகிற்குத் தெரியாமலேயே போய் விட்டன.

ஆனால் 19ஆம் நூற்றாண்டிலேயே ஆங்கில, அமெரிக்க இலக்கியவாதிகள், இதைப் போன்ற சர்ச்சைகளுக்கு உயிர் கொடுத்தனர்.

1856ஆம் ஆண்டு வில்லியம் ஹென்றி ஸ்மித் என்னும் இலக்கியவாதி புதிதாக ஒரு கருத்தை வெளியிட்டார். சர்

பிரான்சிஸ் பேகன் என்னும் அறிஞர்தான் இந்த நாடகங்களை எழுதியிருக்க வேண்டும் என்றார்.

எலிசபெத் மகாராணியின் சபையிலும், அவரைத் தொடர்ந்து முதலாம் ஜேம்ஸ் மன்னர் சபையிலும் இடம் பெற்ற இந்த இலக்கியவாதி, மெத்தப் படித்தவர் - கட்டுரையாளர். அதனால் அவர் அரசியலில் வைத்திருந்த அந்தஸ்தைக் கருதி அவரே அந்த நாடகங்களை எழுதியிருக்கலாம் என்று சொல்லப்பட்டது.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் இருபுறமும் இருந்த நாடுகளின் அறிஞர்களும், இலக்கியவாதிகளும் ஸ்மித் சொன்ன கருத்துக்கு, என்ன ஆதாரம்? ஏதாவது ஆவணங்கள் இருக்கின்றனவா என்கிற கேள்வியை எழுப்பினார்கள்.

ஷேக்ஸ்பியரிடம் இல்லாத தகுதிகள் யாவும் பேகனிடம் இருக்கலாம். அதாவது படிப்பு, அரசியலில் நல்ல அந்தஸ்து, சட்டங்களைப் பற்றி நுணுக்கமான அறிவு போன்றவை பேகனிடம் இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால் பேகன், நாடக மேடையின் பக்கம் தலை வைத்துப் படுத்ததேயில்லை என்பதும், நாடகத்திற்காக சிறிய கவிதைகள் கூட எழுதியதே இல்லை என்பதுதான், வில்லியம் ஹென்றி ஸ்மித்தின் ஆணித்தரமான ஆதாரங்களுக்கு எதிராக இருந்தன.

1955ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த கேல்வின் ஹாப்மென் என்கிற பெயரையுடையவர் ஓர் இலக்கியவாதி, ஒரு புதிய கண்டுபிடிப்பைப் பற்றிச் சொன்னார்.

எலிசபெத் மகாராணியின் காலத்தைச் சேர்ந்த கிரிஸ்டோபர் மார்லோ என்னும் நாடகாசிரியர் தான் இந்த நாடகங்களை எழுதியிருக்க வேண்டும். ஆனால் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டவர் அவற்றை மற்றவர்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப் பார்த்ததால், சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் அவருக்கு மரண தண்டனை கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் மார்லோ மிகவும் புத்திசாலி, தன்னைத் தூக்கிலிடுவதைத் தவிர்க்க, வேறோர் அயல் நாட்டுக் கடற்படை வீரனை, தனக்குப் பதிலாக தூக்கிலிட ஏற்பாடு செய்து விட்டு, நாட்டை விட்டு ஓடி விட்டார். இந்தக் கதையையும் சொன்னது கேல்வின் ஹாப்மென்

தான். இது நடந்தது 1593ஆம் ஆண்டில். மார்லோவின் கருத்துகளை மக்கள் ஏற்கவில்லை.

ஐரோப்பா கண்டத்தில் காலடி எடுத்து வைத்த மார்லோ, லண்டனில் தனக்குப் பெயர் வாங்கிக் கொடுத்த பாணியிலேயே நாடகங்களை எழுதத் தொடங்கினார். நாடகங்களை லண்டனுக்கு அனுப்பி, அவற்றை ஷேக்ஸ்பியரின் பெயரில் மேடை ஏற்றச் செய்தார்.

ஆனால் இந்த வதந்திகளுக்கும் மேலாக இன்னொரு வதந்தியும் புறப்பட்டது.

பேகன் அல்லர்; மார்லோ அல்லர்; இளம் நாடகாசிரியரான பென் ஜான்சன் அல்லர்; இந்த நாடகங்களை எழுதியவர் வேறொருவர் என்பதே அந்த வதந்தி.

அவர் பிரபு வம்சத்தைச் சேர்ந்தர். இதைப் போன்ற நாடகங்களை எழுதுவது தன் தகுதிக்கேற்றதன்று என்றும், மாறுபட்ட அரசியல் கருத்துகள் மக்களிடையே பரவி விட்டால் என்ன செய்வது என்கிற பயத்தினாலும், தான் எழுதிய இந்த நாடகங்களை ஷேக்ஸ்பியரின் பெயரில் உலவ விட்டார்.

யார் அந்தப் பிரபு?

ஷேக்ஸ்பியர் காலத்தில் வாழ்ந்த, இலக்கிய ஆர்வம் கொண்ட சிலரை விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் வில்லியம் ஸ்டேன்லி, டெர்பி வம்சத்தின் ஆறாவது வாரிசு, ரோஜர் மேனர்ஸ், ரட்லேண்ட் குடும்பத்தின் ஐந்தாவது வாரிசு, எட்வர்ட் டிவேர், ஆக்ஸ்போர்டு குடும்பத்தில் பதினேழாவது வாரிசு. இதில் மூவரைப் பற்றிய குறிப்புகள் வேறுவிதமாக இருந்தன.

வில்லியம் ஸ்டேன்லி - நாடக மேடை மீது அளவற்ற காதல் கொண்டவர். அதனால் அவர் எண்ணற்ற நாடகங்களை எழுதினார். ஆனால் இவர் ஷேக்ஸ்பியருக்குப் பிறகு 26 ஆண்டுகள் வாழ்ந்தார். இந்த சமயத்தில் ஷேக்ஸ்பியரின் பெயரால் எந்த நாடகமும் வரவேயில்லை.

ரோஜர் மேனர்ஸ் - 1592ஆம் ஆண்டில் அவருக்கு பதினாறே வயதுதான் ஆகியிருந்தது. அதற்குள் மூன்று நாடகங்கள்

ஷேக்ஸ்பியரின் பெயரில் வெளிவந்து நாடக மேடை ஏறி விட்டன. அதனால் ரோஜர் மேனர்ஸ் அந்த நாடகங்களை முதலோ - பின்போ எழுதியிருக்க முடியாது. ஆனால் கடைசியாகக் கூறப்பட்ட எட்வர்ட் டிவேர் 1604ஆம் ஆண்டே இயற்கை எய்தி விட்டார்.

அதற்குப் பின்னால்தான் ஷேக்ஸ்பியரின் மகோன்னத நாடகங்களாகக் கருதப்பட்ட கிங்லியர், மேக்பெத், தி டெம்பஸ்ட் என்னும் நாடகங்கள் 1612ஆம் ஆண்டிற்கு முன்பு நாடக மேடை ஏற்றப்பட்டு மிகவும் பிரபலமடைந்தன.

1612ஆம் ஆண்டிற்குப் பிறகு ஷேக்ஸ்பியர் தன் சொந்த ஊரான ஸ்ட்ராட்போர்டுக்குத் திரும்பி விட்டார் என்று சொல்லப்பட்டது.

யாரோ ஒரு பெரும் எழுத்தாளரால் எழுதப்பட்ட இந்த மாபெரும் நாடகங்கள் ஷேக்ஸ்பியரின் பெயரால் வெளியாகிப் புகழ் பெற்றன என்று பல்வேறு வதந்திகள் உலவினாலும் ஷேக்ஸ்பியர்தான் இந்த நாடகங்களின் உண்மையான ஆசிரியர் என்று பெரும்பாலான இலக்கியவாதிகள் ஒப்புக் கொள்கிறார்கள். அவருடைய மேதாவிலாசம், அவர் வாழ்ந்த காலத்திலேயே ஒப்புக் கொள்ளப்பட்டது. அவர் காலத்தில் அவருடைய எழுத்துகளுக்கு யாருமே உரிமை கொண்டாடவில்லை. நாடகங்கள் நன்றாகப் பெயர் வாங்கியபோது, இதை நான்தான் எழுதினேன் என்று எழுதியவர் வெளிப்படையாகச் சொல்லி யிருக்கலாமே? இந்த நாடகங்கள் எழுதுவதற்குத் தேவையான புத்திசாலித்தனம், கற்பனை வளம் அவருக்கு எங்கே இருந்து கிடைத்தது என ஆராய்வது வீண் வேலை.

தன்னுடைய எளிமையான வாழ்க்கையை விட்டு விட்டு நானூறு ஆண்டுகளுக்கு முன்பு லண்டனை நோக்கி வந்த இந்த இளைஞர், உலகில் தன் பெயர் எப்போதும் நிலைத்திருக்கச் செய்ததற்காக, நாம் அவருக்கு என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகின் இலக்கியத்தரம் அவரால் ஒருபடி உயர்ந்தது என்பதை எல்லாரும் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

■

தேம்ஸ் நதிக்கரைக் கொலைகள்

போலீஸாருக்கு அன்று ஒரு பார்சல் வந்தது. அதனுள் மனித சிறுநீரகத்தின் ஒரு பகுதியும் கடிதமும் இருந்தன. அதிர்ச்சி யடைந்த போலீஸார் கடிதத்தைப் படித்தார்கள்.

''ஒரு பெண்ணின் உடலிலிருந்து எடுத்ததில் ஒரு பகுதி இது. இன்னொரு பகுதியை நான் வறுத்துச் சாப்பிட்டு விட்டேன்.''

கடிதம் எழுதியவனின் விலாசம், தேதி எதுவுமில்லை. கீழே 'யமலோகத்திலிருந்து' என்று மட்டும் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. 1888ஆம் ஆண்டு நடந்த இந்த சம்பவத்தின் பின்னணியில் இருக்கிறார்கள் என்பதை போலீஸார் நன்றாக அறிவார்கள்.

'ஜாக் தி ரிப்பர்' என்று அழைக்கப்பட்ட அந்தக் கொலைகாரன்தான் இந்த விஷயத்தைச் செய்திருக்கிறான். அவனால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெயர் காதரின் எட்டோஸ். அவளுக்கு வயது 43. இது அவன் செய்த நான்காவது கொலை.

எப்போது, யாரை, எங்கே கொலை செய்வான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இதில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படி வேண்டிய விஷயம் என்னவென்றால் அவனால் கொல்லப்பட்ட அந்த நால்வரும் விபசாரிகள். வயதானவர்கள். பிழைக்க வழி ஏதும் இல்லாததால் இந்தத் தொழிலுக்கு வந்தவர்கள்.

மக்களில் ஒரு சாரார் சற்றும் வசதியில்லாமல் மிகவும் நெருக்கமாக வாழ்ந்த இடத்தின் பெயர்தான் வைட் சேப்பல்.

சாக்கடைகளின் கழிவுநீர் ஒரு பக்கம். நாய்களும், பன்றிகளும் சுதந்தரமாகச் சுற்றி வருவது அந்த இடத்தின் இன்னொரு சிறப்பு. குறுகலான சந்துகளின் ஒரு பக்கத்தில் மதுபானக் கடைகள், போதை மருந்து விற்பனையாளர்கள் போன்றோர் இடம் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அங்கே தான் வயிற்றுப் பிழைப்புக்காக இந்த விபசாரிகளும் நடமாடினர். இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் எப்படி நல்ல சூழ்நிலையில் வளரும்?

ஐந்து வயதாகும் வரை குழந்தைகளை வீட்டிற்குள்ளாகவே முடக்கி வைப்பார்கள். விவரம் தெரிந்து வெளியே வந்தால், அவர்கள் செய்யாத தொழில் எதுவும் இல்லை.

வயிற்றுப் பிழைப்புக்காக, வேறெந்த வேலையும் வழியும் ஏற்புடையதாக இல்லாத காரணத்தால் இளம் பெண்கள் மெதுவாக விபசாரத் தொழிலில் நுழைவது வழக்கமாகி விட்டது. அதனால் அவர்களைத் திருமணம் செய்து கொள்ள யார் முன் வருவார்கள்?

ஒரு முறை இந்தத் தொழிலில் இறங்கி விட்டால் அதுவே அவர்களுக்கு நிரந்தரத் தொழிலாகி விடும். வெளிப்படையாகத் தெரியாத காரணங்களால் இவர்களில் ஓரிருவர் 'ஜாக்'கின் கத்திக்குப் பலியாவதுண்டு.

தொடர்ந்து கொலைகள் நடந்து கொண்டிருந்தாலும் போலீஸாரால் அவனைப் பிடிக்கவே முடியவில்லை.

முதலில் எங்கே இந்தக் கொலைகள் தொடங்கின என்பதைப் பார்ப்போம்.

முதன் முதலாகக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெயர் மேரி ஆன். அவளுக்கு வயது 42. ஆகஸ்டு 31ஆம் தேதி கழுத்தறுபட்டு கொலை செய்யப்பட்டாள். கொலைகாரன் அத்துடன் நிற்கவில்லை. அவளது வலப்புறம் 10 அங்குல நீளமுள்ள ஒரு கத்தியால் கிழிக்கப்பட்டிருந்தது. அவளது பிணம் இருளடைந்த ஒரு சந்தில் கிடந்தது.

இந்தக் கொலை நடந்த எட்டு நாள்களுக்குப் பிறகு டார்க் அன்னி சேப்மென் என்னும் 47 வயதுப் பெண்மணியும் இதே பாணியில்தான் கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள். ஏற்கெனவே க்ஷயரோக நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த விபசாரிக்கு இது சாப விமோசனம்தான்.

மக்கள் இந்தக் கொலைக்குப் பின்னர் முன்பே நடந்த கொலையைப் பற்றிப் பேசத் தொடங்கினர். இரண்டு கொலைகள் நடந்த பிறகு மக்கள் அதிகமாக பயந்த காரணத்தால், போலீஸாரும் வேகமாக நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கினர். கொல்வதோடு நில்லாமல் உடம்பைக் கூராக்கி விட்டுப் போவதன் காரணம் என்னவென்பதைத்தான் அவர்களால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

ஒரு கொலைக்கும் இன்னொரு கொலைக்கும் சம்பந்தம் இருக்குமா என்பது விடை தெரியாத கேள்வியாக இருந்தது. அதனால் வைட் சேப்பல் தெருக்களின் பக்கம் போலீஸார் நடமாடத் தொடங்கினர். தனிப்பட்ட துப்பறிவாளர்களும், சமூக சேவையில் நாட்டம் கொண்ட இளைஞர்களும் போலீஸாருக்கு உதவ முன் வந்தனர்.

வைட் சேப்பல் கண்காணிப்புக் கமிட்டி என்ற ஓர் அமைப்பு, லண்டனின் வசதிமிக்க பிரமுகர்களால் அமைக்கப்பட்டது.

விக்டோரியா மகாராணியின் அரசாட்சியில் இது ஓர் இருண்ட அத்தியாயமாக அமைந்து விட்டது. சமூகத்தில் மேல் மட்டத்தில் இருந்தவர்கள் ஏழைகளின் மீது திணிக்கப்பட்ட இந்த கொடூர மான நிலைகளைக் கண்டும் காணாமல் இருந்தனர்.

ஆண் - பெண் உறவைப் பற்றி வெளியில் பேசவே பயந்த காலம் அது. அதனால்தான் தெருவில் திரிந்த விபசாரிகளைப் பற்றி யாரும் அக்கறை எடுத்துக் கொள்ளவேயில்லை.

இருந்தாலும் எல்லாரும் இந்த நடுநிசிக் கொலைகாரனைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

தன் கொலையைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்ட அவன், தன் முதல் கடிதத்தில் சிவப்பு மையினால் தானாக வைத்துக் கொண்ட ஒரு பெயரை எழுதியிருந்தான். அந்த பெயர் 'ஜாக் தி ரிப்பர்'.

போலீஸார் எவ்வளவோ முயன்றும் அவனைப் பிடிக்க முடியவில்லை என்றாலும், அவனது கொலைகள் தொடர்ந்தன. அதுவும் ஒரே மாதிரியாக அவன் செய்த கொலைகள். போலீஸாரால் தன்னை நிச்சயம் பிடிக்க முடியாது என்று தீர்மானித்துக் கொண்டவன் போல நடந்து கொண்டான்.

பிணங்களைப் பரிசோதித்த டாக்டர்கள் ஒரே மாதிரியான அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள்.

அவன் இடக்கைப் பழக்கமுள்ளவன். உடலில் உள்ள பாகங்களைப் பற்றி நன்றாக அறிந்தவன் மட்டுமல்லன்; உடல் உறுப்புகளைக் கச்சிதமாக வெட்டி எடுக்கத் தெரிந்தவனாகவும் இருக்கிறான். எல்லாக் கொலைகளுமே இரவு பதினோரு மணியிலிருந்து விடியற்காலை நான்கு மணிக்குள் நடக்கின்றன. இவை எல்லாம் எவ்வாறு சாட்சியங்களாக அமையும்?

ஆனால் இந்தக் கொலைகளைப் பற்றி விசாரிக்கப் புறப்பட்டவர்கள் சாதாரண குற்றவாளிகளைப் பிடித்து சித்திரவதை செய்தனர். இவர்கள் அல்லாமல் அவர்கள் கையில் சிக்கியவர்களில் முக்கியமானவர்கள் செக்ஸ் குற்றவாளிகள், மனநிலை சரியில்லாத சில டாக்டர்கள், சில கசாப்புக் கடைக் காரர்கள்.

எந்த நேரத்தில் என்ன விதமான எண்ணங்கள் தோன்று கின்றனவோ, அதன்படி அவர்களை விசாரித்தார்கள். ஆனால் பலன்தான் எதுவுமில்லை.

ஆனால் கொலைகாரனின் செயல்கள் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருந்தன. எலிசபெத் ஸ்ரைட் என்னும் 45 வயதுப் பெண்மணியை செப்டம்பர் 30ஆம் தேதி கொலை செய்த பின், அவளது உடலைச் சிதைக்காமல் அங்கிருந்து ஓடி விட்டான் ரிப்பர். இறந்தவளின் கையில் திராட்சைப் பழக் கொத்து

ஒன்றிருந்தது. இன்னொரு கையில் இனிப்புகள். அந்த நேரத்தில் அங்கு எதிர்பாராதவிதமாக வந்த சாட்சி ஒருவன், கொலையாளியின் முகத்தை மட்டும் பார்க்கத் தவறி விட்டான். உடலைக் கூறு போடும் ஆனந்தம் கிடைக்காத ரிப்பர் அடுத்த 45 நிமிட நேரத்தில் எட்டோஸ் என்னும் பெண்மணியைக் கொன்று உடலைச் சிதைத்தான். அவளது சிறுநீரகத்தை எடுத்துத் தபாலில் போலீஸாருக்கு அனுப்பி வைத்தான்.

இதில் வியப்புக்குரிய இன்னொரு விஷயம் என்னவென்றால் சில அடிகள் தள்ளியிருந்த வாட்மேன் இந்த சம்பவத்தைக் கவனிக்கத் தவறி விட்டான்.

சனிக்கிழமை இரவு தெருவில் 'ரோந்து' சுற்றிக் கொண்டிருந்த போலீஸார் கொஞ்சம் சிரமப்பட்டிருந்தால், இந்த நேரத்தில் கொலைகாரனைப் பிடித்திருக்க முடியும்.

இந்த இரட்டைக் கொலைகளுக்குப் பிறகு ரிப்பர் ஆறு வாரங்கள் வேறு எந்தக் கொலைகளையும் செய்யாமல் அமைதியாக இருந்தான். ஆனால் அதே சமயத்தில் போலீஸாருக்குக் கிடைத்த ஒரு தடயத்தைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அந்த இரண்டு விலை மாதர்களும் கொலை செய்யப்பட்ட இரவு, நன்றாகவும் நாகரிகமாகவும் உடையணிந்து கொண்டிருந்த ஒரு மனிதன், விலைமாது ஒருத்தியுடன் பேசிக் கொண்டிருந்ததை போலீஸ்காரர் ஒருவர் கவனித்து விசாரித்திருக்கிறார்.

கேள்வி மேல் கேள்வி கேட்டதும் அந்த மனிதன் முதலில் திணறினாலும், பிறகு சமாளித்துக் கொண்டு திருப்திகரமான முறையில் பதிலளித்திருக்கிறான்.

இதைப் போன்ற இடத்திற்கு அவன் சற்றுமே பொருத்தமில்லாதவன் - சந்தேகம் கொள்ள போலீஸுக்கு இந்த ஒரு காரணம் போதாதா?

தான் ஒரு டாக்டர் என்றும் விலாசம் தவறி இங்கு வந்து விட்டதாகவும் சொல்லி விட்டதால் போலீஸ்காரர் அவனை விட்டு விட்டார்.

ஆனால் வதந்திகள் விதவிதமான வகையில் வெளியாயின. அவற்றை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ இல்லை.

மேல் மட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவன், மனத்தில் ஏற்பட்ட சலனத்தினாலும், நிர்பந்தத்தினாலும் இந்தக் குடிசைப் பகுதிகளுக்கு வந்து சுற்றிக் கொண்டிருந்தானா? இவ்வளவு மட்டமான மக்கள் வசிக்கும் இடத்திற்கு அவனைப் போன்ற பெரிய மனிதன் ஏன் வர வேண்டும்?

இதற்கு நிச்சயம் ஏதோ காரணம் இருக்கிறது. பல்லாண்டுகளாக ஒரே ஒரு நபரைப் பற்றி எல்லார் மனத்திலும் சந்தேகம் குடி கொண்டிருந்தது.

அவன்தான் கிளியரன்ஸ் பிரபு. விக்டோரியா மகாராணியின் பேரன்.

ஆனால் பத்திரிகைகள் மட்டும் இந்த யூகத்தைப் பெரிதாக்கி செய்திகளாகப் போடவில்லை. ஏனெனில் அடுத்தபடியாக பட்டத்திற்கு வரும் ஏழாம் எட்வர்டின் மூத்த மகன்தான் கிளியரன்ஸ் பிரபு.

ஆனால் கிளியரன்ஸ் பிரபுவிற்குப் புத்தி பேதலித்துப் போனது மட்டும் மக்கள் அறிந்த விஷயம். அதனால் அவனை மாளிகையிலிருந்து வெளியில் அனுப்பாமல் வைத்தியம் செய்தார்கள் என்பதும் உண்மைதான். இவன்தான் 'ரிப்பர்' என்றால் கடைசியாக இரண்டு கொலைகள் நடந்த சமயத்தில் இந்தப் பிரபு ஸ்காட்லாந்தில் அல்லவா இருந்தான்?

1892ஆம் ஆண்டு கிளியரன்ஸ் பிரவு இறந்து போனான்.

இந்தக் கொலைகளிலேயே மிகவும் வக்கிரமான கொலை நவம்பர் 10ஆம் தேதி விடியற்காலை 3.45 மணிக்கு நடந்தது.

கொலை செய்யப்பட்டது, ஜேன் கெல்லி என்னும் 24 வயது பெண். அவளை 'பிளாக் மேரி' என்றும் அழைப்பார்கள். வீட்டுக் காவலாளி சற்று அப்பாற் போனதும், ரிப்பருக்கு வீட்டில் நுழைய மிகவும் சௌகர்யமாகப் போய் விட்டது. கொலை செய்த பின்னர் பிணத்திலிருந்து இருதயத்தையும் சிறு நீரகத்தையும் தனித்தனியாக எடுத்து வைத்தான், அதுவும் மிக அலங்காரமாக அதே அறையில்.

இந்தக் கொடூரக் கொலைதான் ரிப்பர் செய்த இறுதிக் கொலை என்றார்கள்.

இந்தக் கொலை நடந்த சில வாரங்களில், மக்கள் வியக்கத்தக்க வகையில், போலீஸார் இந்தக் கொலைகளின் விசாரணையை முடித்து விட்டதாகத் தெரிவித்து விட்டனர். வைட் சேப்பல் விஜிலன்ஸ் கமிட்டிக்கு முன்பு தான் தான் இந்தக் கொலைகளைச் செய்ததாக வாக்கு மூலம் கொடுத்த பின்னர் தேம்ஸ் நதியில் மூழ்கி, கொலைகாரன் இறந்து விட்டதாகச் சொன்னார்கள்.

ஆனால் அவன் சொன்னதற்கான ஆதாரங்களோ, ஆவணங் களோ ஏதுமில்லை. தற்கொலை செய்து கொண்டவன் காரணத்தை எழுதி வைத்திருக்க வேண்டும் அல்லது யாரிடமாவது சொல்லி யிருக்க வேண்டும். இரண்டுமே இல்லை.

மக்கள் இது விஷயமாக என்ன பேசிக் கொண்டார்கள்?

கிளியரன்ஸ் பிரபுவையோ அல்லது வக்கிர எண்ணம் படைத்த ஒரு போலீஸ் அதிகாரியையோ காப்பாற்றத்தான் அதிகாரிகள் இப்படி நாடகமாடுவதாகச் சொன்னார்கள். இதில் எது உண்மை?

'பிளாக் மேரி' கொல்லப்பட்ட பிறகுதான் இந்தத் தற்கொலை நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இன்னொரு கதையும் இதனுடன் சொல்லப்பட்டது. ஜான் டிருவிட் என்றொரு வக்கீல் - தொழிலில் முன்னேறத் துடித்துக் கொண்டிருந்தவன் - ஆனால் அவனது தாய்க்கு மனநிலை சரியாக இல்லை. அதனால் வக்கீல் தேம்ஸ் நதியில் விழுந்து

தற்கொலை செய்து கொண்டான். அவன் எழுதியதாகச் சொல்லப்பட்ட தற்கொலைக் குறிப்பும் காணப்படவில்லை. அதனால் ரிப்பர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்டதற்கு, வக்கீலுடைய தற்கொலையும் காரணமாக இருக்கலாம் என்றும் அபிப்பிராயப் பட்டார்கள்.

இந்த இளம் வக்கீல் டிரூவிட் மேல் மட்ட சமூகத்தினருக்கு மிகவும் அறிமுகமானவர். புகழ் பெற்ற பள்ளியொன்றில் படித்தவன். பணக்காரர்களுடன்தான் பழகினான். பெரிய கிளப்புகளில் அங்கத்தினனாகவும் இருந்தான். அவனைப் பற்றி நன்றாக அறிந்த சில நண்பர்கள், அவனைப் பற்றிப் பேசும்போது, ''வக்கீலுக்குப் பெண் என்றாலே பிடிக்காது'' என்றுதான் சொல்வார்கள்.

1888ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியன்று டிரூவிட்டின் தாயார் மனநிலை சரியில்லாத காரணத்தால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள்.

தவறாமல் அங்கே தன் தாயைப் பார்க்கப் போன வக்கீலுக்கும் மனநிலை பாதித்தது. தன்னுடைய வக்கீல் அலுவலகத்தி லிருந்து கிளம்பினாலும், பெரிய பள்ளி ஒன்றில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணிபுரிந்த அவன், அங்கிருந்து கிளம்பினாலும் தன் தாயை மருத்துவமனையில் பார்க்கச் செல்வதென்றால் 'வைட் சேப்பல்' ஊர் வழியாகத்தான் சென்றாக வேண்டும்.

மனத்தில் ஏற்பட்ட பயத்தினாலும், பெண்கள் மீது ஏற்பட்ட வெறுப்பினாலும் வக்கீல், ரிப்பராக மாறி விட்டானா என்று சந்தேகப்பட்டவர்களும் உண்டு.

வக்கீலின் சகோதரன் வில்லியத்திற்கு, தன் சகோதரனுக்கு லேசாக மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டதாகவும் சந்தேகப்பட்டான். இதனால் நவம்பர் 30ஆம் தேதி அவன் பள்ளி ஆசிரியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டான்.

ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனின் நடவடிக்கையால் அக்குடும்பத்தின் பெயர் கெடக் கூடாது என்பதால் எல்லா வற்றையும் மூடி மறைத்து விட்டார்கள் என்று சொல்பவர்களும் உண்டு.

குடும்பத்தாரே தம் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வக்கீலை, தற்கொலை செய்து கொள்ள தூண்டியிருக்கலாம். பிறகு அதிகாரிகளை அணுகி எல்லாத் தடயங்களையும் மறைக்க ஏற்பாடு செய்திருக்கலாம்.

மொத்தமாக நடந்த14 கொலைகளில், கொலைகாரன் யாரென்றே தெரியாது. நடந்த கொலைகள் ஐந்து மட்டுமே. அதுவும் மூன்றே மாதங்களில் நடந்த பயங்கரங்கள்: வைட் சேப்பல் நகரில் வெவ்வேறு இடங்களில் நடந்த இக்கொலைகளுக்கும் காரணமான கொலையாளி ரத்த வெறி பிடித்தவன் என்பது மட்டும் உண்மை.

ஆனால் அவன் யார் என்கிற உண்மை மட்டுமே இதுவரை உறுதியாகத் தெரியவே இல்லை.

■

முகமூடி மனிதன்

பாரிஸ் நகரில் உள்ள பாஸ்டிலி சிறைச்சாலை. மன்னரின் பிரதிநிதியாகவும், சிறை அதிகாரியாகவும் பணியாற்றிவர் ஜன்கா. அவரது முழுப் பெயர் எட்டினி டு ஜன்கா என்பது. 1698ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் தேதியில் அவர் தன் அதிகாரப் பூர்வமான கையேட்டில் எழுதியிருந்த விஷயம் இதுதான்.

''தென் பிரான்ஸ் பகுதியிலிருந்து புதிய கவர்னர் ஒருவர் சிறைச்சாலைக்கு வந்தார். அவரை செயின்ட் மார்ஸ் என்றழைத்தார்கள். தென் பிரான்ஸில் இருந்த கேன்ஸ் வளைகுடாவின் கோட்டை அதிகாரியாக இருந்தார். வந்தவருடன் ஒரு முதியவர் கைதியாக அழைத்து வரப்பட்டார். அவரது முகம் வெளியில் தெரியாத அளவுக்கு இரும்பு முகமூடி அணிவிக்கப்பட்டிருந்தது. தென் பிரான்ஸில் இருந்த சிறைச்சாலையின் அதிகாரியாக இருந்த செயின்ட் மார்ஸ், இந்தக் கைதியைத் தன்னுடனேயே வைத்திருந்தாராம். எங்கே மாறுதலாகிச் சென்றாலும் இந்த வயதான கைதிக்கு இவர்தான் பாதுகாப்பு. 1664 முதல் 1681ஆம் ஆண்டு வரை இந்தக் கைதி அவரது பாதுகாப்பில் இருந்ததாகத் தெரிகிறது. பாஸ்டிலி சிறைச்சாலைக்கு வந்த பின்னரும் கைதியின் முகமூடி அகற்றப்படவேயில்லை. அத்துடன் அவர் பெயர் என்னவென்பதும் யாருக்கும் தெரியாது.''

முகமூடி அணிவிக்கப்பட்ட அந்தக் கைதி பாரிஸ் சிறைச் சாலையில் அனுமதிக்கப்பட்ட பிறகு வழக்கமாக வாரமொரு முறை பிரார்த்தனைக்காக சர்ச்சுக்கு அழைத்துச் செல்லப்படுவது

வழக்கம். ஐந்தாண்டுக்குப் பிறகு ஒரு முறை சர்ச்சுக்குப் போய்த் திரும்பியவுடன், சிறையில் தன் அறைக்குள் மயங்கி விழுந்து விட்டான் அந்தக் கைதி.

உடனே பாரிஸ் நகரின் பிரபல டாக்டர்கள், சிறைச்சாலைக்கு வரவழைக்கப்பட்டார்கள். நன்றாகப் பரிசோதித்த டாக்டர்கள், இனி அந்த மனிதனைக் காப்பாற்றவே முடியாது என்று சொல்லி விட்டார்கள். 1703ஆம் ஆண்(நவம்பர் 19ஆம் தேதி இரவு பத்து மணிக்கு அந்தக் கைதி உயிர் துறந்தான்.

இறந்து போன அன்றிரவே அந்தக் கைதி சிறையில் இருந்ததற்கான தடயங்கள் யாவும் அழிக்கப்பட்டன. அறையில் இருந்த மேஜை நாற்காலிகள் உடைத்தெறியப்பட்டன. அவனது ஆடைகள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன. சிறைச்சாலையின் அறைச்சுவர்கள் புதுப்பிக்கப்பட்டன.

சில நாள்களுக்குப் பிறகு ஜன்கா தன் டைரியில், எந்த விவரமும் தெரியாத இந்தக் கைதி செயின்ட் பால்ஸ் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டான். பெயர் என்னவென்று எழுதுவது என்று அதிகாரிகளைக் கேட்டபோது அவர்கள் சொன்ன பெயர் எம். டிமார்ஷெல் என்பதாகும். வயது ஏறக்குறைய 45 என்றும் தகவல் கொடுத்தார்கள்.

பல ஆண்டுகளாக சிறையில் இருந்த அந்த முகமூடிக் கைதி யார்? அவன் எங்கிருந்து வந்தான்? அவனைச் சிறையில் அடைத்தவர்கள் யார்?

இத்தனை கேள்விகளுக்கும் விடை தெரிந்தவர்கள் மிகச் சிலரே... அதில் மிகவும் முக்கியமானவர் பதினான்காம் லூயி மன்னர்.

பெயர் தெரியாத கைதியைப் பற்றி நன்றாக அறிந்தவர்தான் இந்த மன்னர்.

கட்டுப்பாடு இல்லாத அரசாட்சி செலுத்தி வந்த இந்த மன்னரைப் பற்றி சரித்திரம் அதிகம் சொல்லவில்லை.

1643ஆம் ஆண்டு அவருடைய தந்தை அகால மரணமடைந்த போது, லூயிக்கு வயது ஐந்து. அதற்கும் நான்கு மாதங்கள் குறைவு.

ஆஸ்திரியா நாட்டின் இளவரசியான அவன் தாய் அன்னி, தன் மகனுக்கு வயதாகும் வரை அரசைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை மஜாரின் என்னும் பாதிரியாரிடம் ஒப்படைத்தாள். மஜாரின், லூயி வயதுக்கு வந்த பின்னரும் அரச பதவியை அவனிடம் ஒப்படைக்கவில்லை.

ஆனால் 1661ஆம் ஆண்டு, மஜாரின் இறந்து போகவே லூயி அரியணையில் ஏறினார். பிரான்ஸ் முழுவதையும் தானே அரசாளப் போவதாக, திகைத்துப் போயிருந்த மந்திரி பிரதானிகளிடம், 'எனக்கு இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு யாரை வேண்டுமானாலும் காரணமில்லாமல் கைது செய்து சிறையில் அடைக்கலாம்' என்றார்.

அந்த அதிகாரத்தில் அடங்கிப் போனவன்தான் அந்த முகமூடிக் கைதி.

மன்னரும் அவரைச் சேர்ந்த சதிகாரர்களும் இந்த மர்மக் கைதியின் ரகசியத்தையும் அவன் யார் என்பதையும் வெளியுலகத் திற்குச் சொல்லாமலேயே இறந்து போனார்கள்.

இந்த மர்மம் பல யூகங்களாக மாறினவே தவிர, பல ஆண்டு களுக்கு பின்னர் உண்மை என்ன என்பது தெரியாமலேயே போய் விட்டது. யூகங்கள் பல தரப்பட்டவை. அவற்றில் ஒன்று கைதி ஒரு பிரபு. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவன், மன்னர் மூன்றாம் வில்லியமைக் கொல்ல எடுத்த முயற்சியில் தோல்வியுற்ற அந்த பிரபு நாட்டை விட்டு ஓட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிரான்ஸ் நாட்டில் அவனுக்குத் தண்டனை, என்பதாகும்.

இரண்டாவது யூகம் - நாடகாசிரியன், தன்னுடைய ஆபாச நாடகங்களுக்காகக் கைது செய்யப்பட்டான். அவன் பெயர் மோலியர்.

அடுத்தது - லூயி மன்னரின் சகோதரன் இவ்வாறு தண்டிக்கப் பட்டிருக்கலாம். ஏன்?

தன் தாய் அன்னிக்கும் பாதிரியாருக்கும் ஏற்பட்ட உறவில் அவன் பிறந்தான் என்பதுதான் காரணம். இதுவும் உண்மையாக இருக்கலாம். ஆனால் அந்த முகமூடி அணிந்த கைதி ஓர் அரசாங்க ஊழியன் என்றும், அவன் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவன் என்றும், அரசருக்குத் துரோகம் செய்து விட்டதால் இந்த தண்டனை என்றும் நம்பும்படியாகச் சொன்னார்கள்.

செயின்ட் மார்ஸ், பிக்னோரல் சிறைச்சாலையின் அதிகாரியாக இருந்த காலத்தில், அவரிடம் அநேகக் கைதிகள் ஒப்படைக்கப் பட்டார்கள். அதில் முக்கியமானவன், அரசர் லூயி ஒப்படைத்த ஒரு கைதி. அந்தக் கைதிக்கும் பெயர் இல்லை. கடிதங்களிலும் ஏடுகளிலும் 'கைதி' என்று மட்டும்தான் குறிப்பிட்டார்கள்.

இதைப் பற்றி இன்னொரு விவரமான கதையும் உண்டு. இத்தாலியின் எல்லைப் பகுதியிலிருந்தது மான்பெராட்டோ கோட்டை. அக்கோட்டையை நான்காம் சார்லஸ் மன்னரின் சார்பாகப் பாதுகாத்து வந்தவன், அன்டோனியோ மாட்டியாலி என்னும் அதிகாரி. இத்தாலி வரை தன்னுடைய எல்லையை விஸ்தரிக்க வேண்டும் என்று நினைத்த பதினான்காம் லூயி, காப்பாளன் அன்டோனியோவை பிரான்ஸ் தேசத்துக்கு வரழைத்து, உபசரித்து, ஏராளமான பரிசுப் பொருள்களைக் கொடுத்து, உபசரித்தான்.

இதனால் மனம் குளிர்ந்த அன்டோனியோ, பிரான்ஸ் மன்னருக்கு மான்பெராட்டோ கோட்டையை விற்று விட ஒப்புக் கொண்டான். 1677ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தப் பேச்சு வார்த்தை நடந்தது. அவன் கேட்ட தொகை (1,00,000) ஒரு லட்சம் கிரௌன்கள் - அப்போது புழக்கத்தில் இருந்த பணத்தை 'கிரௌன்கள்' என்றழைத்தார்கள். தன் நாட்டுக்குத் திரும்பிய அன்டோனியோ ஆடம்பரமாக வாழ்வதில் மிகவும் விருப்பமுள்ளவன். கோட்டைக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக

விலை கொடுத்தால் வேறு யாருக்காவது கொடுத்து விட்டு, அப்பணத்தில் இன்னும் கொஞ்சம் வசதியாகவே தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தான், அந்தப் பேராசைக்காரன்.

அதனால் தன் ரகசிய பேரத்தைப் பற்றி அண்டை நாடுகளான ஆஸ்திரியா, ஸ்பெயின், வெனிஸ், சாவாய் நாடுகளில் செய்தியைப் பரவ விட்டான். இதனால் ஏற்பட்ட மாற்றம் என்ன?

ஐரோப்பா கண்டம் முழுமையாக, பதினான்காம் லூயியின் பேராசையைப் பற்றித் தெரிந்தது. இதனால் தன் வியாபாரத்தை மன்னர் தவிர்த்து விட்டார். அத்துடன் ஆத்திரமடைந்த அவர் 1679ஆம் ஆண்டு இத்தாலிய அரசாங்க ஊழியன் அன்டோனியோவை பிரான்ஸுக்குக் கடத்தி வந்து, அவனுக்கு இரும்பு முகமூடி அணிவித்து சிறையில் தள்ளினார் என்றும் பேச்சு உலவியது.

செயின்ட் மார்ஸ் என்னும் ஜெயில் அதிகாரி, தான் மாறுதலாகிச் சென்ற சிறைச்சாலைகளுக்கெல்லாம், இந்த முகமூடிக் கைதியை அழைத்துச் செல்லவில்லை. அதாவது 1681ஆம் ஆண்டு வரை.

ஆனால் 1694ஆம் ஆண்டு மார்ச் மாதம், கேன்ஸ் வளைகுடாவில் ஒரு சிறு தீவில் - அதற்குப் பெயர் செயின்ட் மார்க்யூரிட் - இருந்த சிறைச்சாலையில் செயின்ட் மார்ஸ் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அவரிடம் மூன்று கைதிகளைக் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள்.

மூவரில் ஒருவன், இந்த முகமூடி மனிதன்.

''இந்தக் கைதிகள் மிகவும் முக்கியமானவர்கள். அதில் முகமூடி அணிந்தவன் மிகவும் முக்கியமானவன். அதனால் இவர்களை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவும்'' என்று மார்ஸுக்குக் கடிதம் வந்தது.

அந்தச் சிறைச்சாலையின் பெயர் பிக்னாரால்.

சிறைச்சாலை அதிகாரி ஜன்கா தன் குறிப்பேட்டில் சில முக்கியமான விஷயங்களை எழுதியிருந்தார். அதாவது 1698ஆம் ஆண்டின் விஷயம் அது.

பிக்னாரால் சிறையிலிருந்து அந்த முகமூடி மனிதன் பாரிஸ் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டான்.

செயின்ட் பால்ஸ் சர்ச்சின் மயானத்தில் அவன் 1703இல் புதைக்கப்பட்டதாகவும் தகவல். ஆனால் அதில் குறிப்பிட்டிருந்த பெயர் மேட்டியோலி என்பதாகும். ஆனால் ஜன்காவின் குறிப்பேட்டின் படி அவனது பெயர் எம். டிமார்ஷெல் என்று எழுதப்பட்டிருக்கவில்லை.

எழுதிய பிரெஞ்சு குமாஸ்தாவுக்கு இத்தாலியர்களின் பெயர்களில் ஏற்பட்டுள்ள குழப்பம் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் சொல்லப்பட்டது.

மேட்டியோலி பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்த சிலர் செயின்ட் மார்க்யூரிட் தீவிலிருந்து வந்த ஓர் இத்தாலியன் இறந்து போனான் என்றும் அவன் ஒரு வேலைக்காரன் என்றும்,சொன்னார்கள்.

பிக்னாரால் சிறையில் மேட்டியோலிக்கு ஒரு வேலைக்காரனை வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்திருந்தார்கள் என்றும், வேறு எந்த கைதிகளுக்கும் இந்த வசதி செய்யப்படவில்லை என்றும் சொல்லப்பட்டது.

1640ஆம் ஆண்டு பிறந்த இந்தக் கைதி இறக்கும்போது 63 வயதுடையவனாக இருக்கலாம். கல்லறையில் குறிப்பிட்டது போல் வயது 45 ஆக நிச்சயம் இருக்காது.

முகமூடி அணிந்த மனிதன் மேட்டியோலி என்று நம்பாதவர்களுக்கு இன்னோர் ஆச்சர்யமான தகவல் காத்துக் கொண்டிருக்கிறது. இந்த அநாமதேய முகமூடி யாருமல்லன்; பதினான்காம் லூயியின் சொந்த சகோதரன். இருவரும் இரட்டைப் பிறவியர். இந்தத் தகவல் நம்பகமான இடத்திலிருந்து வந்தது.

பதிமூன்றாம் லூயியின் முதன் மந்திரியாக இருந்தவர் கால்டினல் ரிச்லி. அவர் தன் எண்ணங்களைப் பதிவு செய்த புத்தகத்தில் எழுதியிருப்பதாவது:

''ஆஸ்திரியா நாட்டு இளவரசி அன்னிக்கு 1638ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் தேதி இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இருவரும் ஆண் குழந்தைகள். முதல் குழந்தை முற்பகலில் பிறந்தது. பிறந்தவுடன் அதுதான் அரசவை வாரிசு என்று உடனே தீர்மானித்து விட்டார்கள். ஆனால் இரவு 8.30 மணிக்கு அன்னிக்கு மீண்டும் இடுப்பு வலி ஏற்பட்டு இன்னொரு ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். முதலில் பிறந்த ஆண் குழந்தையை எப்படி எதிர்கால அரசன் என்று எல்லாரும் கொண்டாடினார்களோ, அதற்கு நேர் எதிரிடையாக இரண்டாவது குழந்தையை வெளியுலகிற்குத் தெரியாமல் மறைத்து விட்டார்கள். அவனது எதிர்காலமும் இருளடைந்ததாகவே ஆகிவிட்டது.''

அப்போதைய சட்டதிட்டங்கள் சற்று விசித்திரமானவை யாகவே இருந்தன. அதன்படி இரட்டைப் பிறவியில் இரண்டாவதாகப் பிறந்தவன்தான் மூத்தவன் என்று கருதப் பட்டான். ஆனால் இங்கே மட்டும் முதல் குழந்தை மதியம் பிறந்தவுடன் அவன்தான் பதிமூன்றாம் லூயி மன்னரின் வாரிசு என்று பகிரங்கமாக அறிவிக்கப்பட்டான்.

அதனால் இரண்டாவதாகப் பிறந்த மகனின் எதிர்காலம் சூன்யமாகி விட்டது. அவன் ஒரு தாதியின் பொறுப்பில் வளர்ப்பதற்காக 'ஒப்படைக்கப்பட்டான். ஆனால் அந்தக் குழந்தை இறந்ததாகவே அன்னிக்கு அறிவிக்கப்பட்டது.

இரு புதல்வர்களும் வளர்ந்தார்கள். ஒருவன் அரண்மனை யில்; இன்னொருவன் தாதியின் வீட்டில். வளர வளர இரண்டாவதாகப் பிறந்தவனின் முகச் சாயல்' பதினான்காம் லூயியின் முகத்தைப் போலவே இருந்ததைக் கவனித்த அரசவை ஊழியர்கள், அவனை உடனே இங்கிலாந்துக்கு அனுப்பி

விட்டனர். அப்போது அங்கே அரசாண்ட முதலாம் சார்லஸ் மன்னரின் மனைவி ஹென்றியெட்டா மரியா, குழந்தையின் தந்தை வழி அத்தை. அதனால் குழந்தை அரச போகத்தில் வளர்ந்தது.

கார்டினர் ரிச்லியின் கண்டுபிடிப்பிற்குப் பிறகு நடந்தவை மிகவும் சுவாரஸ்யமான சம்பவங்கள்.

இங்கிலாந்தில் வளர்ந்த அரசகுமாரன், உண்மையில் தான் யார் என்பதைத் தெரிந்து கொண்டு தனக்கு நியாயமான முறையில் சேர வேண்டிய அரச பீடத்தைக் குறித்துப் போராடத் தொடங்கினான்.

அவனுக்கு பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த மார்சில்லி உதவ முன் வந்தான். பிராடெஸ்டெண்ட் மதத்தைப் பரப்பும் மத ஊழியனாக இருந்த அவன், பிரான்ஸ், இங்கிலாந்து, நெதர்லாண்டு, ஸ்வீடன் போன்ற நாடுகளில் தன் ஏஜெண்டுகளை வைத்து மத மாற்றத்திற் காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

கத்தோலிக்கர்கள் பிடியிலிருந்த இந்த நாடுகளை முற்றிலுமாக மாற்றுவது அவ்வளவு சுலபமன்று. ஆனால் ஏப்ரல் மாதம் ப்தினான்காம் லூயியின் ரகசிய இலாகா மார்சில்லியைக் கைது செய்து பாரிசுக்குக் கொண்டு போய் சித்ரவதைச் செய்தார்கள். அவர்கள் செய்த கொடுமையால் மார்சில்லி இறந்து போனான்.

இறப்பதற்கு முன், அரசனின் உடன்பிறந்த சகோதரன் லண்டனில் வளர்வதாகவும், விரைவில் அவன் அரியணைக்கு உரிமை கோருவான் என்றும் சொல்லி விட்டுத்தான் இறந்தான்.

இதை அறியாத இளவரசன், ஜூலை 19ஆம் தேதி டன்கிர்கில் காலடியெடுத்து வைத்தபோது கைது செய்யப்பட்டான். அப்போது அவனது பெயர் ‘உஸ்டாச் டவுகர்’ என்பதாகும்.

அன்றே பிரான்ஸ் தேசத்தின் போர்ப்படைத் தளபதி, பிக்னோரால் சிறை அதிகாரி செயின்ட் மார்ஸுக்கு ஒரு முக்கியமான கைதியை அங்கே அனுப்பி வைப்பதாகக் கடிதம்

எழுதினான். அந்தக் கைதியை மிகவும் பாதுகாப்பாக வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்றும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

செயின்ட் மார்ஸ் எங்கெல்லாம் மாற்றப்பட்டாரோ அந்த இடங்களுக்கெல்லாம் அந்தக் கைதியும் அழைத்துச் செல்லப் பட்டான்.

அந்தக் கைதியை அதிகாரி மார்ஸ் மிகவும் கௌரவமாக நடத்தினார். நல்ல உடை, நல்ல உணவு, படிக்க புத்தகங்கள், ஒரு வேலைக்காரன், ஒரு கிதார் இவ்வளவும் அவனுக்கு வழங்கப்பட்டன. பெயர்தான் கைதியே தவிர, நான்கு சுவர் களுக்குள் குடியிருந்த ஒரு பிரபுவாகவே அவன் இருந்தான்.

ஆனால் கண்டிப்பாக கறுப்பு வெல்வெட் துணியால் ஆன முகமூடியை மட்டும் அவன் எப்போதும் அணிந்து கொண்டு - முக்கியமாக வெளியாட்கள் சிறைக்குள் வரும்போது - இருக்க வேண்டும். 1698ஆம் ஆண்டு வரை இது நீடித்தது.

இன்னும் ஓர் ஆராய்ச்சிக் குறிப்பு சொல்வதையும் படியுங்கள்.

உஸ்டாச் டவுகர் என்பவன் உண்மையில் யார்?

1910ஆம் ஆண்டு ஓர் ஆங்கில சரித்திர ஆராய்ச்சியாளர் ஒரு புதுவிதமான கருத்தை வெளியிட்டார். அது நம்பும்படியாக இருக்கவில்லை. பதினான்காம் லூயியின் நிதி அமைச்சராக இருந்த நிகோலஸிடம் இந்த டவுகர் வேலைக்காரனாக இருந்தானாம்.

1661ஆம் ஆண்டு, நிதி மந்திரி நிக்கோலஸ் அரசாங்க பணத்தை அபகரித்து விட்டதால் கைது செய்யப்பட்டான். கைதுக்குப் பின் விசாரணை, பிறகு ஆயுள் தண்டனை.

எஜமானனுடன் எல்லா விதத்திலும் கூட்டு சேர்ந்திருந்த டவுகர், மந்திரியுடன் சிறையில் அடைக்கப்பட்டான்.

1680ஆம் ஆண்டு மந்திரி இறந்தவுடன், சட்டபடி டவுகர் மட்டும் சிறையில் இருக்க வேண்டிய கட்டாயம்.

செயின்ட் மார்ஸ் என்னும் அதிகாரியின் பாதுகாப்பில் இருந்த அவன் 23 ஆண்டுகளுக்குப் பிறகு இறந்து போனான்.

சிறையில் இருந்தவன் நிதி மந்திரியின் வேலைக்காரனா அல்லது அரசவைக் குடும்பத்தின் வாரிசா?

நிச்சயமாகச் சொல்லக் கூடிய அளவுக்கு இந்த யூகங்களுக்கு தகுந்த சாட்சியங்கள் எதுவுமேயில்லை. அப்போது அதிகாரத்தில் இருந்த அரசனாகட்டும், மற்ற அதிகாரிகள், சிறைக்காவல் அதிகாரி மார்ஸ் ஆகட்டும் யாரும் இந்தக் கைதி இவர்தான் என்று எழுதி வைக்காமலேயே போய் விட்டனர்.

அதனால் டவுகர்தான் உண்மையாக அரச பீடத்திற்கு வாரிசு என்று சொல்லக்கூடிய ஆதாரம் எதுவுமே இல்லை.

செயின்ட் மார்ஸின் பாதுகாப்பில் டவுகர் இருந்தது 1669ஆம் ஆண்டிலிருந்து. ஆனால் மட்டியோலி சிறப்புப் பாதுகாப்பில் வைக்கப்பட்டது 1679ஆம் ஆண்டிலிருந்து. இதுதான் இருவருக்குள் இருந்த ஒரே ஒற்றுமை. இவர்களில் யாரோ ஒருவர்தான் முகமூடி அணிந்த மனிதன்.

அந்த மனிதன் யார் என்பதுதான் விடை தெரியாத வினாவாக இன்று வரை இருக்கிறது.

1838ஆம் ஆண்டு வெளியான ஓர் உண்மைக்கதை, அலெக்ஸாண்டர் டூமோஸ் என்ற பிரபல எழுத்தாளரின் கவனத்தைக் கவர்ந்தது.

‘தி கவுன்ட் ஆம் மான்டி கிரிஸ்டோ’ என்ற பெயரில் அவர் ஒரு நாவலை எழுதினார். அந்த நாவலின் கதாநாயகனும் முகமூடியுடன் சிறையில் அடைக்கப்பட்டிருந்து பிறகு மீட்கப் படுகிறான்.

ஆனால் அதற்கும் பதினான்காம் லூயி காலத்தில் நடந்த உண்மைக் கதைக்கும் சிறிதும் சம்பந்தமேயில்லை.

■

பெர்லினில் பிடித்த தீ

1933ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி 'ரெப்ஸ் டேக்' என்றழைக்கப்படும் மாபெரும் கற்கட்டடத்தில் - மேல் சபைக் கூட்டம் நடக்கும் இடம் அந்தி மாலை நேரம் - இருள் லேசாகப் பரவிக் கொண்டிருந்தது. ஜன நடமாட்டம் குறைந்து, அதிகாரிகள் எல்லாருமே வீட்டிற்குத் திரும்பி விட, காவலர்கள் கட்டடத்தின் விளக்குகளை ஒவ்வொன்றாக அணைத்துக் கொண்டு வந்தார்கள்.

கட்டடத்தின் காவல்காரன் எங்கும் காணப்படவில்லை. ஆனால் அவன் அறைக் கதவு மட்டும் திறந்திருந்தது.

இரவு மணி ஒன்பது. கட்டடம் இருந்த தெரு வழியாக நடந்து கொண்டிருந்த ஒரு மாணவன் எங்கோ கண்ணாடிகள் உடைந்து விழும் சப்தத்தைக் கேட்டான். தலை நிமிர்ந்து பார்த்தபோது, ஓங்கி உயர்ந்து நிற்கும் அக்கட்டடத்தின் முதல் மாடியில் இருந்த ஜன்னலின் கண்ணாடிகள் உடைபடுவதைக் கண்டான். யாரோ ஒருவன் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டிருந்தான். அவனது இன்னொரு கையில் எரியும் தீப்பந்தம்.

காவல் பலமாக இருக்கும் அக்கட்டடத்தினுள் அவனால் எப்படி நுழைந்து மேலே போக முடிந்தது?

அந்த மாணவன் இதையெல்லாம் யோசித்துக் கொண்டு நேரத்தைக் கடத்தவில்லை. அருகிலிருந்த காவல் நிலையத்திற்கு

ஓடிப் போய் விஷயத்தைக் கூறினான். தன் மேலதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிப்பதற்கு முன் அவன் கூறிய விஷயங்கள் உண்மைதானா என்று அறிய அந்த அதிகாரி ஓடிப் போய் கட்டடத்தை நிமிர்ந்து பார்த்தபோது உடைந்த கண்ணாடி ஜன்னலும் உள்ளே எரிந்த நெருப்பும் அவருக்குத் தெரிந்தது.

அவர் பெயர் கார்ல் புவெர்ட்.

நெருப்பு ஓரிடத்தில் மட்டும் எரியவில்லை. பல இடங்களில் நன்கு கொழுந்து விட்டு எரிந்தது. காவல்காரரான அவர் ஓடிப் போய் போலீஸ் அதிகாரிகளுக்கும், சர்க்கார் அதிகாரிகளுக்கும் தகவல் கொடுக்க, சில நிமிடங்களில் அங்கே தீயணைக்கும் படையினர் வந்து சேர்ந்து பயங்கரமாகப் பரவி விட்ட தீயை அணைக்கத் தொடங்கினர்.

போலீஸ்காரர்களும், கட்டடக் காவல்காரர்கள் பலரும் எல்லா இடங்களுக்கும் ஓடி, தீயணைப்பு வீரர்கள் எளிதாக உள்ளே நுழைய ஏதுவாக இருக்க, அறை வாயில் கதவுகளைத் திறந்து விட்டனர்.

மாணவன் வந்து சொன்ன பிறகு, தீயணைப்பு நபர்கள் உள்ளே நுழைய ஏறக்குறைய பத்தொன்பது நிமிடங்கள் ஆயின.

கூட்டம் நடக்கும் பெரிய ஹாலில்தான் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. திரைச் சீலைகளில் நெருப்புப் பற்றிக் கொண்டதால் தீ வேகமாகப் பரவியது.

தட்டெழுத்துக்காரர் மேஜை, இதர பணியாளர்களின் மேஜை அவற்றின் மீது இருந்த ரிகார்டுகள் போன்றவை நன்றாகவே எரியத் தொடங்கின. நன்றாக எரியும் இந்தத் தீ எதிர்பாராத விதமாகப் பற்றிக் கொண்டதன்று. யாரோ திட்டமிட்டு செய்த சதியே எனக் கருதப்பட்டது. இந்தச் சதிக்குப் பின்னால் ஒரு நபர் இருக்கலாம் அல்லது பல நபர்கள் இருக்கலாம்; நிச்சயமாகச் சொல்ல முடியாது.

இவ்வளவு பெரிய கட்டடத்திற்கு நெருப்பு வைப்பதென்றால் அது சாதாரண விஷயமா?

இரவு சரியாக ஒன்பது மணி இருபத்தைந்து நிமிடங்களுக்கு கான்ஸ்டேபிள் ஹெல்மெட் போயசெல், கட்டடக் கண்காணிப்பாளர் அலெக்சாண்டர் ஸ்கேரோனாவிச் ஆகிய இருவரும் கட்டடத்தினுள் நுழைந்து என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருந்தனர். நெருப்பை அணைப்பதைத் தவிர வேறெந்த வேலையும் அவர்களுக்கில்லை.

அவர்கள் வியப்போடு சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டிருந்த போது, உடம்பில் சட்டையில்லாமல் அழுக்கடைந்து, தலை கலைந்து, புகை படிந்த முகத்தினனாக ஒரு வாலிபன் அவர்கள் இருவரையும் கடந்து மெதுவாக நடந்து சென்றான்.

அவனைப் பார்த்த அந்த இரு அதிகாரிகளும் சப்தம் போட்டு அதட்ட, அந்த வாலிபன் அங்கேயே நின்று விட்டான். கைகளை மேலே தூக்கினான். அவன் எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டாததால் அவனை அவர்கள் நன்றாக சோதனையிட்டனர்.

அவனிடம் ஏதாவது பயங்கர ஆயுதங்கள் இருக்குமோ என்கிற பயம், அவர்களை ஜாக்கிரதையாக இருக்கச் செய்தது.

அவனது பையில் ஒரு சிறு கத்தியும், ஒரு பர்ஸும், டச்சு பாஸ்போர்ட் ஒன்றும் இருந்தன.

1909ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் தேதி லெய்டனில் பிறந்த அவன் பெயர் மாரினாஸ் வேன்டர் லூபே என்பதாகும். லூபே தான் குற்றவாளி என்பது அவர்களுக்கு உடனே தெரிந்த விஷயம்.

''ஏன் இந்தக் கொடுமையைச் செய்தாய்?''

''என் எதிர்ப்பைக் காட்டுவதற்கு!'' என்பதுதான் அவன் பதில்.

அவனை, அவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அதற்குள் அங்கே 15 தீயணைப்பு வண்டிகளும்

60 தண்ணீர் டேங்கர் வண்டிகளும் சகல சாதனங்களுடன் வந்து சேர்ந்தன.

ஒரு மணி நேரத்தில் நெருப்பை ஒரு மாதிரியாக அணைத்தும் விட்டார்கள்.

கட்டடம் காப்பாற்றப்பட்டாலும் மேல் சபை கூடும் இடம் பாழாகிப் போய் விட்டது. வெடித்துச் சிதறிய கண்ணாடி துண்டுகள் எல்லா இடங்களிலும் பரவிக் கிடந்தன.

அந்த நேரத்தில் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற ஹெர்மன் கோயரிங், தேசிய சோஷியலிஸ்ட் கட்சியின் தலைவரும் ஜெர்மனியின் சேன்சலராக பதவியேற்றவருமான அடால்ப் ஹிட்லருடன் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது தான் மேல் சபை இயங்கும் கட்டடத்தில் நெருப்பு பிடித்த செய்தி அவர்கள் காதுகளுக்கு எட்டியது. விருந்திலிருந்து பாதியில் விலகிய ஹெர்மன் மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சம்பவ இடத்திற்கு விரைந்தார். அங்கே அதற்கு முன் வந்துவிட்ட பத்திரிகை நிருபர்கள் கோயரிங்கிடம் யார் நெருப்பு வைத்திருப்பார்கள் என்ற கேள்வியை எழுப்பினார்கள். கொஞ்சமும் யோசிக்காமல் அவர் சொன்னார்:

''இந்த நெருப்பை வைத்ததே கம்யூனிஸ்ட்கள்தான். ஏனெனில் ஜெர்மானியர்கள், இந்த கம்யூனிஸ்ட்களின் ஆதிக்கத்தை அடக்க பல்வேறு வழிகளைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள்'' என்றார்.

''புதிய சர்க்காருக்கு எதிராக கம்யூனிஸ்ட்கள் செய்த சதிதான் இது'' என்று அவர் தொடர்ந்தபோது ''ஒருவனைத் தானே கைது செய்திருக்கிறார்கள்?'' என்று நிருபர் ஒருவர் கேட்டார்.

''அவனுக்குப் பின்னால் அநேகர் இருக்கிறார்கள். இது கம்யூனிஸத்தின் எழுச்சியைக் காட்டுகிறது'' என்றார் அமைச்சர்.

''இவ்வளவு பாதுகாப்பான கட்டடத்தினுள் அவர்கள் எப்படி புகுந்திருக்க முடியும்?'' இன்னொரு நிருபர் கேட்ட கேள்வி இது.

''கட்டடத்தின் கீழ் ஒரு சுரங்கப்பாதை இருக்கிறது. அங்கேயிருந்து போலி வார்டுக்கும், ரெய்ஸ் டேக்குக்கும் தொடர்பு வழி இருப்பதால் அதன் வழியாக வந்திருக்க சந்தர்ப்பம் இருக்கிறது. ஏறக்குறைய நாலாயிரம் சிவப்புச் சட்டைக்காரர்கள் படையை விரைவில் பிடித்து தண்டிப்பேன்'' என அமைச்சர் அப்போதே சபதம் செய்து கொண்டார்.

இவர் அவசரப்பட்டு நிருபர்களிடம் சொன்ன தகவல்கள் நாஜிகள் வட்டாரத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

ஜெர்மனியில் கம்யூனிஸ்ட் கட்சி என்பது நோஞ்சானாகத்தான் இருக்கிறது. கம்யூனிஸ்ட்கள் தைரியமாக வந்து இந்தக் காரியத்தைச் செய்திருக்க முடியும் என்பதை ஜீரணிக்கவே முடியவில்லை என்றார்கள் பல முக்கியஸ்தர்கள்.

இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் மாளிகையின் சுரங்கப்பாதை முற்றிலும் உள்துறை அமைச்சரும் அவர் கீழுள்ள போலீஸ்காரர்களும் மட்டுமே வரத்தான் இருந்தது. ஏதாவது காரணத்தோடு நாஜிகளாவது உள்ளே நுழைய முடியும். ஆனால் கம்யூனிஸ்ட்கள் நிச்சயமாக உள்ளே நுழையவே முடியாது.

நாஜிகள் இந்த நாச வேலையைச் செய்திருப்பார்கள் என்பதற்கு நிறைய காரணங்கள் இருந்தன.

தங்களின் பரம விரோதிகளான கம்யூனிஸ்ட்களைப் பூண்டுடன் அழிக்க வேண்டும் என்கிற எண்ணம் நாஜிகளுக்கு.

இதைத்தானே கோயரிங் தன் தேர்தல் பிரசாரமாகவே பயன்படுத்தினார்?

''சரியான நேரத்தில் தகுந்த காரணங்களை வைத்து அவர்களை ஒழிப்பேன்'' என்று கோயரிங் சொல்லவில்லையா? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

மறுநாள் காலையில் பாதி எரிந்த நிலையில் காணப்பட்ட தன் அலுவலகத்திற்கு வந்த கோயரிங் பழைய தலைவரான ஹிண்டன்

பர்க்கைச் சந்தித்து, ''நாஜிகளுக்கு கம்யூனிஸத்தை ஒழிக்க முழு அதிகாரம் தேவைப்படுகிறது'' என்றார்.

பேச்சுரிமை, எழுத்துரிமை, அடிப்படை சுதந்தரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி அவர்கள் ஓரிடத்தில் கூடுவதையோ, மீட்டிங் போடுவதையோ தடுக்க வேண்டும். கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக உபயோகப்படுத்த அதிகாரம் தேவை என்பதை கோயரிங் வலியுறுத்தினார்.

இன்னும் கூடவே சில உத்தரவுகளும் பிறப்பிக்க ஏற்பாடு செய்து கொண்டார். என்ன அவை?

தபாலில் அவர்களுக்கு வரும் கடிதங்களை ரகசியமாகப் பிரித்துப் பார்ப்பது; அவர்களது வீட்டைச் சோதனையிடுவது; அவர்களது சொத்துகளை பறிமுதல் செய்வது போன்றவைதான் அவை.

பல கம்யூனிஸ்ட்கள் இந்த உத்தரவுகளால் கைது செய்யப்பட்டாலும் சில குரல்கள் வேறு விதமாக எழத்தான் செய்தன.

''தீ வைத்தவர் யார்?'' என்பதற்கான உண்மையாக காரணகர்த்தாக்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும். அதன் மூலம் மனித உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களது வேண்டுகோளும் நியாயமானதுதான்.

இந்த சமயத்தில் பாரிஸ் நகரிலிருந்து சர்வதேச கம்யூனிஸ்ட்கள் சார்பில் ஓர் அறிக்கை 'தி பிரௌன் புக்' (The Brown Book) என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

அப்புத்தகத்தில் நாஜிகள் எவ்வாறு தங்கள் சொந்த அரசு கட்டடத்திற்குத் தீ வைத்திருப்பார்கள் என்பதை ஆராயப் பட்டிருந்தது.

அந்தப் புத்தகத்தின் ஆசிரியர்கள் இவ்வாறு குற்றம் சாட்டுவதற்கு எந்தவிதமான ஆதாரங்களோ கண்ணால் பார்த்த காட்சிகளோ இல்லை. அதனால் கோயரிங் மற்றும் உயர்தர அதிகாரிகள் மீது சந்தேகப்பட சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

அந்தப் புத்தகம் சர்வதேச அளவில் உள்ள அரசியல்வாதிகளைக் குழப்பிவிட்டதே தவிர, உருப்படியான வேறு காரியம் எதையும் செய்யவில்லை. இதனால் புதிய சக்தியைப் பெற்ற கோயரிங் தன் திட்டங்களை மிகவும் தீவிரமாக நிறைவேற்றத் தொடங்கினார்.

''எந்த விதமான பொய்ப் புகார்களும் பேச்சுகளும் என் நடவடிக்கைகளைத் தடுக்க முடியாது. ஜெர்மனி மக்களுக்கு என்னால் முயன்றவரை உழைப்பேன். அவர்களுக்காக நான் பாடுபட்டுக் கொண்டேயிருப்பேன்'' என்றார் கோயரிங்.

மார்ச் 22ஆம் தேதி. தீ வைத்ததாகக் கைது செய்யப்பட்ட வாலிபன் வேன்டர் லூபே கைது செய்யப்பட்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டான். மாஜிஸ்திரேட் தன் முதல் அறிக்கையில் சொன்னதாவது:

''இந்த டச்சு கம்யூனிஸ்ட் வாலிபன் லூபேவுக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட்களுடன் மட்டுமல்லாமல், பிற அயல் நாட்டு கம்யூனிஸ்ட்களுடனும் தொடர்பிருக்கிறது.''

ஜெர்மன் கம்யூனிஸ்ட்களின் பார்லிமெண்ட் தலைவனான எர்னஸ்ட் டிரால்கர் என்பவனுடன் இரண்டு பல்கேரியப் பிரஜைகளும் லூபேவுடன் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

லிபெக், பெர்லின் ஆகிய நகரங்களில் செப்டம்பர் 21 முதல் டிசம்பர் 23ஆம் தேதி வரை விசாரணை நடந்தது. இதில் ஜெர்மனியர்களுக்கு சங்கடம் தந்த விஷயம் என்னவென்றால், விசாரணையில் ஜெர்மன் கம்யூனிஸ்ட்களுக்கும் இந்தத் தீ விபத்துக்கும் சம்பந்தமேயில்லை என்கிற முடிவுதான். இதற்காக கைது செய்யப்பட்ட யார் மீதும் திட்டவட்டமாக குற்றஞ்சாட்ட

எந்தவிதமான சாட்சியமும் இல்லை. 'செய்திருக்கலாம்' என்கிற யூகத்தின் அடிப்படையில் கைது செய்தால் அது எவ்வாறு நிரூபணமாகும்?

நீதி விசாரணையின்போது கேட்ட குறுக்குக் கேள்விகளால், கோயரிங் பதில் அளிக்கவே தடுமாறினார் என்பது புதிய தகவல்.

பல்கேரியன் பிரதிநிதி கோர்ட்டில் கேள்வி மேல் கேள்விகள் கேட்டபோது, கோயரிங் அவரைக் கோபத்தோடு கொன்று விடுவதாக மிரட்டினார்.

இதன் காரணமாக வழக்கின் அடிப்படையே ஆட்டம் காணத் தொடங்கி விட்டது.

இதில் தெளிவான விஷயம் உண்டென்றால் அது லூபேயின் வாக்குமூலம்தான்.

தான் தான் கட்டடத்திற்கு நெருப்பு வைத்ததாகச் சொன்ன அவன், வழக்கு முடியும் வரை தன் வாக்குமூலத்தை மாற்றிக் கொள்ளவேயில்லை.

தன்னை யாரும் தூண்டவில்லையென்றும், தனிப்பட்ட முறையில் தான் எடுத்த நடவடிக்கைதான் இது என்றும் அவன் திரும்பத் திரும்பச் சொன்னான்.

அவன் மிக மெதுவான தோரணையில் நிறுத்தி, நிதானமாக தான் வைத்த நெருப்பைப் பற்றி கோர்ட்டில் சொன்னதைக் கேட்டு முக்கியஸ்தர்கள் நம்ப முடியாமல் திகைத்தார்கள். ஒருவனே இதைச் செய்தான் என்றால் யார்தான் நம்புவார்கள்?

லூபேயைப் பற்றி விசாரணை நடத்தியபோது கிடைத்த தகவல்களை வைத்துப் பார்த்தால், அவனால் இந்த அளவுக்குச் செய்ய முடியுமா என்கிற எண்ணம் எழத்தான் செய்கிறது.

இளம் வயதிலேயே ஏற்பட்ட விபத்தொன்றினால் அவனது கண் பார்வையில் கோளாறு ஏற்பட்டிருந்தது. தட்டுத் தடுமாறிக் கொண்டுதான் அவன் நடந்தான்.

குறுக்கு விசாரணையின்போது சம்பந்தமேயில்லாத வகையிலும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத போக்கிலும் குழந்தைத்தனமாகவும் பதில் சொன்னான்.

''யாருடைய தூண்டுதலின் பேரில் நீ தீ வைத்தாய்?'' என்று கேட்டபோது, சில நிமிடங்கள் யோசித்தபின் சொன்னான்.

''என் உடலுக்குள்ளிலிருந்து ஒலித்த குரலின் கட்டளையினால் இந்த வேலையைச் செய்தேன்'' என்றான்.

கட்சி ரீதியாகப் பார்த்தால் அவனுடைய நடவடிக்கைகளுக்கும் கட்சியின் - அதாவது கம்யூனிஸ்ட் கட்சியின் - கோட்பாடு களுக்கும் சம்பந்தமேயில்லாதது போல் தோன்றியது. தனக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதற்கான ஆதாரங்களையும் அவனால் கொடுக்க முடியவில்லை.

டச்சு கம்யூனிஸ்ட் கட்சியில் தன் பதினாறாவது வயதில் அவன் சேர்ந்ததாக மட்டும் தகவல் கிடைத்தது.

கோர்ட், அவன் சார்பில் வாதாட ஒரு வக்கீலை நியமித்தது. அந்த வக்கீலாலும் லூபேயிடமிருந்து எந்தவிதமான முக்கிய தகவலையும் சேகரிக்க முடியவில்லை.

தீ வைத்ததற்கு தான்தான் காரணம் என்று தீர்க்கமாக ஒப்புக் கொள்ளும் அவன், எதனால் இந்த வேலையைச் செய்தான் என்பதற்கான காரணத்தைச் சொல்லாமல் உளறினான்.

புரட்சிகரமான சிந்தனைகள் எதுவும் அவனிடமில்லை. சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளும் அவனிடம் உண்மையை வரவழைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார்கள்.

பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி இரவு என்ன நடந்தது என்பதைப் பற்றி போலீஸார் துருவித் துருவிக் கேட்டபோது அவர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் பதிலைச் சொன்ன அவன், யார் கூட்டு, யார் தூண்டுதல் என்கிற கேள்விகளுக்கு மட்டும் உளறத் தொடங்கினான்; தடுமாறினான்.

இப்படிப்பட்ட ஓர் இளைஞன் தானாக இவ்வளவு பயங்கர மான வேலையை தனியாளாகச் செய்திருப்பான் என்பதைத்தான் யாராலும் நம்ப முடியவில்லை.

எந்த முடிவுக்குமே வர முடியாத கோர்ட், லூபேவுடன் கைது செய்யப்பட்ட வெளிநாட்டு கம்யூனிஸ்ட்களை விடுதலை செய்து நாடு கடத்தியது.

தீ வைத்ததற்குத் தான்தான் காரணம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்த லூபே தூக்குமேடைக்கு அனுப்பப் பட்டான்.

1934ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் தேதி தூக்கிலிடப் பட்டான்.

சட்ட ரீதியாக அவன்தான் குற்றவாளி என்று தீர்மானித்து, அவனுக்குத் தூக்கு தண்டனை விதித்து அதை நிறைவேற்றிய பிறகும், ஜெர்மனியில் இந்தத் தீ விபத்து பற்றிய சர்ச்சைகள் அடங்கவேயில்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நூரன்பெர்க் போர்க் குற்றவாளிகள் தண்டனையடைந்தபோது, அவர்கள் எல்லாரும் ஒருமனதாக இந்தத் தீ விபத்து சதிக்குப் பின்னால் கோயரிங் இருந்திருக்கிறார் என்றார்கள்.

1942ஆம் ஆண்டு ஹிட்லருக்கு ஒரு மாபெரும் விருந்து கொடுத்தபோது, அங்கேயிருந்த உள்துறை அதிகாரி ஜெனரல் பிரான்ஸ் ஹால்டர், 'இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசிய கோயரிங் தீ விபத்தில் தனக்கிருந்த பங்கைப் பற்றிப் பேசினார்' என்று சொன்னார்.

எப்படி?

1933ஆம் ஆண்டு நடந்த இந்த துக்க கரமான சம்பவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது குறுக்கிட்ட கோயரிங் ''ரெப்ஸ்டேக் தீ விபத்தைப் பற்றிய விவரங்கள் எல்லாமே

எனக்குத் தெரியும். ஏனெனில் அந்த நெருப்பை வைத்ததே நான்தான்'' என்று கொக்கரித்தார்.

அப்போது கூட கோயரிங் உண்மையைத்தான் சொல்கிறாரா அல்லது தனக்குப் பெருமை கிடைக்க வேண்டி இப்படிப் பேசுகிறாரா என்கிற முடிவுக்கு வர முடியவில்லை.

ஒரு விஷயத்தை எல்லாரும் ஏகமானதாக ஒப்புக் கொள் கிறார்கள்.

ரெப்ஸ்டேக் தீ விபத்து, நாஜிகள் அரசாட்சியில் கால் ஊன்ற ஒரு திருப்புமுனையாக இருந்ததென்னவோ மறுக்க முடியாத உண்மை.

■ ■ ■



சங்கரசாய்
பதிப்பக வெளியீடு